ரிஜிஸ்டர் நெ. M. 2992. "PURATCHI" தனிப்பிரதி விலை ஒரு அணா

# புரட்சி

ஞாயிறுதோறும் வெளிவரும்.

ஆசிரியர்:— ஈ. வெ. கிருஷ்ணசாமி.

மாலை 1. | ஈரோடு, ஸ்ரீமுக-ஹூ தை-மீ 15-உ (28—1—1934) | மலர் 10.

## ஏன் சுயமரியாதை இயக்கத்தில் சேரவேண்டும்?

1. அது ஒன்றேதான் மக்கள் சமூகவாழ்வில் ஒருவருக்கொருவர் எவ்வித உயர்வு தாழ்வும் இருக்கக்கூடாது என்ற சமதர்மத்துக்கு போராடுகின்றது.

2. அது ஒன்றேதான் மனிதசமூகம் பொருளாதாரத்தன்மையில் ஒருவருக்கொருவர் பணக்காரன் ஏழை என்கின்ற வித்தியாசம் இல்லாமல் எல்லாப் பொருளும், பூமியும் எல்லோருக்கும் சரிசமமாய் இருக்கவேண்டும் என்ற சமதர்மத்துக்குப் போராடுகின்றது.

3. அது ஒன்றேதான் மனிதசமூகத்தில் ஆணுக்கும், பெண்ணுக்கும் எவ்வித வித்தியாசமும் இல்லாமல் சகல துறைகளிலும் சரிசமத்துவம் இருக்கவேண்டும் என்ற சமதர்மத்துக்குப் போராடுகின்றது.

4. அது ஒன்றேதான் மனிதசமூகத்தில் ஜாதி, மதம், வருணம், தேசம், கடவுள் ஆகிய அபிமானங்களை அறவே ஒழித்து உலக மனித சமூக தோழமை வேண்டும் என்ற சமதர்மத்திற்குப் போராடுகின்றது.

5. அது ஒன்றேதான் உலகில் உழைப்பாளி, முதலாளி என்பது போன்ற பிரிவினையே இல்லாமல் சகல தேவைகளுக்கும், சகல மனிதர்களும் சரிசமமாகப் பாடுபட்டு அவற்றின் பயனை எல்லோரும் சரிசமமாக அனுபவிக்க வேண்டும் என்ற சமதர்மத்துக்குப் போராடுகின்றது.

6. அது ஒன்றேதான் ஒவ்வொரு மனிதனும் எவற்றிற்கும் எவ்விதத்தும் அடிமையாகாமல் அவனவன் அறிவு, ஆராய்ச்சி, அனுபவம் ஆகியவைகளுக்கு இணங்கி நடக்க சர்வ சுதந்திரம் இருக்கவேண்டும் என்ற சமதர்மத்துக்குப்போராடுகின்றது.

காந்தியத்தை ஒழிப்பது வர்ணாச்சிரமத்தை ஒழிப்பதாகும்.

காந்தியார் பணக்காரத் தரகர்.

காந்தியார் பார்ப்பனரின் கையாள்.

"ஹரிஜன" சேவை வர்ணாச்சிரமத்தின் வேறு வேஷம்.

கதர் பொருளாதார புரட்சிக்கு முட்டுக்கட்டை.

தேசீயம் என்பது முதலாளிகளின் சூழ்ச்சி.


# கத்தோலிக்கர்களின் வண்கூச்சல்.

இந்நூலில் கத்தோலிக்க மதப்பிரசாரத்தின் மடமையையும், மேனுட்டில் கத்தோலிக் மதத்தின் ஆபத்தான நிலையையும் அமெரிக்க நாஸ்திக அபிவிருத்தி சங்கத்தார போப்பிற்கு எழுதியுள்ள ஓர் கடிதமும் போப்வித்த அறிக்கையும் ஆராய்ந்து எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. விலை 0—0—6,

நூறு புத்தகங்களுக்குக் குறையாது ஆர்டர் செய்தால் தபாற் செலவுடன் ரூ. 1—8—0. 500க்கு தபால் செலவுடன் ரூ. 5—0—0.

விலாசம்:—

குடி அரசுப்பதிப்பகம், ஈரோடு.



உயர்ந்த முறையில் தயாரித்தவை. பரம்பரை வைத்திய சந்ததியினுதித்தவரென்றும், சமஸ்தானவைத்திய நிபுணரென்றும் பழனியில் கியாதி வாய்ந்திருப்பதை நீங்கள் அறியீர்களா? எமது மருந்துகளில் ஒப்புயர்வற்றது.

## மகா வீரிய

# தங்கபஸ்பம்.

வெள்ளை, வெட்டை, கடுப்பு, பவுத்திரம், மூலம், நீரழிவு, க்ஷயம், இருமல், குன்மம், சூலை முதலிய சகல கொடிய வியாதிகளும் நீங்கும்.

அழிந்துபோன ஆண்மையையும், இழந்த பலத்தையும், இல்லற வாழ்வில் இன்பத்தையும் கொடுத்து, ஊக்கத்தையும், உற்சாகத்தையும் தந்து தளர்ந்த நரம்புகளைக் கெட்டிப்படுத்தி, வயோதிகரை வாலிபராக்கி சதா பரமானந்தத்தைக் கொடுக்கக்கூடிய அபூர்வசக்தி இதற்கிருப்பதால் இதன் அரிய குணத்தைக்கண்டு ஆச்சரியப்படாதவர்கள் ஒருவருமில்லை. ஒருமுறை உபயோகித்துப்பாருங்கள்.

24-நாள் பஸ்பம் விலை ரூ. 10.

## சர்வபடை நிவாரணி.

சகல மேகபடை, ஊரல், படர்தாமரை இவைகள் ஒரே நாளில் உதிர்ந்துவிடும். புட்டி 1க்கு 0—8—0.

அ... டார் முன்பணம் அனுப்பவேண்டும்.

...மி வைத்தியசாலை, பழனி.

## சாலாமிசிரி லேகியம்

(ரிஜிஸ்டர்டு)

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

மிகுந்த பலத்தையும், வீரிய விருத்தியையும் உண்டாக்கும்.

இந்த லேகியத்தால் குணமாகும் நோய்கள்.

கை கால் அசதி
இடுப்புவலி
பலக்குறைவு
ஆயாசம்
நரம்புத்தளர்ச்சி
சொர்ப்பனஸ்கலிதம்

சம்போக காலத்திலேற்படும் துரிதஸ்கலிதம் முதலியவைகளை நீக்கும்.

ஆண் தன்மைமை அதிகரிக்கச் செய்யும். தளர்ந்த நரம்பைக்கெட்டிப்படுத்தும். வீரியத்தை விருத்தி செய்யும்

திடசரீரத்தைஉண்டாக்கும். மனதிற்கு உற்சாகத்தைக் கொடுக்கும். எவ்வளவுகடினவேலை செய்தாலும் யாதொருகளைப்பும் உண்டாகாது. சுக்கிலத்தை ஸ்தம்பனம் செய்யும். சம்போக இன்பத்தை முற்றிலும் அனுபவிக்கச்செய்யும். சாப்பிட மதுரமுள்ளது.

ஆண், பெண், சிறுவர், வயோதிகர் யாவரும் சாப்பிடலாம். பத்தியமில்லை,

1-சேர் டப்பி ரூ. 2-8-0

பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும். விலாசம் தெரிவித்தால் கேட்லாக் அனுப்பப்படும். கமிஷன் ஏஜண்டுகள் தேவை

டி. சி. சிங்காரம் அண் கோ.,

சித்த-ஆயுர்வேத வைத்தியசாலை,

தேப்பக்குளம் போஸ்ட், திருச்சி.

## விவாக விடுதலை.

(இந்து மனைவியருக்கு இன்றியமையாதது)

ஆசிரியர்:

சே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ. பி. எல்.

ஆராய்ச்சி நிரம்பிய இந்த அரிய நூல் ஒவ்வொரு மாதர் கையிலும், சீர்திருத்தக்காரர் சமதர்மி கையிலும் இன்றியமையாமல் இருக்க வேண்டியது. "'விவாக விடுதலை' என்னும் வேரின்றி மாதர் சுதந்தரம் என்னும் மரம் இல்லை" என்பது எவ்வாறெனஅறிய விரும்பின் இந்நூலை இன்றே படித்தல் வேண்டும்.

விலை அணா 4.

கிடைக்கும் இடம்:—

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

எஸ். தங்கவேலு,

கீழ ஆண்டார் வீதி, தெப்பக்குளம், திருச்சி.

## "தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தளராதுழைப்பவன் தமிழன். வெட்டொன்று துண்டு இரண்டான அபிப்பிராயங்கள் அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அரிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.

உள் நாடு ரூ. 3—0—0.
வெளிநாடு ரூ. 5—0—0.

விலாசம்:—

மானேஜர், "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,
காலார் தங்கவயல்.

# தமிழன்பர் மகாநாடும், கடவுள் வாழ்த்தும்.

(கைவல்யம்)

இலக்கியத்திலும், அறிவு நூல்களிலும் பகுத்தறிவிற்கு ஒத்துவராத கடவுள் வாழ்த்து கூடாது என்கிற தீர்மானத்தை தமிழ் அன்பர் மகாநாட்டில் தோழர் குருசாமி கொண்டுவந்தார். அது தலைவரால் அங்கீகரிக்கப்படவில்லை என்று பத்திரிகைகளில் படித்தேன்.

நமது இரத்தம், தசை, எலும்பு, முதலியவைகளின் உள்ளில் கடவுள் வாழ்த்து நுழைந்திருப்பதாலும், நமது உலகபயத்தாலும், பிரமையாலும் படித்தவர்கள்கூட அந்த தீர்மானத்திற்குப் பயந்தார்கள். அதிலும் நமது நாட்டில் உண்மை கண்டவர்களிடமிருந்துகூட உண்மைக்குப் பரிந்து பேசும் குணம் அபூர்வமாகும் உண்மைக்குப் பரிந்து பேசுகிறவர்களை உபத்திரப்படுத்துவதே நமது நாட்டின் வழக்கம்; அதனாலேயே நமது நாடும் கெட்டு ஜன சமூகத்திற்கும் ஆலோசனை குறைந்து போயிற்று.

கடவுள உண்டா? இல்லையா? என்பதல்ல இங்குவிவகாரம் அறிவு. நூல்களில் கடவுள் வாழ்த்து கூடாதென்பதேயாகும். அதைப்பற்றி இந்த வியாசத்தில் சுருக்கமாக ஆலோசிப்போம். அறிவு நூல்களிலும் இலக்கியங்களிலும் கடவுள் வாழ்த்து அவசியம் வேண்டுமென்கிற படித்தவர்களோ பக்தர்களோ சொல்லும் நியாயங்களையும் தெரிந்து கொள்வோம்.

பகுத்தறிவிற்கு முறணான கடவுளுக்கு வாழ்த்து வேண்டாமென்று தீர்மானமிருப்பதினால் எங்களுக்கு ஆட்சேபணையில்லை என்றும் இலக்கியத்தில் கடவுள் வாழ்த்து வேண்டுமென்றும் சிலர் சொன்னார்களாம் நமது இந்து சமயவாழ்க்கையின் ஏற்பாட்டில், வழக்க பழக்கங்களில், சாஸ்திரத்தில் வருகிற கடவுள்களெல்லாம் பகுத்தறிவிற்கு முறணான கடவுளாகவே யிருக்கிறது முறணில்லாத கடவுள் ஒன்று இந்து சமய உயர்ந்த ஏட்டில் இருப்பதாகச் சொல்லி முறண்பட்ட கடவுளையே காட்டுகிறார்கள். அந்த முறணில்லாத கடவுளிருக்கும் ஏட்டையும் பார்ப்பார்கள் படிக்கலாம் மற்றவர்கள் படிக்கப் படாதென்றும் சொல்லுகிறார்கள். முறணில்லாத கடவுள் தமிழ் ஏட்டிலிருப்பதாகச் சொன்னால் அந்தக் கடவுள் ஒத்துக்கொள்ளப் படாததென்றும் பிரஷ்டென்றும் சொல்லுகிறார்கள்.

அறிவு யெல்லாருக்கும் பொது. ஒருவருக்கே உரியதன்று. ஆண்களும் பெண்களும் பணக்காரனும் ஏழையும் அறிவைப் பெறவேண்டுமென்று சொன்ன தமிழ் அன்பர் மகாநாட்டுத் திறப்பாளர் ராஜா சர். அண்ணாமலை செட்டியார் கலாசாலையில் முறணில்லாத கடவுளுக்கும் ஏட்டைச் சொல்லிக் கொடுக்கும் வகுப்பில் பார்ப்பாரபிள்ளைகள் தவிர மற்ற பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்ளுவதில்லை. சபையில் உண்மையை உலகம் தெரியப் பேசிவிட்டார், நீதியும், நியாயமும் பெரியவர்களிடமிருக்கவேண்டு மென்பதைதன் பள்ளியிலும் நித்திய அனுபோகத்திலும் மறந்துவிட்டார். தமிஷ்பாஷையோ சூத்திரபாஷை சூத்திரனோ அடிமை; பார்ப்பார தாசிமகன்,ஒழுக்கம் கெட்டவன்: ஆசாரமில்லாதவன். சூத்திர பாஷைக்கும் சூத்திரனுக்கும் முறணாக கடவுள் இருக்கவேண்டுமென்பதுதானே வேதவிதி? அதுஏன் என்று கேட்டவனைத் தானே நாஸ்திகனென்று வேதம் சொல்லச் சொல்லுகிறது. அந்த வேதத்தைத்தானே சிவபெருமான் அங்கமாக அணிந்திருக்கிறார் என்று சைவ சமயாச்சாரிகள் சொல்லுகிறார்கள். இதையெல்லாம் ஆதாரமாக வைத்துக் கொண்டுதானே ராஜா செட்டியார் காலசாலையில் பார்ப்பாரல்லாத பிள்ளைகளுக்குக் கந்தபுராணமும் கம்பராமாயணமும் கற்றுக் கொடுப்பதுமல்லாமல் வடமொழியில் பார்வதி மோசம்போனகாதாம் பரிக்கதையையும் கற்றுக் கொடுக்கிறார்கள் இதிலெல்லாம் முறணில்லாத கடவுளைக்காணோமே.

இராமர் வதிஷ்டரை முறணில்லாத கடவுள் எதுவென்று கேட்டார். இராமர் அந்த கடவுள் ஏதென்று கேட்பாயாகில் "கேவலமே அரனல்ல அரியல்ல பூதஉடல் கிடைத்தல்ல ஒருமனமற்று அடியும் முடியுமிலாத உணர்வே தெய்வம்"என்றார். அந்த உணர்வைத்தான் பகுத்தறிவென்றும், சிந்தனை சக்தியென்றும் சொல்லுவது அதனால் பகுத்தறிவிற்கு முறணில்லாத கடவுள் பகுத்தறிவென்றேற்பட்டது இது இராமர் கேட்டது. வதிஷ்டர் சொன்னது. இராமரும் வதிஷ்டரும் இந்து சாஸ்திரத்திற்கு முக்கியமானவர்கள் அல்லவா?

எந்தக்கடவுளாயிருந்தாலும் அந்த இந்துக்கடவுள்களின் வாழ்த்துக்களெல்லாம் மனிதனை மனிதன் அடிமை கொள்ளச்செய்தது. ஜன சமூகத்தின் ஒரு பகுதியை மிதித்துக் கசக்கி வரியோராக்கி இழிவடையச் செய்துவிட்டது. ஒரு பகுதியை ஒன்றரைவயிர்உண்டு வயிர்பெருத்து சோம்பலாக்கி ஒன்றுக்கு முதவாமல் திண்ணையில் புரளச்செய்தது. ஒரு பகுதியை அரைவயிற்றுக்குக்கூடக் கஞ்சியில்லாமல் வயரொட்டி வாடி வதங்கி பாடுபடச்சக்தி இல்லாமல் செய்துவிட்டது. கடவுள் குடியிருப்பென்றும், கும்பாபிஷேகமென்றும், வந்தன வழிபாடென்றும் சொல்லி அநேகரை ஏழைகளாக்கிவிட்டது. தஞ்சாவூர் கோட்டையையும் விஜயநகர சாம்ராஜ்யத்தையும் இடித்துவிட்டது. நமது நாட்டில் மகமது கஜ்னிபடை எடுப்பிலிருந்து ஜப்பான் அரிசி வந்திருப்பது வரையிலுமுள்ள கடவுள் வாழ்த்துகளெல்லாம் பகையையும், ஒற்றுமைக் குறைவையும், அறியாமையையும் உண்டாக்கினதே யல்லாமல் ஒரு பயனையும் செய்யவில்லை. இவைகளையெல்லாம் ஆலோசித்துப்போனது போகட்டும். இப்பொழுது மொழிபெயர்க்கும் அறிவு நூல்களில் அக்கடவுள் வாழ்த்துவந்து அதையும் உபயோகமில்லாதபடி கெடுத்துவிடாமலிருப்பதற்கே கடவுள் வாழ்த்து இருக்கக்கூடாது என்கிற தீர்மானத்தை தோழர் குருசாமி கொண்டுவந்தார். தோழர் ராமநாதன் ஆமோதித்தார். அது தடுக்கப்பட்டது. தடுக்கப்பட்டதற்கு உண்மையும் நியாயமுமில்லை. நமது கடவுளை உலகப் பொதுக் கடவுளாகப் பார்ப்பவர்களுக்குத்தான் அதனுண்மை விளங்கும். நமது கடவுளைத் தனிக் கடவுளாக வைத்துப் பார்த்துப் பார்த்துத்தான் நமக்கு அறிவுநூல் மொழிபெயர்க்கும் நிலைவந்தது.

கடவுள் வேதம் சொன்னார். அதற்குப் பின் ரிஷிகளைக்கொண்டு ஸ்மிருதிகள் சொல்லச் சொன்னார். அதற்குப் பின் கிருஷ்ணனாக அவதாரம் பண்ணி தருமம் சொன்னார். அதற்குப் பின் பௌத்தராக வந்து தருமம் சொன்னார். அதற்குப் பின் குமாரனை ஏஸ்துகிருஸ்துவாக வந்து தருமம் சொன்னார். அதற்குப் பின் தீர்க்கதரிசி யென்னும் நபிநாயகமாகவந்து தருமம் சொன்னார். அதோடு அவர் சொல்லவேண்டிய தருமமெல்லாம் முடிந்து தான் படைத்த உலகத்தின் பொருள்களின் அற்புதத்திற்குள்ளிருக்கும் அற்புதங்களை ஜனங்கள் தெரிந்து சுகப்பட ரசாயன விஞ்ஞான சாஸ்திரிகளை உண்டுபண்ணி அவர்களிடம் உலகத்தைக் கொடுத்தார். அதன்படியே இப்பொழுது உலகத்தை அந்த சாஸ்திரிகள் கைக்குள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதைக் கடவுள் கண்டு திருப்திபட்டுக் கொண்டிருக்கிறார். எல்லா தருமங்களும் விஞ்ஞான தருமத்திற்கே ஆசைப்பட்டு அதன்வழியே ஓடுகின்றன. அதிலேயே சுகிக்கின்றன. இதையெல்லாம் கடவுள் பார்த்தும் கோபிக்கவில்லை. தான் சொன்ன முன் தருமங்கள் இப்பொழுதுள்ள தருமங்களில் புகுந்துகொண்டதற்கு வருத்தப்படவில்லை. அவனன்றி ஓரணுவும் அசையாது என்னும் ஆஸ்திகர்கள் நியாயத்திற்கு இந்த நியாயம் அந்நியமல்லவே.

ரோவிகண்டுபிடித்த சாஸ்திரியிலிருந்து சூரிய உஷ்ணத்தால் எல்லாவிதமான இஞ்சின்களையும் ஓட்டலாமென்று சொன்ன எடிசன்வரையிலும் ஒரு புகையினால் உலகத்திலுள்ள எல்லாப் பிராணிகளையும் அழித்து விடுவேன் என்கிற சாஸ்திரியிலிருந்து ஒருமுக மூடியால் எல்லாப் புகைகளையும் தடுத்துவிடுவேன் என்கிற சாஸ்திரி வரையிலும் பூமிக்கு இழுக்கும் சக்தி இருப்பதால் மேலே எரியப்பட்ட பொருள் கீழே விழுந்துவிடுகிறதென்று கண்ட சாஸ்திரியிலிருந்து மேக மண்டலம் தாண்டி சூரியமண்லடம்கண்டுநாட்டிற்குக் கீழ் நாற்பது டிகிரி பரந்து செய்வாய் உலகத்திற்குச் செல்வேன் என்கிற சாஸ்திரிவரையிலும், கத்தரிக்காயைப் பூசனிக்காய் பெரிது பண்ணின சாஸ்திரியிலிருந்து மண்ணையும் மரத்தூளையும் ஆகாரப்பொருளாக்குவேன் என்கிறசாஸ்திரிவரையிலும், இருதயத்தைப் பரிசோதிக்கும் கருவியைக்கண்டுபிடித்த சாஸ்திரியிலிருந்து ஆயிரக்கணக்கான மையில்களுக்கப்பாலிருந்து இருதயத்தைபரிசோதிக்கும் சாஸ்திரிவரையிலும், இரும்பு மனிதனைப் பேசவைத்த சாஸ்திரியிலிருந்து செத்தமனிதனைப்பிழைக்க வைப்பேன் என்கிற சாஸ்திரிவரையிலும், சுக்கிலத்தை சிரஞ்சி பண்ணினால் குழந்தை உண்டாகுமென்று தெரிந்த சாஸ்திரியிலிருந்து அழகுடையவன், பலசாலி, அறிவாளி, போர்வீரன், ராஜ தந்திரி முதலியவர்களின் சுக்கிலத்தைப் பிடித்துக்கொடாமல் கடையில் வைத்து விற்கலாம்; எந்தெந்த குழந்தை வேண்டுமோ அந்தந்த சுக்கிலத்தை வாங்கிப் பெண்கள்தானே கெர்ப்பப் பையையில் சிறிஞ்சி பண்ணிக் கொண்டால் அந்தந்த குழந்தையை உண்டாக்கிக்கொள்ளலாமென்று சொல்லும் சாஸ்திரிவரையிலும் உள்ள சாஸ்திரிகளும், இன்னும் பல சாஸ்திரிகளும் எத்தனையோ புஸ்தகங்கள் எழுதியிருக்கிறார்கள். அவர்களெழுதின புஸ்தகங்களில்எதிலாவதுஒன்றில் கடவுள் வாழ்த்து உண்டா? இல்லை இல்லாததற்குக்கடவுள் கோபித்ததுண்டா? கோபித்து அந்த சாஸ்திரங்களின் பலன்களைக்கெடுத்ததுண்டா? மூலத்திலில்லாதது மொழிபெயர்ப்பில் எப்படிவரும். உள்ளதைத்தானே மொழிபெயர்க்க வேண்டும் இல்லாததை மொழிபெயர்த்தால அறிவு நூல் பலிக்காதே. கம்பராமாயணமும் கந்தபுராணமுமா சேரங்கத்து அய்யங்கார்கள் சிதம்பரத்து தீட்சதாள் இஷ்டம்போல மொழிபெயர்ப்பதற்கு!

ஒரு காற்றும் இன்னொரு காற்றும் சேர்ந்தால் தண்ணி ஆகுமென்றிருக்கிறது. நடுவில் கடவுள் வாழ்த்திருந்தால் தண்ணியாகாது. கடவுள்வாழ்

(தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க.)

# பெண் என் அடிமையானாள்?

## முஸ்லீம் பெண்களும் அடிமைகளே தான்!

### முஸ்லீம் விதவைகளின் நிலைமை!

[தோழர் அல்ஹாஜ் சுபாகு மோ. திருச்சிராப்பள்ளி.]

நான் இக்கட்டுரை எழுதுவதன் நோக்கம் நமது தோழர் ஈ. வெ. ரா. அவர்களால் மேது பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகத்துக்கென்று முதல் வெளியீடாக எழுதிய "பெண் என் அடிமையானாள்?" என்னும் நூலுக்கு மதிப்புரையாக எதுவும் எழுதவேண்டும் என்பதல்ல. ஆனால் அவர்கள் அதில் கண்டுள்ள விஷயங்களில், குறை கூறியுள்ள விஷயங்களில் முக்கியமாக விதவைகளின் நிலைமையைப் பற்றி விவரிக்கையில் இந்திய ஹிந்து சமூகத்தையே தாக்கி எழுதியிருக்கின்றார்கள். இதனால் முஸ்லீம் சமூகத்தார்களிடையில் இந்தக் குறையில்லை யென்றாகின்றது.

'இல்லை, இல்லை, முஸ்லீம் பெண்களும் அடிமைகளே' 'முஸ்லீம் விதவைகளின் நிலைமை போற்றத்தக்கதாகவில்லை' என்பதை உலகத்தார் அறியச்செய்து அதன்மூலமாக 'இஸ்லாத்தில்பெண்களுக்கிணையில்லாஉரிமைகள் எல்லாம் அளிக்கப்பட்டிருக்கின்றது" என்று பெருமை பாராட்டிக்கொள்ளும் முஸ்லிம்கள் தங்கள் நியாயப் பொறுப்பற்ற, சுயநலப் பற்றுள்ள பழக்கவழக்கங்களை உணர்ந்து திருத்திக்கொள்ளட்டும் என்னும் நன்னோக்கத்துடனே தான் இக்கட்டுரையை எழுதலானேன். முஸ்லீம் ஆண்களும், பெற்றோர்களும் பக்ஷபாதமற்ற நிலையில் இருந்துகொண்டு நிதான புத்தியைக்கொண்டு பகுத்தறிவை செவ்வனே உபயோகித்து உண்மையை உணர்வார்களாக! உணர்ந்து அவசியமானதைச் செய்வார்களாக.!

முஸ்லீம்கள் தங்களுக்கு முஹம்மது நபியவர்களைத் தலைவராகக் கொள்ளுகின்றனர். குர் ஆனைத்தங்களுக்கு தெய்வவழி காட்டியாக நம்புகின்றார்கள். ஆனால் இவர்கள் தங்கள் தலைவரையும், தங்கள் வழிகாட்டியாகிய குர் ஆன் சட்டபுத்தகத்தையும் நிராகரித்துவிட்டு வருகின்றார்கள் என்பதை நிரூபிக்க இவர்கள் தங்கள் பெண்மக்களை அடிமையினும் அடிமைகளாகவும், உயிரற்ற பிராணிகளாகவும் நடாத்திவரும் ஒரு செயலே போதுமானதாகும்.

இக்கட்டுரையில் எடுத்துக் கொண்ட விஷயம் முஸ்லீம் விதவைகளின் நிலைமையைப்பற்றி யாகும். அதை மட்டும் இப்பொழுது எழுதிவிட்டு வேறு விஷயத்தை பின்னர் விவரிப்போம்.

முஸ்லீம்களில் இந்த உண்மையை அறியாதார் எவருமில்லை. இவர்கள் தங்களுக்குத்தலைவராகக் கொண்ட நபி முகமது நபியவர்கள் காலத்தில் அராபிய விதவைகளின்- இல்லை பொதுவாக பெண்களின் நிலைமை எப்படியிருந்தது என்று இவர்கள் தெரியாதவர்கள் போல் நடந்து கொள்ளுகின்றார்கள். இந்த சரித்திர உண்மையை இரண்டோர் வரிகளில் இவர்களுக்கு எழுதி ஞாபக மூட்டி விட்டுமேலே செல்லுவோம்.

1350 வருஷங்களுக்கு முன், நபியவர்கள் பிறந்த காலத்தில் அராபியர்கள் தங்களுக்குப் பெண் பிள்ளைகள் பிறப்பதை அபசகுனமாகவும், குலத்துக்கு பங்கத்தை விளைவிக்க பிறப்பதாகவும் கருதிவந்தனர். இதற்காகப் பிறந்த பெண்மக்களை யெல்லாம் குழிதோண்டிஅதில் உயிருடன் போட்டு மூடிவிடுவார்கள். இதிலிருந்து மட்டும் பெண்களின் அந்தஸ்து எப்படிப்பட்டது என்பதை விளக்காமலே உணரும் சக்தியுள்ளவர்கள் விளங்கிக்கொள்ளுவார்கள். ஏனையவர்கள் நபியவர்களின் சரித்திரத்தை ப்படித்து விளங்கிக்கொள்ளட்டும். இப்படிப்பட்ட அந்தஸ்து படைத்த பெண்களில் விதவைகளுக்கு எவ்விதஅந்தஸ்தளிக் கப்பட்டிருந்திருக்கும் என்பதையும் விளக்க வேண்டியது அவசியமில்லையென்று விட்டு விட்டு மேலே செல்லுவோம்.

இந்த விதவைகளின் அந்தஸ்தை உயர்த்தும் பொருட்டு பகுத்தறிவே உருவாக ஜனித்த நபிகளின் நாயகம் தான், 25வயதுடையபரிசுத்த யௌவன புருஷராக விருந்து கொண்டு முன்னரே பலபுருஷர் களுக்கு வாழ்க்கைப் பட்டுப் பிள்ளைகள் பெற்று புருஷர்களை இழந்த துரதிர்ட விதவையாக வாழ்ந்து வந்த தாய் கதீஜாஅம்மாள் என்னும் 40வயதுடைய விதவையைக் காதல் மணமுறையில் தனக்கு முதல் துணைவியாகக் கொண்டார்கள். அவ்வம்மையாருடன் அவர் மரணகாலம்வரையில் அதாவது 29வருஷகாலம் வரைக்கும் நபியவர்கள் தங்களுடைய கிழப்பருவம்வரையில் அதாவது தங்கள் 54வது வயது வரைகளும், ஏகபத்தினி விரதராய் இல்லறம் நடாத்திப்பல பிள்ளைகளைப் பெற்றெடுத்தார்கள். இப்பொழுது கதீஜா பிராட்டி யார் இறக்கும் பொது நபியவர்கள் 54 வயதுகொண்ட கிழவராகி காம உணர்ச்சி யனைத்தும் ஒடுங்கி மறு விவாகம் அவசியமற்றவர்களாகவிருந்தார்கள் என்றாலும் நபியவர்கள் ஓர் சீர்திருத்தவாதியாகவிருந்தார்கள். மக்கள் மாக்களாகவிருந்தார்கள். அவர்களை மக்களாக மாற்றவேண்டியது தன் கடமையாகக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு வெறும் உபதேசம் பயன்படாது சொல்லுவதைச் செய்து காட்டுவதே உண்மைப்பிரசாரமாகும். இதை மனத்தில்வைத்து அநாதைகளாகவும், அவமானத்துக்காளாக்கப் படுபவர்களுமாகிய விதவைகளின் அந்தஸ்தை உயர்த்த வேண்டும் என்று வெறும் பிரசாரம் செய்வதினால் மட்டும் இந்தியாவில் என்ன கைகூடிற்று? பிரசாரர்கள் எல்லாம் விதவைகளை மணந்தோ, மணக்கஉதவிபுரிந்தோ வந்திருந்தால் 26லக்ஷம் விதவைகளின் எண்ணிக்கை 26ஆயிரத்துக்கு குறைந்திருக்கும். ஆனால் முகமது நபியவர்கள் திண்ணைவேதாந்தியல்ல. அவர் மனித சமூகத்துக்கேஒரு வழிகாட்டியாக விருந்தார்கள். அதனால் அவர்கள் தன் 25ம் பிராயத்தில் 40வயது விதவையைமணந்து, அந்தக் கிழ விதவையுடன் தங்களது கிழப்பருவம் வரையில் இல்லறம் நடத்திக்காட்டியதுடன் நின்று விடாது தனக்கு சிற்றின்ப நுகர்ச்சி தளர்ந்து போன காலத்தும் விதவை விவாகத்தைப்பரப்பு முகத்தான் அழகும், ஐஸ்வரியமும் அற்ற அனாதையான யௌவனம் நீங்கிய 7,8 விதவைகளைத்தன் 54வது வயதிலிருந்து 60வயதுக்குள் மணந்து அவர்களின் அந்தஸ்த்தை உயர்த்தி விதவா விவாகத்தைப்பரப்பினார்கள்.

ஆனால் இந்த நபியவர்களின் காலடியைப் பின் பற்றி நடந்து கொள்ளுவதாகப் பெருமை பேசிக்கொள்ளும் முஸ்லீம்கள் என்போர்கள் வீட்டுஇளவிதவைகளை மறு விவாகம் செய்து கொள்ளகடமுறையில்அனுமதிக்காது அடிமைப்படுத்தி அனாச்சார வாழ்வு வாழும்படி செய்வதுடன் நில்லாது விதவா விவாகம் செய்து கொள்ளுபவர்களை இகழவும் செய்கிறார்கள் என்றால், இவர்களுக்கு அந்தோ! இதை நிரூபிக்க எங்கள் குடுமபத்தினர் இது விஷயமாய் நடந்துகொண்ட விதத்தை இங்கு உண்மையை விளக்கும் முகத்தான் விவரிக்கின்றேன்.

எனது ஒரு சுற்றத்தாரின் மகள் ஒருஇளம் விதவையாக இருந்து வந்தார். இந்த விதவையை மறுமணம்செய்து கொள்ள விடாது எனது சிற்றப்பனார் வைத்துக் காத்துவந்தார். இவர் மத பக்தி நிறைந்தவர். தன் நெற்றியில் கரும் புள்ளி விழும் முறையில் முஹமது நபியவர்கள் சொன்னபடி நடந்து கொள்ளுவதாக உலகம் போற்றுவதற்காகத் தொழுது வந்தார். ஜபமாலை உருட்டுபவர், வேதமோதுபவர். ஆனால் தன் தலைவரைப் பின்பற்றாமல் தன் இளங் குமாரியை இயற்கைக்கு மாறாக விதவையானவுடன் கைதியாக்கி வைத்திருந்தார். இதை குடும்ப கௌரவத்தை உயர்த்தும் குணமாகக் கருதப்பட்டு வந்தது. எங்கள் குடும்பதில் விதவா விவாகம் கிடையாது, என்று பெருமை பாராட்டி வந்தார்கள். இவருடைய மற்றோர் மணஞ்செய்த குமாரிஇறந்து விட்டார். இந்தம்மாளின் கணவர் உலகானுபவமும் பகுத்தறிவும் கொண்டவர். கைதியாக்கப் பட்டுள்ள தன் கொழுந்தியாளான விதவையை மணந்துகொள்ள விரும்பினார். பொங்கிற்று கோபம் எங்கள் உறவினருக்கு. குடும்ப கௌரவத்துக்கு இழிவு படுத்தும் எண்ணம் என்று பிதற்றினர். ஆனால் பகுத்தறிவு பெற்ற இவருடைய ஏக புத்திரன் தன் விதவை சகோதிரியை கைதிக் கூடத்திலிருந்து அப்புறப்படுத்தி மனைவி யிழந்த தன் மச்சானுக்கு மனைவியாக்கி வைத்தார். இது கேட்டு அடங்காக் கோபங்கொண்ட என்உறவினனர் சீறிக்கொண்டு தான் வெகு பெருமையுடனும் செல்வத்துடனும் வளர்த்து வந்த ஏக புத்திரனை வீட்டை விட்டு அப்புறப் படுத்தி விட்டார்.

இதைப்போல் பல உதாரணங்களைக் காட்டுவேன். எவ்வளவு தான் பர்தாவுக்குள் அடைத்துவைத்தாலும் இயற்கை உணர்ச்சியை சாந்தி செய்து கொள்ள இளம் விதவைகளுக்கு சந்தர்ப்பம் கிடைக்காமலில்லை. ஹிந்து விதவைகளின் நடபடிக்கைகள் பஹிரங்கமாய் விட்டால் கோஷாவுக்குள்ள விதவைகளின் நடவடிக்கைகள் அதிக பஹிரங்கமாவதில்லை. இதுதான் வித்தியாசம் இருவர்களும் தங்கள் இயற்கைக் கிளர்ச்சியை சாந்தி செய்து கொண்டேதான் வருகின்றார்கள் பெற்றோர்களும் மற்றோர்களும் அறிந்தும் அறியாதவர்களைப்போல் நடித்துக்கொள்ளுகின்றார்கள். வேறு விதியில்லை.

முடிவாக முஸ்லிம் விதவைகளின் நிலைமை எவ்விதத்திலும் போற்றத்தக்க தல்ல என்பதை விளக்கி விட்டேன். முஸ்லிம்கள் பெருமை பாராட்டிக்கொள்ளுவதெல்லாம் தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்ளுவதுதான். ஹிந்துக்கள் தங்கள் குற்றங்குறைகளை பஹிரங்கமாக வெளிபிட்டு சீர் செய்து கொள்ளுகிறார்கள். முஸ்லிம்கள் பிளவையை மூடிமூடி வைத்துக்கொண்டு "எங்கள் நபி, எங்கள் மதம், எங்கள் இஸ்லாம் பெண்களுக்கு வேண்டிய உரிமைகள் அனைத்தையும் அளித்து விட்டது." என்ற பெருமை யென்னும் மூலாம் பூசிக்கொண்டே வரு

# What is Marriage?

# கல்யாணமென்றால் என்ன?

[ஓர் சமதர்மி]

சென்ற வாரத்தொடர்ச்சி

ஆணும் பெண்ணும் கூடி வாழும் புராதன வாழ்க்கையைக் கல்யாணமென்று மக்கள் பேச ஆரம்பித்த பிறகு, வழங்கத் தலைப்பட்டனர். உயிர்களுக்கு இதுவோர் அத்யாவசியமானநடத்தை (Behaviour) யாகும். இந்தப் பூர்வீக நடத்தையை மனித சமூகம் அதிகரித்து வரவும், பற்பல கட்டுத்திட்டங்களால் அதன் முக்கிய கருத்து வற்புறுத்தப்பட்டது. அதன் முக்கிய கருத்து பிரஜாவிருத்தி (Procreation) அதாவது சந்தான அபிவிருத்தி என்றும், மக்களை ஈன்றெடுத்து, காப்பாற்றுதலென்றும், அந்தக்கருத்து தடைப்பட்டால் மனித குலமே, க்ஷீணித்து (Extinct) விடுமென்றும், முன் வாசகத்தில் எடுத்துரைத்தோம். ஆனால் சம்போகமோவெனில், it is a means to an end, அதாவது, சந்தான விருத்தி அடையும் மார்க்கமெனவும் காண்பித்தோம்.

கல்யாணத்தின் இந்த முக்கிய நோக்கத்தையே மக்கள் வலியுறுத்தி வந்திருக்கின்றார்கள். நாகரீக மடையாத அனேக ஜன சமூகங்களில் கல்யாண நடத்தையை, பலவித பழக்க வழக்கங்களைக்கொண்டு நிலைக்கச் செய்து வந்திருக்கின்றனர். காட்டுமிராண்டிகளில் கல்யாணமில்லாத பிரமச்சாரியைக்காண்பதரிது. வயது வந்ததும் அவனவன் கூட்டங்களுக்குறிய பழக்கப்படி ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ளுகின்றான். காட்டுமிராண்டிகள் நம்மைவிட அடுத்தடுத்து கல்யாணம் செய்து கொள்வதாக இதன் மாபெரும் அதிகாரியாகிய வெஸ்டர் மார்க் (Westermarck) கூறுகின்றார். இந்த பழக்கத்தையே நாகரீகமடைந்த பல கூட்டத்தாரும் பல கட்டுத்திட்டங்களால் வற்புறித்தி வருகின்றனர்.

சீன தேசத்தில் யாராயிருப்பினும் வயது வந்தவுடன் மணம் புரிந்து கொள்ளவேண்டுமென்று கட்டாயப்படுத்துகின்றார்கள். ஆதி ரோமாபுரி நாகரீகத்தில் மணம் புரிந்து கொள்ளும் வயது, ஆணுக்கு 14ம், பெண்ணுக்கு 12மாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இந்த வயதையே ஆதி கிறிஸ்தவர்களும் அங்கீகரித்தனர். இந்துக்களுக்குள் வழங்கி வரும் "பிள்ளை இல்லாதவன் புத் என்னும் நகரத்திற்குப் போவான்" என்ற கட்டுக்கதையும் இந்த கல்யாணத்தின் முக்கிய கருத்தையே வற்புறுத்த ஏற்பட்ட விதியாகும். பிள்ளைகளைப்பெற யாகங்களும், யாத்திரைகளும், மந்திர தந்திரங்களும் நமது நாட்டு மக்கள், பல்லாண்டு பல்லாண்டாகச் செய்துவருவதும், இந்த சந்தான விருத்திக்கே. தசரதனுக்கு மூன்று மனைவியர் மூலமாக பிள்ளை இல்லாமற் போனபோது புத்திர யாகம் செய்து, ராம, லட்சுமணர்களைப் பெறப்பட்டான் என்ற கதையிலிருந்தும் மக்களுக்குள் சந்தான விருத்தி எவ்வளவு ஆவலுடன் பாதுகாக்கப்பட்டதென்று யூகிக்கலாம்.

இத்தியாதி பூர்வீக நோக்கம் பலவித காரணங்களால் சிதைந்து வந்திருக்கின்றது. ஆதிகால முதல் மதப்பித்தால் கல்யாணத்தை இகழ ஆரம்பித்தனர். இந்து ஆகமங்களில் பிரமச்சரியத்தை (Celebacy) புகழ்ந்து கூறப்பட்டுள்ளது. சந்நியாசிகளென்ற ஓர் பெருங்கூட்டத்தார், இந்த மூடப்பழக்கத்தைக் கையாளவந்தனர். ஆதிபுத்தர்களும், பிரமச்சாரி வைராக்கியத்தைக் கைக்கொண்டனர். இந்த வைராக்கியம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் உண்டாக்கப்பட்டது. லட்சக்கணக்கான ஆண்மக்களும், பெண்மக்களும் சந்தானவிருத்திக்கே உதவாமல் போயினர். கிறிஸ்துவர்களும் [Celebates] பிரமச்சாரி என்ற கூட்டத்தில் ஏராளமாகச் சேர்ந்தனர். இந்த கொடிய திட்டத்திற்கு மிகுதியும் கட்டுப்பட்டவர்கள் ரோமன் கத்தோலிக்கர் என்றே கூறலாம். பெண்களைத் தொடாதிருப்பதே நலமென்றார்." செய்ன்ட்பால் [Saint Paul] இத்தியாதி கடுமையான திட்டங்கள் மக்கள் இயற்கைக்கு விரோதமாக ஏற்பட்டதற்கு மதங்களே முக்கிய காரணம். பெண்கள் அமங்கலியென்றும், விதவைகளென்றும், பேயென்றும், பிசாசுயென்றும் இகழநேரிட்டதும் இந்த மத வைராக்கியத்தாலென அறிக. இந்த மத வைராக்கியமும் இன்னொரு மூடமதநம்பிக்கையால் வந்தது. மனிதனுக்குள் ஆன்மாஎன்று கற்பித்துக்கொண்டு அவ் வான்மா மோட்சமடைய உடலைவிட்டுப் பிரியவேண்டுமென்று இன்னோர் கற்பிதத்தையும் உண்டாக்கி அதற்காகத் திரேகத்தை வருத்தி உடலை நாசம் செய்யத் தலைப்பட்டனர். இதைத்தான் "தவம்" என்றும் "யோகம்" என்றும் "ஜீவன் முக்தி" என்றும் பெயரிட்டு உடலை வருத்திவந்தனர். இதனை [Aceticism] அதாவது உடலை வருத்தும் சித்தாந்தமென்பர். வேதங்களிலும், பௌத்த புத்தகங்களிலும், கிறிஸ்துமத சரித்திரப் புத்தகங்களிலும் இந்த அகோர நடவடிக்கைகளைப் பார்க்கலாம். கங்கை, யமுனை நதிக்கரையிலும் இவ்விதக் கொடூர தவம் புரிவோரை இன்றைக்கும் காணலாம். ஒருகாலத்தில் கிருஸ்து உலகில் ஐந்து முடியைக் கட்டிவைத்துக் கொண்டு இரத்தம் ஒழுகத் திரேகத்தை அடித்தனர். இத்தியாதி கொடுமைப்போன்றது பிரமச்சாரித்த்துவமும், இந்த பிரமச்சாரி தத்துவத்திலிருந்து பிறந்தது பெண்மக்களை இழிவுபடுத்தும் சித்தாந்தமென அறிக. புருஷன் இறந்த பெண்மக்களை மொட்டை அடிப்பதும், அழகை வெறுப்பதும், அகோர வாழ்க்கைக்குட்படுத்துவதும் இந்த பிரமச்சாரி மூடத்தத்துவத்தால் நேர்ந்தது. பெண்கள் நிலமை தாழ்த்தப்பட்டதல்லாம் இத்தியாதி மூட மதக்கொள்கைகளால் விளைவுற்றன. பலகோடி வருஷங்களாக இவர்கள் தங்கள் இனத்தை நசித்துப்போக வொட்டாமல் ஏற்பட்ட கல்யாணமென்ற ஆண் பெண் இயற்கைக் கூட்டுறவை துர் உபயோகத்திற்கு கொண்டுவரச்செய்ததும் இந்த மூடமதங்களாலெனவும் அறிக. மூட மதங்கள் இந்த புராதீன இயற்கை சம்மந்தத்தை இவ்வாறாக இழிவுபடுத்த மூட விஞ்ஞானமும், இன்னொருபக்கம் கல்யாணத்தைப்பாழ்படுத்த ஆரம்பித்துவிட்டது. கல்யாணத்தால் மக்கள் அதிகரித்து விடுகின்றார்களாம். அவர்களுக்கு உணவு போதாதாம், ஆதலின் பிறக்கும் மக்களைக்குறைக்க பிரஜா தடை செய்துகொள்ள வேண்டுமாம்! இதைத்தான் கர்ப்பத்தடை என்று வழங்குகின்றார்கள். இதனை Psuedo Seience, அதாவது பொய்விஞ்ஞானமென்று கூறல் வேண்டும். மதங்களாலும், பொய் விஞ்ஞானத்தாலும், இழிவு அடைந்துவரும் கல்யாணவாழ்க்கை, இன்னும் பல காரணங்களால் கெட்டுவர நேரிட்டது. இதனை சுருங்கக்கூறி விடுவாம்.

தற்காலத்தில், பொருளாதார நெருக்கடியால் கல்யாணம் செய்துகொள்ளாமலே ஆணும் பெண்ணும் இருந்து வருகின்றார்கள். இந்தகாரணத்தின் நிமித்தம் கல்யாணத்தை ஒத்தி வைத்துக் கொள்கிறார்கள். கல்யாணம் பழிக்க நேரிட்டபடியால் அந்தந்த சமயத்திற்கு ஆணும் பெண்ணும் கூடிப்பிரிந்து விடுகிறார்கள். இந்தக் கொடுமையால் திக்கற்றப் பிள்ளைகளும், திக்கற்ற பெண்மக்களும், உலகில் அதிகரித்து வருகின்றனர்.

இன்னொரு விபரீதகாரணத்தாலும், கல்யாணம் தடைபட்டு வருகிறது. அதாவது புருஷனை இழந்த பெண்மக்கள், கல்யாணம் செய்யப்படாதென்று தூர்ப்பழக்கத்தால் அனேக பெண்மக்கள் மறுகல்யாண மில்லாமலே கஷ்டப்படுகின்றனர். இந்த துர்ப்பழக்கம் பெண்மக்களை இழிவுபடுத்தியதால் நேர்ந்தது. இன்னுஞ் சிலபழக்கங்களால் கல்யாணம் தடைப்படுகிறது ஆதியில் கல்யாணம் சம்போகத்திலிருந்து பெறப்பட்டதென்று குறித்துள்ளோம். உயிர்கள் உயர்ந்துவர வர முக்கியமாக சமுசார வாழ்க்கைக்காகவே கல்யாணம் ஏர்பட்டது. இந்த சமுசார வாழ்க்கைக்கு இரண்டு துணைவருடைய சம்மதம் வேண்டும். சம்மதமில்லாமல் சமுசாரம் நிகழாது. ஆதலின் சம்மதி இல்லாத கூட்டுறவு சமுசாரத்திற்கே அழிவை விளைவிக்கும். இந்தக்காரணத்தால்தான் பிரியமில்லாத கூட்டுறவை பலவந்தப்படுத்தக் கூடாதென்றும், வேண்டும்போது புருஷனும், பெண்ஜாதியும் பிரிந்து விடலாமென்றும் ஆதிகால நாகரீக முதல், தற்கால நாகரீகம் வரை, விவாகரத்தை ஆதரித்து வரப்படுகின்றது. இதனை அதாவது விவாகரத்தைத் தடைசெய்து வருவதும் மதங்களென அறிக. மதங்கள் பிரஜா விருத்திக்குத் தடையாகவே இருந்து வருகிறது. பல்லாயிரம் மக்களை கல்யாணம் செய்துகொள்ளவிடாமல் தடை செய்துவரும் மதங்கள் கர்ப்பத்தடையை எதிர்ப்பதென்றால், அது என்ன ஆபாசம்! சமுசார வாழ்க்கையை நடத்த முடியாத கல்யாணதை ரத்துசெய்யக்கூடாதென்கின்றார்கள்! ஆனால் பல்லாயிரம் பெயரை கல்யாணம் செய்துக்கொள்ளக் கூடாதென்கின்றார்கள்! இந்த மூர்க்கக்கட்டு திட்டங்களால் மதங்கள் பிரஜா விருத்தியை தடைசெய்து வருகின்றன. கர்ப்பத்தடை கோஷ்டியார் மாத்திரம் பிரஜா விருத்தியை அடக்குங்கள் என்றால், சமையங்கள் கத்தியைத் தீட்டுகின்றன! மதங்களின் ஆபாசத்தை என்னென்று மதிப்பது!!!

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க.

---

வதால் என்ன விளையும் என்பதை அறிவுள்ளவர்கள் அறிந்தே கொள்ளுவார்கள். அறிவற்றவர்கள் அழிந்தே தான் போவார்கள். இப்படித்தான் நபியவர்களும், குர் ஆனும் எச்சரிக்கை செய்கிறது. முன் காட்டிய நபியவர்களின் நடவடிக்கை ஒன்றே விதவ விவாக விஷயமாய் போதுமானதால் இது விஷயமாய் அவர்களுடைய உபதேசங்களும், குர் ஆன் கட்டளைகளும் அவசியமில்லையென்று விடுத்தோம்.

# திருவண்ணுமலை இரகசியம்.

## பார்ப்பனர்களின் கொண்டாட்டமும் பாமரர்களின் திண்டாட்டமும்.

(பேராயம்பட்டு தோழர் டி. ரங்கம்மாள்)

வட ஆற்காடு ஜில்லாவில் திருவண்ணுமலை என்பது பேர்போன நகரம். அந்நகரம் வியாபாரத் துறையில் சிறந்தது. அந்நகரில் ஒருமலையும், அழகிய ஆலயமும் இருக்கின்றன. இது ஒருபாடல் பெற்ற திவ்வியக்ஷேத்திரமாக ஆஸ்த்திக புத்திசாலிகள் நம்பி இருக்கிறார்கள். இந்த ஆலயக்கடவுளுக்கு அண்ணுமலை யென்றும், அம்மனுக்கு உண்ணுமுலை என்றும் பெயர். அந்தமலையைப் பற்றியும், சுவாமியைப் பற்றியும் ஓர் பெரிய புழுகுப்புராணம் இயற்றப்பட்டுள்ளது, அதில் இருப்பதெல்லாம் சுத்த வடிகட்டின முட்டாள்கள் புழுகே தவிர வெறும் உண்மையாய் நடந்திருப்பது என்று கூறியது அபத்தமென்றே நிச்சயப்படுத்தலாம். இந்த நூலுக்கு அருணசல புராணமென்று பெயர். இதில்தான் வல்லாள மகாராஜன் ஆண்டிப் பயலுக்கு தன் பெண்சாதியை கூட்டிக்கொடுத்ததும், அண்ணுமலை என்னும் கல்லுருவம் இவருக்கும் பிள்ளையாய்ப் பிறப்பதும், அதற்காக வல்லாள ராஜவுக்கு அண்ணுமலை என்னும்கல்லுருவம் பள்ளிக்கொண்டாப்பட்டு மாசிமாதம் கருமாதி செய்யப் போவதும், அதற்காக அங்கு கருங்கல்லுசாமியினுடைய மாமியார் வீட்டார் என்று முறை கொண்டாடி தலைகட்டு கட்டுவதும் என்ன அனியாயம் என்பதும்; அன்றியும் காமதூர்த்தனுகிய அருணகிரி தாசிலோலனாய் இருந்தும், அவனுடைய தமக்கையார் தன் தம்பியை மருவ விரும்பியதும் கூட கூறப்பட்டுள்ளது. இப்பேர்ப்பட்ட அருணகிரியை வணங்காதவர், ஏழேழு பிறப்பிற்கும் மோக்ஷமடைவதில்லை என்று அவருக்காக ஓர் சமாதி கட்டி அங்கு செல்லும் பாமர ஜனங்களுக்கு அதிலுள்ள பிராமணப் பேய்கள் கூறுவது விந்தையிலும் விந்தையே. அவனுடைய சற்குணம் அவன் பாடியதாக கூறப்படும் திருப்புகழில் தெற்றனவிளங்கும். (ஒவ்வொரு பாட்டிலும் பெண்களை மறுவும் விதமும் அவர்களின் அங்கங்களின் அழகும் வருணிக்கப் பெற்றுள்ளன) அருணசலப் புராணத்திலுள்ள சரித்திரங்களை மெய்ப்பிக்க அநேக அத்தாக்ஷிகளை திருவண்ணுமலையில் இன்றும் காணலாம். மேற்கூறிய மகத்துவம் பொருந்திய கற்சிலைக்கும், செம்புச்சிலைகளுக்கும், அங்குள்ள பிரம்மாவினுடைய வம்சமென்னும் பார்ப்பனப் குருக்களுக்கும் மாதா மாதம் உற்சவம் தவறுதல் கிடையாது. ஒவ்வோர் உற்சவமும் பத்துதினங்களுக்கு குறைவாக நடைபெறுவது கிடையாது. அது வன்னியில் தினேதினே அக் கோவிலுக்குச் சராசரி சுமார் 50 ரூபாய் செலவழிக்கப் பெருகின்றன. திருவிழா காலங்களில் பத்து தினங்களில் சுமார் ஆயிரக் கணக்காய் நம் நாட்டுக்கோட்டை செட்டிமார் செலவழிப்பது என்ன மதியீன மென்பது விளங்கவில்லை. இன்னும் அவர்களுக்கு விளங்கவில்லை என்பது பற்றி என்மன வருத்தத்தை அவர்களுக்குக் கூறுகிறேன். இந்த கோவிலின் பெயரைச் சொல்லி சுமார் நாற்பது பிராமணக்குருக்கள் என்னும் தாசருடைய குடும்பம் யாதொரு கஷ்டம் இன்றி சுகமாக விலாப் புடைக்க உண்டு, சாமி என்னும் கற்சிலைகளின் பெயரால் பொட்டுக் கட்டின தேவடியாள் என்னும் பெண்மணிகளிடம் சரசசல்லாபம் செய்து மகிழும் நம் பிராமணக்கூட்டங்கள் ஆறிக்கும் என்று அழியுமோ அன்றுதான் நாம் முற்போக்கடையும் காலம் என்பது திண்ணம்.

இத்தகைய நிலைமையில் முக்கியமான திருவிழா கார்த்திகை தீப உற்சவமாகும். இதை வருணிக்க முடியாது. ஆகையால் சில முக்கியமான விஷயங்களை மட்டும் இவ்விடத்தில் கூறுகிறேன். இந்த திருவிழாவானது கிருத்திகை முடிய 13 தினங்களுக்கு முந்தியே ஆரம்பமாகி 13ம் நாள் தீப தரிசனமும், அதற்கடுத்த 5 தினங்களுக்கு தெப்ப உற்சவமும் நடைபெற்றது. இந்த உற்சவங்களுக்கு வெள்ளி ரதம், வெள்ளி விமானம், தங்கப்பல்லக்கு இன்னும் அநேக விதமான வாகனங்களெல்லாம் பொன்னாலும், வெள்ளியாலும் செய்யப்பெற்றவைகளே. இந்த வாகனம், ரதம், விமானம், இவைகளெல்லாம் அநேகமாய் நம் செட்டிநாட்டு பிரமுகர்களே செய்துவைத்துப் பார்ப்பன சமூகத்தை முன்னேற்றமடையச் செய்ததுமல்லாமல் அவர்களுடைய பாதத்தை கழுவி அந்நீரைத் தீர்த்தமென்று சாப்பிடுகிறவர்களின் அறிவு வளர்ச்சி எவ்வளவென்பது வாசகர்களே அறிவீர்கள்.

இத்திருவிழாவிற்கு 100க்கணக்கான மைல் தூரங்களுக்கப்பாலிருந்து சுமார் அறுபதினாயிரம் ஜனங்களுக்கு மேல் வெளியூர்களிலிருந்து வருவார்கள். (திருவண்ணுமலை வாசிகள் சுமார் 50000) இவ்வளவு பேரும் அந்த ஊர்களுக்குள் தங்கி அவதிப்படும் கோலம் அதியாயமானது. சுவாமிதரிசனத்திற்காக ஒருவர் மேல் ஒருவர் விழுந்து பாதவிப்பது போலீஸ் வீரர்கள் முன்னணியில் இருப்பவர்களின் மீது நாய்போல விழுந்துபிடுங்குவதும் மிக்கபரிதாபகரமிலையே. இந்தக் கூட்டத்தில் வயோதிகரும், பெண்களும், குழந்தைகளும் நெருக்குண்டு சாகும் எண்ணிக்கை அநேகம். இதில் எத்தனை பேர்கள் காதறுந்து போவதும், நகைகளையிழப்பதும், கையில் உள்ள பொருளையிழந்து கஞ்சிக்குத் திண்டாடுபவர்களும் நிறம்பியிருப்பார்கள். அந்தோ அண்ணுமலையாரின் அருளே அருள், அவர் தருவதே பெருவரம்!

இந்நிலைமையில் அங்குள்ளவர்கள் தாராளமாய் இருக்க போதுமான அறைக்கு ஐந்து ரூபாய் முதல் பத்து ரூபாய்வரைவாடகைக்கொடுக்கவேண்டும். இவ்வாறெல்லாம் ஜனங்கள் கஷ்டப்படுவதல்லாமல் சினிமாக்காரர்களும், டிராமாக்காரர்களும், சர்க்கஸ்காரர்களும் பீடிஅட்வர்டைஸ்மெண்டுகாரர்களும், டான்சு முதலிய கூேஷக்காரர்களும் பணத்தை பகல் கொள்ளையாடுவார்கள். சூதாடுமிடங்களும் பல ஏற்படும். (இதற்கு கவர்மெண்டார் லைசென்சு கொடுப்பது வெட்கக்கேடான காரியம்) இது விதத்தில் கஷ்டம் அடைந்தாலும், இன்னும் அநேகவித பகற்கொள்ளைகள் நடைபெறுவது மிகவும் பரிதவிக்கத் தகுந்ததாகும்.

கற்சிலைகளின் பெண்சாதியாகிய தேவடியாள்களின்கொள்ளைகளை சிலவற்றைக்கூறவிரும்புகிறேன். உள்ளூரிலே சுமார் நூறுதாசிகளுக்கு மேல் இருப்பது போதாமல், திருச்சி, தஞ்சை, ஈரோடு கும்பகோணம் போன்ற பலவூர்களிலிருந்தும்வந்து எங்குபார்த்தாலும் வீதிகளிலும், கோவில்களிலும் திரிந்து அநேக வாலிபப்பிள்ளைகளை தம் மோகவலையில் சிக்கும்படி அநேகவித மோசம் செய்து அவர்களுடைய பணத்தைப் பறித்து அவர்களுக்கு எவ்வளவோ வியாதிகளைத்தருவது வெகு விந்தையே.

இந்நிலைமையில் வாலிபர்களுடைய சேஷ்டைகளை கூறுவது என்மனது வெகு ஆத்திரத்தை உண்டாக்குகிறது. பாமர பெண்மணிகள் திருவிழா பார்த்து வரம் வாங்கும் விந்தை என்னவென்றால் ஷைவாலிபர்கள் அவர்களை நெருக்கி தள்ளுவதும், அவர்கள்மேல் விழுந்து துன்புறுத்துவதுமாகும். இந்தஅகம்பிடித்தவாலிபப்பிள்ளைகளுக்கு என்ன வருமோ தெரியவில்லை. இந்த பெண்களுக்கும் வெட்கமென்பது இல்லாமல் இந்த கல்சிலைகளிடம் பெறுவது இந்தவரம்தான் என்பது இத்திருவிழாவிற்கு வரும் பெண்மணிகளுக்கு இனியாகிலும் விளங்குமாவென்பது எனது திண்ணம்.

---

### சென்னை சுயமரியாதை இளைஞர் மன்றம்.

ஷை மன்றத்தின் வாராந்திரக்கூட்டம் 21-1-34 ஞாயிறு பகல் 2மணிக்கு தோழர் பி. எஸ். சம்பந்தம் தலைமையில் 221 தங்கசாலை வீதியில் கூடிற்று. அதுசமயம் தோழர்கள் கே. ஓ. கிருஷ்ணசாமி, கே. எஸ். நாதன், ரங்கநாதன், சி. தங்கராஜ் "என்ன" என்பது பற்றி சொற்பொழிவாற்றின பின் தோழர் பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்களால் கொண்டுவரப்பட்ட கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேறிற்று.

இக்கூட்டம் நம் அரும் தோழர் ஓ. சி. சீனிவாசன் அவர்கள் அகால மரண மடைந்ததால் வருந்துவதுடன், நமது அனுதாபத்தை ஷையார் குடும்பத்தினர்களுக்கு தெரிவிக்கின்றது.

தவிரதனிப்பட்டவர்களால் பஸ்சர்வீஸ்களை நடத்துவதைநிறுத்திவிட்டு சென்னை அரசாங்கத்தாலோஅல்லது நகர பரிபாலன சபையாராலோநடத்துமாறு இச்சங்கத்தார கேட்டுக்கொள்கின்றனர்.

# ரஷியாவின் இரண்டாவது ஐந்து வருடத் திட்டம்.

## உணவுப்பொருட்களைப் பெருக்க—அகவிலைகளைக் குறைக்க ஆலோசனை.

### அறியாமையை அறவே ஒழிக்க ஏழு வருட கட்டாயக்கல்வி.

ரஷ்ய சோவியத் சர்க்கார் இரண்டாவது ஐந்து வருடத் திட்டம் ஒன்றைத் தயாரித்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது. சோவியத் அரசியல் இலாக்காவினால் ஒரு வருடத்துக்கு முன்னே ஆரம்பிக்கப்பெற்ற இந்தத்திட்டம் சமீபத்தில்தான் பூரணமடைந்ததாம். ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தபடி இந்தத் திட்டத்தில் கண்ட ஆலோசனைகள் இம்மாதம் 25-ந் தேதி நடந்த ரஷ்ய பொதுவுடைமைக் கட்சி காங்கிரசில் விவாதித்து ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும் என்று தோன்றுகிறது. இந்தத் திட்டத்தின் விபரங்கள் பின்வருமாறு:—

1932ம் வருடத்திலே ரஷ்யாவில் 4300 கோடி ரூபிள் பெறுமதியுள்ள சாமான்கள் உற்பத்தியாயின. இது ஏறக்குறைய 430 கோடி பவுனுக்கு அதாவது 1 பவுனுக்கு அதாவது 15 ரூபா விதம் கணக்கிட்டுப் பார்த்தால் 6450 கோடி ரூபாய் சமமாகும் என்று சொல்லலாம். 1937ம் வருடத்தில் 10 ஆயிரத்து 300 கோடி ரூபிள் பெறுமான அதாவது 1030 கோடி பவுன் அல்லது 15 ஆயிரத்து 450 கோடி ரூபாய் பெறுமான சாமான்களை உற்பத்தி செய்ய திட்டம் போடப்பட்டிருக்கிறது. எனவே விளை பொருள்கள் கைத்தொழிற் பொருட்களின் உற்பத்தியை இப்போதிருப்பதிலும் கிட்டத்தட்ட மூன்று மடங்கு அதிகரிக்க முயற்சி செய்வார்கள் என்று தெரிகிறது.

இதற்குத் தக்கதாக, இறைச்சி, வெண்ணெய், முட்டை, சர்க்கரை ஆகிய ஆகாரப்பதார்த்தங்களை ஜனங்கள் உபயோகிப்பதும் இப்போதிலும் மூன்று மடங்கு அதிகமாக்கப்படும். அகவிலைகள் நூற்றுக்கு 35 விகிதம் குறைக்கப்படும்.

சம்பளங்கள் நூற்றுக்கு 21 விதம் உயர்த்தப்படும்.

தொழிலாளிகள்தொகையையும் நூற்றுக்கு 30 விதம் ஆகிகப்படுத்த தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

15 நெசவு தொழிற்சாலைகள், 12 பருத்தி தொழிற்சாலைகள்; 11 பட்டுத்துணி நெசவுச்சாலைகள் 21 செருப்பு தொழிற்சாலைகள்; 17 இறைச்சி பார்சல் செய்கிற தொழிற்சாலைகள்; 23 ஆகாரத் தொழிற்சாலைகள்; 6 சோப்புத் தொழிற்சாலைகள்—இத்தனை தொழிற்சாலைகளையும் புதிதாக ஏற்படுத்தத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இப்போது ரஷ்யாவிலுள்ள இரயில்பாதைகளில் 3,200 மைல் தூரம் மின்சாரவண்டிகள் விடுவதற்கும், 5000 மைல் நீளம் புதிதாக இரயில்பாதை போடுவதற்கும் ஏற்பாடு செய்யப்படும் என்று தெரிகிறது.

ரஷ்யாவிலுள்ள வால்காநதியிலிருந்து மாஸ்கோ ஆற்றுக்கு ஒரு கால்வாயும், வால்கா நதியையும், டான் நதியையும் இணைப்பதற்காக இன்னொரு கால்வாயுமாக இரண்டு புதிய கால்வாய்கள் தோண்டப்படும்.

மின்சார சக்தி உற்பத்தி செய்வதற்காக வால்காநதியின் மீது மிகப்பிரமாண்டமான ஒரு மின்சார உற்பத்திசாலை அமைக்கப்படும்.

50 லட்சம் தொழிலாளிகளுக்குக் கைத்தொழில் பயிற்சி அளிக்கவும், 3 லட்சத்து 40 ஆயிரம் ஸ்பெஷல் வேலைக்காரருக்கு அவர்களுக்கு வேண்டிய விசேஷ கல்வி போதிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

அறியாமையை அதாவது படிப்பில்லாமையை அடியோடு ஒழிப்பதற்காக ஏழுவருடக் கட்டாயக்கல்வித் திட்டம் ஒன்று அமுலுக்குக் கொண்டுவரப்படும்.

விவசாயம் இனிமேல் முழுவதும் பொதுவுடைமைக் கூட்டு முறையிலேயே செய்யப்படும்.

இந்தப்புதிய திட்டத்தில் குறிப்பிடப்பட்ட சாமான்களில் பெரும்பான்மையானவைகளை உற்பத்தி செய்வதற்கு முதல் ஐந்து வருடத்திட்டத்தினால் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுள்ள கைத்தொழில்களே ஆதாரமாக இருக்கும். ஆயினும் பலகோடி டாலர் பெறுமான மோட்டார்வண்டிகளும், விவசாய இயந்திரங்களும், மற்றும் இயந்திரங்களும், இரயில்வே சாமானங்களும் அமெரிக்காவிலிருந்து வாங்கப்படும் என்று தெரிகிறது.

### "இந்தியன் எக்ஸ்பிரஸ்" கருத்து.

இந்தத்திட்டத்தைப் பற்றி "இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகை தனது 19-1-34-உ இதழ் தலையங்கத்திலே பின் வருமாறு எழுதுகிறது:—

இரண்டாவது ஐந்துவருடத் திட்டத்தின் விபரங்கள் வெளி வந்துவிட்டன. அது எவ்வளவு விரிவானது என்பதையும், அதனால் குறிப்பிடப்படுவது என்ன என்பதையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இந்த இரண்டாவது ஐந்து வருடகாலத்தில் சோவியத் ரஷ்யா இரண்டு வேலைகளைச்செய்து முடிக்க எதிர்பார்க்கிறது. அவ்விரண்டு வேலைகளும் ரஷ்யப் புரட்சி ஏற்பட்டிரா விட்டால் செய்யமுடியாத காரியங்களாக இருந்திருக்கும்.

முதலாவது, படிப்பில்லாமையை அடியோடு ஒழிப்பதற்காக ஏழு வருடக் கட்டாயக் கல்வித் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருகிற வேலை. 1917-ம் வருடத்திலே ரஷ்யாவில் படிப்பில்லாதவர்களின் தொகை இந்தியாவிலுள்ள படிப்பில்லாதவர்கள் தொகையிலும் அதிகம் குறைந்ததாயிருக்கவில்லை. 1937-ம் வருடத்திலோ ரஷ்யாவில் படியாதவர்களே இருக்கமாட்டார்கள். ஆனால் இந்தியாவிலோ ஏதாவது ஒரு அற்புதம் நேரிட்டாலொழிய கல்வியற்றவர்கள் தொகை இப்பொழுதுபோல அதிகமாகத்தான் இருக்கும். பாமர ஜனங்களைப் படிப்பிப்பதற்காக சோவியத் சர்க்கார் செய்துள்ள ஆச்சரியகரமான வேலைகளை போல்ஷிவிக் கட்சியாரின் பரம சத்துருக்களும் ஒப்புக்கொண்டுதான் தீரவேண்டும். எல்லாம் பணத்தைப் பொருத்தது என்று பலர் சொல்லலாம். அப்படியானால் முதலில் யுத்தத்தினாலும், பிறகு அரசியல் புரட்சியினாலும் சீரழிந்துபோன ரஷ்யாவிலே எல்லாப் பிள்ளைகளுக்கும் கல்வி கற்பிப்பதற்குப் போதிய உபாத்தியாயர்களைக் கண்டுபிடிக்கவும், அவர்களை வேலைக்கு வைத்து நடத்தவும் எப்படி முடிந்தது? இதற்கு "கல்லாம் பணத்தைப் பொருத்தது" என்று நியாயம் பேசுகிறவர்கள் தக்க சமாதானம் கூறுவார்களா?

இதைக் குறித்து சிறிது சாவதானமாக யோசித்துப் பார்த்தால் இது வெளிக்குத் தோன்றுகிறதுபோல அவ்வளவு கஷ்டமான காரியம் அல்ல என்பது வெளிப்படும். நாட்டிலுள்ள அறியாமை முழுவதையும் ஒழிப்பதற்கு நமது நாட்டிலேயே போதிய படித்த வாலிபர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு உண்ண உணவும், உடுக்க உடையும் சலபமாகக் கிடைத்துவிடுகிறது. ஆனால அவர்களுக்கு நிலங்களும் மற்ற சொத்துக்களும் இருப்பதால் அவர்கள் மற்றவர்கள் உழைப்பினால் சோம்பேறி வாழ்க்கை நடத்துவதற்கு இடமிருக்கிறது.

எவ்வளவு நல்லமுறையில் நியாயமாகப் பரிந்து வேண்டிக்கொண்டாலும் அவர்கள் தாங்கள் அனுபவிக்கும் உணவுக்கும், உடைக்கும் பதிலாக சமூக முன்னேற்ற வேலை செய்ய ஒப்புக்கொள்ளமாட்டார்கள். அவர்களுடைய வருமானத்தை அல்லது தானியத்தை அல்லது பணங்களை கவர்ன்மெண்டாரே வசூல் செய்து, செய்யும் வேலைக்குச் சம்பளங்களாகக் கொடுப்பதானால், தற்போதைய நிலைமையின் மற்ற காரியங்கள் அப்படியே இருந்தாலும் படிப்பில்லாமையை ஒழிக்க ஏற்பாடு செய்யலாம்.

இரண்டாவது, சோவியத் சர்க்கார் 1937-ம் வருடத்துக்குள் விவசாயம் முழுவதையும் பொதுவுடைமைக் கூட்டுமுறையில் நடத்திப் பரீட்சை பார்க்கத் தீர்மானித்திருக்கிறார்கள்.

இது மிகவும் வெற்றிகரமான வேலையாக முடியுமோ, அல்லது இமயமலை போன்ற பெரிய வேலையாக முடியுமோ என்று இப்போது சொல்லுவதற்கில்லை.

மனப்பான்மையைப் பொறுத்தது. கைத்தொழில்களை அரசாங்கத்தார் நடத்தலாம். ஆனால் விவசாயத்தை அப்படி நடத்த முடியாது.

இது விவரித்தற்கரிய விதான

(தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க.)

# வாலிபர்களின் கடமை.

(மருர் தோழர் டி. கிருஷ்ணசாமி)

வாலிபத் தோழர்களே!

தற்காலம் உலகம் இயங்கும் மாதிரியையும், நாகரீகம் விருத்தியடையும் வேகத்தையும் அறிந்திருக்கிறீர்களா? நாகரீகமென்றால் விதவிதமாக ஆடைகளணிவதையும் படாடோபமாக உலாவுவதையுமல்ல நான் கூறுவது. இத்தகைய நிலையில் வாலிபர்களாகிய நம்முடைய கடமைகள் என்னவென்பதை நீங்கள் உணர்ந்திருக்கிறீர்களா? இன்றேல் சிறியேன் கூறுவதைச் சிறிது கேட்பீர்களாக.

## பழைய உலகம்.

"பழைய உலகம்" என்றால் ஆசியா, ஜரோப்பா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா முதலியவைகளைப்பற்றி ஏதோ பூகோளப்பாடம் சொல்லப் போவதாகக் கருதிவிடாதீர்கள். ஏனென்றால் மேற்கூறிய கண்டங்களை பூலோகத்தில் பழைய உலகம் என்று குறிப்பிடுவதுண்டல்லவா! நான் கூறப்போவது அதுவன்று. பழையகாலத்து ஜனங்களின் நிலைமையைப்பற்றியே நான் கூறுகிறேன். முற்காலத்திய ஜனங்கள் ஆலோசிக்கும் ஆற்றலற்றவர்களாகவும்-கண்டதற்கெல்லாம் பயப்படும் சுபாவமுடையவர்களாகவும்- சொன்னதை அப்படியே நம்பிச் செய்பவர்களாகவும் இருந்தனர். சிறிது சூட்சமப் புத்தியுடைய சுயநலமிகளும் சிலர் இருந்தனர். இவர்கள் பாமர ஜனங்களை ஏமாற்றி வேதசாஸ்திர இதிகாச புராணங்களையும் ஜாதி, மதம், பாவம். புண்ணியம, கடவுள் ஆன்மா முதலியவைகளைச் சிருஷ்டித்து அவைகளுக்கு நரகம், சொர்க்கம், மோக்ஷம் முதலியவைகளைக் கற்பித்து ஜனங்கள் பயப்படுமாறு செய்வதோடு நில்லாமல் அவர்களிடமிருந்து பொருள்பறித்துண்டு சுகித்தனர். தங்களுக்குவேண்டிய சகல சௌகரியங்களையும் அமிதமாக அடைந்தானந்தித்தனர். பாமர ஜனங்களும் இவர்கள் பேச்சை நம்பி சுயநலமிகளின் கொடுமைக்காளாகி அடிமைப் படுகுழியில் ஆழ்ந்துகிடந்தனர்-

ஜனங்கள் தற்காலம் படும் கஷ்டங்களுக்கெல்லாம் காரணம் பழைய மத மூடப் பழக்கவழக்கங்களும் சுயநலமிகளின் செய்கைகளுமேயாகும். எல்லா உலகங்களிலும் [எல்லாக் கண்டங்களிலும்) மக்கள் பஞ்சத்தினல் வாடிவதங்குகின்றனா. ஏழைகளின் பரிதாபமான நிலைமையைப் பார்க்க முடியவில்லை, இவர்களின் கதிதான் இப்படியென்றால் மத்திய வகுப்பார்களின் நிலைமை அதனினும் கேடாய் இருக்கிறது. படித்து வேலையில்லாமல் திண்டாடித் தெருவில் நிற்போரும், கைத்தொழில் தெரிந்தும் வேலைகிடைக்காமல் வீணராயிருப்போருமாக பல கோடி மக்கள் தவிக்கின்றனர். பணக்கார நாடுகளென்று கூறப்படும் அமெரிக்கா, பிரான்சு முதலிய நாடுகளிலும் இத்தகைய குறைபாடுகளுக்குக் குறைவில்லை. ஆனால் ஒரு சிலர்மாத்திரம் வயிறு புடைக்கத் தின்று பன்றியென வாழ்கின்றனர். உலகே இவர்களுடையது. உணவு, உடை, நாகரீகம், சுகம், சந்தோஷம யாவும் இவர்களுடையதே. இவர்கள்தான் பணக்கார முதலாளிகளாவர்.

## புது உலகம்.

ஏமாந்தவர்கள் சதா ஏமாந்திருக்க மாட்டார்களல்லவா! பலபேர் விழித்துக்கொண்டுவிட்டனர். சுதந்திரம், சமத்துவத்தின் மூலமே அடையவேண்டியதாகுமென்றும், முதலாளித்துவமாகியதனிவுடமை அழியவேண்டுமென்றும் பொதுவுடமைதான் மக்களுக்கு அவசியமானதென்றும் அவர்கள் முரசறைகிறார்கள். மக்களின் அடிமைத்தனத்திற்கும், ஏழ்மைத்தனத்திற்கும் மதம், ஜாதி, கடவுள், கோவில் முதலியவைகளே காரணமாகையால் அவைகளை அடியோடு அழிப்போமென்று வீரகர்ஜனை செய்கிறார்கள். அந்தோ ஜனங்களில் பாமரர்கள் இத்தகைய நீதிவாதிகளைத் தங்கள் விரோதிகளாகப் பாவிப்பது எத்தகைய பரிதாபம்? வைதீகர்களாயுள்ள சில கற்றறிமூடர்களும், முதலாளித்துவ அரசாங்கத்தினரும் கூட மேற்கூறிய நியாயவான்களைப் பகைக்கின்றனர்.

## உலக முன்னேற்றத்தின் முட்டுக்கட்டைகள்.

மேற்கூறியவர்கள் நீதிவாதிகளை (பொதுவுடமைக் காரர்களை) பகைவர்களாகக் கருதவேண்டிய காரணம் என்ன? தாங்கள் பாமரர்களை ஏமாற்றி அவர்களின் ஊழியத்தினல் உண்டு களிப்பது எங்கே கெட்டுவிடுமோ என்ற பயத்தினல் அவர்கள் மனதறிந்தும் நியாயத்திற்கு விரோதமாக நடப்பதுமன்றி நியாயமாக இருக்கவேண்டுமென்று கூறுகிறவர்களையும் தூஷிக்கிறார்கள். இவர்களை ஆதரிப்பதைப்போல் அராங்கத்தாரும் நடந்துகொள்ளுகிறார்கள். பொதுவுடமைக் கொள்கையை அரசாங்கமும் எதிர்ப்பதோடு அடியோடு அழிக்கவும் முயல்கின்றனர். தங்கள் தனிவுடமைக் கழிவு வந்துவிடுமென்ற பயத்தாலும், அரசாங்க உத்தியோகஸ்தர்கள் யாவரும் ஜாதி மதக் கடவுள் பூஜர்களாயிருப்பதாலும் அரசாங்கத்தார் பொதுவுடமையை எதிர்க்கின்றனர். ஆகையால் அரசாங்க ஸ்தாபனங்களில் பொதுவுடமைக்காரர்களுக்குப் போதிய வலுவிருக்கவேண்டியது அவசியமாகிறது.

தோழர் ம. சிங்காரவேலு அவர்கள் 31-12-33-ல் சென்னைமாகாண நாஸ்திக மகாநாட்டில் அரசாங்க ஸ்தாபனங்கள் பலவற்றிலும் பொதுவுடமையாளர்கள் ஸ்தானங்கள் பெறவேண்டுமென்று வற்புறுத்திக் கூறினார். இதைச் சிலர் ஆட்சேபிக்கின்றனர். இக்கொள்கையை [சட்ட சபையைக் கைப்பற்றுவது] சிலர் பிற்போக்கானதென்றும், ஒருவர் செய்து தோல்வியுற்றதை நாம் அனுசரிப்பது சரியல்லவென்றும் காங்கிரஸ்காரர்கள் இழித்துக் கூறுவார்களாகையால் அதைக் கைக்கொள்ளுதல் தகாதென்றும் கூறுகின்றனர். ஒருவிஷயம் ஒரு இடத்தில் நன்மையைப் பயக்கலாம். மற்றோரிடத்தில் தீமையைப் பயக்கலாம். ஒரு இடத்தில் கெடுதலுற்றதாலேயே அது எவ்விடத்தும் பொருந்தாதென்று கூறிவிடுதல் நலமல்ல. அன்றியும் ஒருவிஷயத்தை மற்றவர்கள் பழிப்பார்களே என்ற பயத்தால் செய்ய வேண்டியிருந்தும் செய்யாதொழிதல் சரியன்று. தோழர் சிங்காரவேலு அவர்கள் நான்கு முக்கிய காரணங்களுக்காக அரசாங்கத்தில் சுயமரியாதைக்காரர்கள் ஆதிக்கம் பெறவேண்டுமென்று கூறுகிறார். 1. பொதுஜன ஊழியத்திற்காகவும், 2. அங்கிருந்துகொண்டு பொதுவுடமைக்கான சட்டங்களை ஏற்படுத்தவும், 3. அவைகளின்மூலம் ஜனங்களின் மூடக்கொள்கைகளைப் போக்கி ஜனங்களை சீர்திருத்தம் செய்யவும், 4. பொதுவுடமையின் விரோதிகளை முழுபலத்தோடு எதிர்க்கவுமாகிய இந்த நோக்கத்தின்மேல் சட்டசபைகளை சுயமரியாதைக்காரர்கள் கைப்பற்றுதல் அவசியமென்கிறார். இது மிகவும் முற்போக்கானதொரு கொள்கையே. சஹகமனம்போன்ற கொடிய வழக்கங்கள் சட்டத்தின்மூலமே ஒழிக்கப்பட்டனவென்பது அங்கை நெல்லியாகும். சட்ட சபைகளைக் கைப்பற்றுவதன்மூலம்தான் அரசாங்கத்தோடு நேர்முகமாய்ப் போரிடக்கூடும்.

நிற்க ஆஸ்திகப் பத்திரிகைகள் பொதுவுடமையின் மற்றொரு விரோதி. பொதுவுடமைப் பத்திரிகைகளைப் பரவச் செய்வதன்மூலமும் ஆஸ்திகப் பத்திரிகைகளின் கட்டுரைகளுக்கு மறுப்பெழுதுவதின்மூல மூலமும் அதை நசுக்கலாகும்.

## வாலிபர்களின் கடமை.

தோழர்களே!

இந்த நிலையில் நீங்கள் செய்யவேண்டுவதென்ன? உங்களுக்குப் பலமும், தைரியமும் வேண்டிய அளவிருக்கின்றன. நம்மூர்களிலிருக்கும் வாலியத் தோழர்களை ஒன்றுசேர்த்து ஒருசங்கம் நிறுவிக்கொண்டு நமது பொதுவுடமைப் பத்திரிகைகளைத் தருவித்து அவைகளைப் பலரும் வாசிக்குமாறு செய்யவேண்டும். ஆஸ்திக எண்ணங்களை அடியோடு விட்டுவிடவேண்டும். நம் வீட்டிலுள்ள இளம் கைம்பெண்களுக்கு மணம் செய்துவைத்தல், காதல்-கலப்பு மணத்தை ஆதரித்தல், மாதர்களுக்குச் சுதந்திரச் சமத்துவக் கல்வி அளித்தல், ஜாதி மத வித்தியாசத்தை அறவேயொழித்தல், கோவிலுக்குப் பிரார்த்தனை, திருவிழா இவைகளின் பேரால் அனாவசியமான செலவுசெய்தலைத் தடுத்தல், வீடுகளில் பண்டிகை முதலியவைகளிலுள்ள நம்பிக்கையையொழித்தல் முதலிய விஷயங்களில் நாம் தீவிர நோக்கமும் பிடிவாதமுடையவர்களாயுமிருக்கவேண்டும். நாமே நடைமுறையில் அனுஷ்டித்துக் காட்டவேண்டும். நமக்கிடையே அனேக தடங்கல்கள் உண்டாகலாம். அவைகளைத் தைரியமாக எதிர்த்துநடக்கவேண்டும்.

மேற்கூறிய கொள்கைகளை நீங்கள் ஜனங்களிடையே அமிதமாகப் பரப்புதல்வேண்டும். நம்முடைய (வாலிபர்களுடைய) முயற்சியில்தானிருக்கிறது, நம்மியக்கத்தின் வெற்றி. நாம் நியாயத்திற்காகப் பாடுபடுகிறோமென்பதை மனதில் வையுங்கள்! ஏழைச் சகோதர சகோதரிகளின் நிமித்தம் எதையும் இழக்காம் தயாராயிருத்தல்வேண்டும். ரஷ்யாவில் எத்தனையோ ஆயிரக்கணக்கான மனிதர்கள் தங்கள் உயிரைக் கொடுத்து சமத்துவ சுதந்திரத்தை அடைந்தார்களென்பதை நீங்கள் மறக்கக்கூடாது.

உலகத்தில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியைக் கவனியுங்கள். திடீரென்று வெகு சீக்கிரத்தில் ஒரு புரட்சி அவசியம் தோன்றியே தீரும் ஏழைகளின் பசி அக்கினிக்கொப்பாய் எரிகிறது. அப் பெரும் நெருப்பு முதலாளி வர்க்கத்தினரையும் தனிவுடமையையும் அவசியம் எரித்துவிடப்போகிறது. அவைகளுக்கெல்லாம் நீங்களே தலைவர்கள். நம்மிடத்திருந்தே 'புரட்சி' தோன்றப் போகிறது. ஒவ்வொரு நிமிடத்தையும் எதிர்நோக்கிக்கொண்டு வரும் பெரும் புரட்சிக்கு நம்மைத் தகுந்தவர்களாக்கிக்கொண்டு முன்னணியில்வந்து நிற்போமாக

மிரட்சி நீங்கி! புரட்சி தோன்றுக!!

---

## தேவை,

எல்லா ஜில்லாக்களின் முக்கிய இடங்களில் பிராஞ்சு ஆபீஸ் திறப்பதற்கு, பிராஞ்சு மேனேஜர்கள் தேவை. மாதச்சம்பளம் ரூபாய் 35. கொடுக்கப்படும். விபரம் வேண்டுவோர் ஆங்கிலத்திலாவது தமிழிலாவது கீழ்கண்ட விலாசத்திற்கு 1¼ அணா ஸ்டாம்புடன் மனுச்செய்யவும்,

மானேஜர்

தி பிரிஸ்டல் டிரேடிங்கம்பெனி (Head Office) தூத்துக்குடி.

## தோழர்கள்.
# ஈ. வெ. ராமசாமி, சா. ரா. கண்ணம்மாள்.
## தண்டிக்கப்பட்டார்கள்.

சுயமரியாதை இயக்கத்தலைவரும், "குடி அரசு" "புரட்சி" ஆசிரியருமான தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்கள்மீதும், அவருடைய சகோதரியும், ஷை பத்திரிகையின் பப்ளிஷருமான தோழர் எஸ். ஆர். கண்ணம்மாள் அவர்கள் மீதும் தொடுத்திருந்த ராஜநிந்தனை வழக்கில் 24—1—34-ந் தேதி காலை 11-மணிக்கு கோவை ஜில்லா மாஜிஸ்டிரேட் கனம் ஜி. டபிள்யூ. வெல்ஸ் ஐ. ஸி. எஸ். தீர்ப்பு கூறினர்.

சென்ற அக்டோபர் மாதம் 24-ந் தேதி "குடி அரசு" பத்திரிகையில் வெளியான "இன்றைய ஆட்சி ஏன் ஒழியவேண்டும்? என்ற தலையங்கத்திற்காகவே அவர்கள்மீது வழக்குத்தொடர்ந்ததின் முக்கிய கருத்தாகும்.

மாஜிஸ்டிரேட் தீர்ப்பில், இருவரும் குற்றவாளிகளெனக்கூறி தோழர் ராமசாமி அவர்களுக்கு 6 மாதம் வெறுங்காவல் தண்டனையும், 300 ரூபாய் அபராதமும், அபராதம் செலுத்தத்தவறினல் மீண்டும் 1 மாதம் சிறைதண்டனையும் விதித்தார். தோழர் கண்ணம்மாளுக்கு 3 மாதம் வெறுங்காவல் தண்டனையும், 300 ரூபாய் அபராதமும், அபராதஞ் செலுத்தத்தவறினல் மீண்டும் 1 மாதம் வெறுங்காவல் தண்டனையும் விதித்தார். இவர்கள் இருவரையும் பி. வகுப்பு கைதியாக நடத்த உத்திரவிட்டார்.

அதன்பின்பு தோழர் ஈ.வெ. ராமசாமியவர்கள் சகோதரர் தோழர் ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்களுடனும் தோழர் எஸ். ராமசாமி அவர்களுடனும் தோழர்கள். சி. நடராஜன், ப. ஜீவானந்தம் முதலிய தோழர்களுடனும் இயக்க சம்மந்தமாக சிறிதுநேரம் சம்பாஷித்தார்கள். இனி "புரட்சி"யை தொடர்ந்து நடத்தும் பெரும் பொறுப்பை தோழர் ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். 12-30 மணிக்கு சிரித்தமுகத்துடன் தலைவர்கள் வண்டியில் சிறைக்கு பிரயாணமானர்கள்.

இந்நிகழ்ச்சியைக் கவனிப்பதற்கு ஏராளமான ஜனங்கள் கூடி இருந்தார்கள் அவர்களில் முக்கியமானவர்கள் வருமாறு.

தோழர்கள்— எ. கிருஷ்ணசாமி பி. ஏ., ஈ. வெ. கிருஷ்ணசாமி, ஈ. வெ. கே. ரங்கநாயகி, எஸ். ராமசாமி, சி. நடராஜன், ஏ. ஆர். சிவானந்தம், எஸ். வி. லிங்கம், ப. ஜீவானந்தம், அ. பொன்னம்பலம், ஏ. பாபுசாமி, டி. டீ. கோபால், ஈ. வெ. ஜெயராம், சங்கரலிங்கம், ரங்கராஜ், செல்வராஜ், எஸ். ஆர். சுப்பிரமணியம், மஞ்சுளாபாய், என். கரிவரதசாமி, ஏ. சங்கரன் இன்னும் பலருமாவார்கள். ஜட்ஜ்மெண்ட் காப்பிகள் அவசரமாக வேண்டுமெனக்கேட்டுக்கொண்டிருந்தும் இன்னும் கிடைக்காததால் அது அடுத்தவாரமே பிரசுரிக்கப்படும்.

## சென்னை மாகாண சமதர்ம முதலாவது மகாநாடு.

### மன்னர்குடியில் மார்ச் மாதத்தில் நடைபெறும்.

பிப்ரவரி மாதம் இரண்டாவது வாரத்திலிருந்து தோழர்களான ப. ஜீவானந்தம், ஏ. பொன்னம்பலனர், கே. ராமையா, காளியப்பன் எஸ். வி. லிங்கம் இவர்கள் தஞ்சை ஜில்லாவில் முக்கிய இடங்களில் மகாநாடு சம்பந்தமாய் சுற்றுப்பிரயாணம் செய்வார்கள். பல இடங்களில் பொதுக்கூட்டங்கள் நடைபெறும். இங்ஙனம்,

காரியதரிசி.

## விருதுநகரில்
# காந்திபகிஷ்கார வெற்றி
## வரவேற்பு கமிட்டியின் சூட்சி பலிக்கவில்லை.

"கடவுள், மதம், ஒழிக"

"கதர், காந்தி, காங்கிரஸ், கடவுள், வேண்டாம்"

(நமது விசேஷ நிருபர் தந்தி செய்தி.)

25-1-34 வியாழக்கிழமையன்று காந்தியார் இந்நகருக்கு விஜயம் செய்ய ஏற்பாடாகியிருந்தது. அவர் இங்குவருவதற்கு இரண்டு மணி நேரத்திற்குமுன்பிருந்தே காந்திபகிஷ்காரர்கள் வெகு உற்சாகத்தோடு ஆரவாரித்துக் கொண்டிருந்தார்கள். கருப்புக்கொடிகளுடன் "கடவுள்மத" விரோத வாக்கியங்களைக் கொண்டும் "கதர்—காந்தி காங்கிரஸ்" வேண்டாம் என்ற மொழிகளைக்கொண்டும் முக்கிய வீதிகளின் வழியாக ஊர்வலமாகச் சென்று; கடைவீதி வழியாக வர ஏற்பாடாகியிருந்த காந்தியாருக்கு தங்களின் "கடவுள் மத"விரோத உணர்ச்சிகளை வெளிக்காட்டிக்கொள்ள கடைவீதிக்கும் சென்று பெரிதும் உற்சாகத்தோடு "காந்தியம் வீழ்க" என்று கோஷித்துக் கொண்டிருந்தார்கள்.

இந்த காந்தீயத்தின் பேரெதிர்ப்பைக்கண்ட காந்தி பக்தர்கள் காந்தியாரை நகரின் எல்லையிலேயே நிறுத்திவிட்டு "காந்தியார் இன்று வரவில்லை" "நாளையே வருகிறார்" என்று விளம்பரப்படுத்திவிட்டார்கள். இதை பொதுமக்களும் மற்றவோரும் நம்பி தங்கள் தங்கள் வீடுகளுக்கு திரும்பினர். காந்தியார் வரவில்லை! என்ற எண்ணம் மக்கள் மனதில் ஒரு மணிநேரம் ஊறியபிறகு காந்தி பக்தர்கள் திடும்பிரவேசமாக காந்தியை நகரின் வழியாக புகச்செய்து உடனே சிறிய பணமுடிப்பு அளித்து திருப்பி அனுப்பிவிட்டார்கள். என்றாலும் சுயமரியாதைக் காரர்களும் காந்தியாரை சந்தித்து தங்களின் காந்தீய விரோத உணர்ச்சி முழுவதையும் பகிரங்கப்படுத்தி தங்களின் அறிக்கைகளை சமர்ப்பித்தனர். காந்தியாருக்கு எந்த பொதுக்கூட்டமுமில்லை காந்தி பகிஷ்காரர்கள் வெற்றி பெற்றார்கள். இவ்வெற்றிக்கு முக்கியஸ்தர்கள் சமதர்ம சங்கத்தார்களே.

## முனிசிபல் கமிஷனர் நியமனம்.

ஈரோடு முனிசிபல் செக்ரிட்டரி தோழர் கே. ராமசாமி அவர்கள் வேலூர் முனிசிபல் கமிஷனராக நியமிக்கப்பட்டிருக்கிறார், பிப்ரவரிமாதம் முதல்வாரத்தில் வேலை ஒப்புக்கொள்வாரெனத் தெரிகிறது, [நமது நிருபர்]

### ஒரு திருத்தம்

சென்ற வார இதழ் 7-ம் பக்கத்தில் உள்ள நன்கொடை செய்தியில் தோழர். எம். டி. வி. சிதம்பரநாடார் என்றிருப்பதை கே. டி. ஓ. சோமசுந்தர நாடார் என்று திருத்தி வாசித்துக் கொள்ள வேண்டும்.

## பொதுக்கூட்டம்.

28-1-34-௳ ஞாயிறன் றுமாலை 6-மணிக்கு கடைவீதியிலுள்ள சுயமரியாதைச் சங்கக் கட்டிடத்தில் சிறைபுகுந்த தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களையும், தோழர் எஸ். ஆர். கண்ணம்மாளவர்களையும் பாராட்ட ஓர்பொதுக் கூட்டம் நடைபெறும், தோழர்கள் கே. எம். பாலசுப்ரமணியம் பி. ஏ. பி. எல். டாக்டர் கிருஷ்ணசாமி, சி. நடராஜன், எஸ். வி. லிங்கம் முதலியவர்கள் உபந்நியாசம் செய்வார்கள்.

தோழர்கள் அனைவரும் ஏராளமாக வருக.

சுயமரியாதை வாலிபர் சங்கம், ஈரோடு.

# புரட்சி

ஈரோடு 1934-ஜனவரி மீ 28-உ

## ஈ. வெ. ராமசாமிக்கும், ச.ரா. கண்ணம்மாளுக்கும் "ஜே."

(ஈ. வெ. கி.)

நமதியக்கங் கண்ட தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள்மீதும், தோழர் சா. ரா. கண்ணம்மாள் அவர்கள் மீதும் சென்ற அக்டோபர் மாதம் 29-ந் தேதியில் "குடி அரசி"ல் எழுதிய "இன்றைய ஆட்சி ஏன் ஒழியவேண்டும்?" என்கிற தலையங்கத்தின் காரணமாக சர்க்காரால் தொடரப்பட்ட ராஜநிந்தனை வழக்கை விசாரித்துவந்த கோவைஜில்லா நீதவான் ஆகிய தோழர் ஜி. டபள்யூ. வெல்ஸ், ஐ. சி. எஸ். அவர்கள் சென்ற ஜனவரி மாதம் 24-ந் தேதியன்று கீழ்க்கண்டவாறு தீர்ப்பளித்திருக்கிறார்.

அதாவது தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களுக்கு 6-மாதம் வெறுங்காவல் தண்டனையும், 300-ரூபாய் அபராதமும் தோழர் சா. ரா. கண்ணம்மாள் அவர்களுக்கு 3-மாதம் வெறுங்காவல் தண்டனையும், 300-ரூபாய் அபராதமும்; மேற்படி அபராதத்துகை செலுத்தாதபக்ஷம் மேற்கொண்டு தலா ஒவ்வொருமாதத் தண்டனையென்றும் தீர்ப்பளிக்கப்பட்டு காவலிலிருந்துவருகிறார்கள். எழுதப்பட்ட விஷயம் தப்போ, சரியோ என்றாவது; தண்டிக்கப்பட்ட விஷயம் தப்போ, சரியோ என்றாவது தற்போது நாம் கூற முன்வரவில்லை. ஏனெனில் அவைகளை வாசகர்களே நன்கறிந்திருக்கலாமென்கிற நம்பிக்கையேயாகும்

ஆயினும் நமதியக்கத்தவர்களும் நமதியக்கத்தில் அபிமானமும், அனுதாபமும் கொண்டவர்களும் இனி என்ன செய்யவேண்டுமென்பதுதான் தற்போது எழவேண்டிய முக்கிய பிரச்சினையாகும். இவ்விதப்பிரச்சினையைத் தீர்க்கத் தற்சமயத்தில் நாம் ஆராய்ந்து அதற்கேற்றபடி நடத்தவேண்டிய பொறுப்புக்குட்பட்டிருக்கிறோம் என்றால் அதுமிகையாகாது. அதாவது நமது தமிழ்நாட்டில் நமதியக்கத்தின்பேரால் நிறுவப்பட்டிருக்கும் சங்கங்களின் எண்ணிக்கையானது நமது காரியாலயத்திற்கு இதுகாறும் கிடைத்திருக்கும் தகவல்களிலிருந்து அறியக்கூடியது சுமார் நூற்றிப்பத்து என்பதாகும், நமது தோழர்கள் சிறைப்பட்டதிலிருந்து இனிமேல் ஒவ்வொரு கிராமங்கள்தோறும் நமதியக்கச் சங்கங்கள் நிறுவப்பட்டு அவைகளுக்குத் தலைமையாக ஒருசங்கம் அவைகளின் தாலூக்கா தலைநகரில் ஏற்படவேண்டும். அப்படி ஏற்படுகிற தாலூக்காக்களின் சங்கங்களுக்குத் தலைமைச் சங்கமாக தாலூக்காக்களின் ஜில்லாக்களின் தலைநகர்களில் தலைமைச் சங்கங்களாக நிறுவப்பட்டு ஒவ்வொரு சங்கங்களிலும் அங்கத்தினர்களை ஏராளமாகச் சேர்க்கப்பட்டும் பிரசாரங்களை முன்னிலும் அதிகமாக மக்களுக்கு சமதர்ம உணர்ச்சியுண்டாகும்படியாகவும் சர்க்கார்மீது எவ்வித துவேஷ உணர்ச்சி உண்டாக்காமலும் நமதியக்க உணர்ச்சியையே முன்னிலுமதிக ஊக்கங்களுடன் முன்னேறும்படி உண்டாகுமாறு பிரசாரம் செய்துவரவேண்டும். அதனால் மக்களுக்குள் ஒருவித வித்யாசமற்ற ஒற்றுமையை உண்டாக்கி அறியாமையையும், அடிமைப் புத்தியையும், மூடப் பழக்கவழக்கங்களையும் வேரோடு களையும்படியான திறன் உண்டாகும்படிக்கும் பிரசாரங்கள் நடைபெற வேண்டியதே முக்கியமான கடமையாகும்.

அப்பொழுது தான்நமதியக்கத் தத்துவங்களையும், கொள்கைகளையும் சர்க்கார் உள்ளபடி அறிந்து தாம் (சர்க்கார்) நமதியக்கத்தின் பேரில் கொண்டுள்ள தப்பபிப்பிராயங்களை மாற்றிக்கொள்ளவும் நம்முடன் சேர்ந்துழைத்து நமது இயக்கத்திற்கேற்ற சட்டங்களையும் திட்டங்களையும் உண்டாக்க முற்படவும் எத்தனிப்பார்கள். நமது நாட்டு மக்களுக்கு ஒருவிதப்புத்துணர்ச்சியும் உண்டாகலாம்.

நமதியக்கத்தின் கொள்கைகளையும், தத்துவங்களையும் நம் மக்களிடையில் பரப்பி வருவதில் செய்யவேண்டிய பிரசாரத்தின் மூலமும், எழுத வேண்டிய கட்டுரைகள் முதலியவைகளின் மூலமும் நமக்கேற்படுகிற அனேகமாயிரக்கணக்கான எதிர்ப்புகளுக்கும், முட்டுக்கட்டைகளுக்கும் சர்க்கார் தண்டனை முதலிய இன்னல்களுக்கும் எதிர்பார்த்துத்தயாராகவுள்ள தியாகத்தோடுள்ளவர்களுக்கே தான் அவைகள் கைகூடிவரும் என்பது ஒவ்வொரு இயக்கத்தின் ஸ்தாபகர்களுடைய சரித்திர வாயில்களால் நன்கறிந்தவைகளானபடியால் அதை நாம் இங்கு சொல்லத்தேவை இராதென்றே நினைக்கிறோம். ஆகையால் நமதியக்கத்தத்துவங்களையும், கொள்கைகளையும்நம்நாட்டுமக்களிடையில் பரப்பி அவர்கள் யாவரும் மற்ற நாட்டு சமதர்ம இயக்கத்தவர்களுடன் சமமாக பசிதரித்திரம் அறியாமை அடிமைத்தன்மைமுதலியபிணிகள் அணுகாமல் சுகமாக அதாவது செல்வவான்களுக்கொப்ப தங்கள் வாழ்க்கையை நடத்தி சுகம்பெற்று வாழ்ந்து வரவேண்டுமென்கிற ஒரு கருத்து கொண்டுதான்; தமது உடல்பொருள் ஆவிகளைத்துறந்து மன மொழி காயங்களால் இராப்பகலன்றி உழைத்து வந்தவர்கள் இன்று அதே காரணத்திற்காக சிறையிலிருக்க நேர்ந்தருக்கிறது, என்றால் எந்த இயக்கத்திற்காகவும் எந்தக்கொள்கைக்காகவும், எந்த எண்ணத்திற்காகவும் எந்த நலன்களுக்காகவும் சிறைப்பட்டார்களோ அந்தந்த கொள்கையும், எண்ணமும் நலன்களும் நம்நாட்டு மக்களுக்கு உண்டாகி வாழவேண்டும் என்கிற எண்ணமுடைய ஒவ்வொருவரும் இனிச்செய்ய வேண்டியதென்னவென்பதில் தங்கள் தங்கள் கருத்தைச்செலுத்திப்பார்த்தால் எவ்வித முன்னேற்றங்களுக்கும் சங்கங்களும், பிரசாரங்களுமே உற்றதுணையாகும். ஆகையால் அவைகளை முன்தெருவித்துக்கொண்டபடி நிறுவி பிரசாரமூலம் நமது மக்களுக்கு விடுதலையளிக்குமாறு நமதியக்க தோழர்களையும் நமதியக்கத்தில் அனுதாபமும், அபிமானமும் உள்ள தோழர்களையும் வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மற்றும் நமது கொள்கை சமதர்மமும் சமத்துவமுமானதற்கேற்றபடி நமதியக்கத்தவர்களும் ஒருவருக்கொருவர் சமானமானவர்களே யாவர்கள். நமது ஈ. வெ. ரா. உடனுடன் சா. ரா. க. வுடனும் மற்றுமுள்ள இயக்கத்தவர்களும் சமமேயாவார்களாகையால் தற்பொழுது நமதியக்கப்பிரசாரங்களிலும்மற்ற நிர்மாண வேலைத்திட்டங்களிலும் ஒரு ஈ.வெ. ராவும் சா.ரா. க. வும் இல்லாதபோது நமதியக்கத்திலுள்ள அனைவர்களும் அவர்களைப்போலராகி அவர்கள் தறபோது நம்மிடையிலில்லாத குறையை நிவர்த்திக்க முற்படுவார்களென்றே நம்புகிறோம்.

## நாயக்கர் சிறைபட்டார்.

"குடி அரசு" ஆசிரியர் ஸ்ரீ. ஈ. வெ. ராமசாமி நாயக்கர் சிறை தண்டனைப் பெற்றிருக்கும் விவரத்தை மற்றொரு விடத்தில் காணலாம். சென்ற அக்டோபர் மாதம் "குடி அரசு" பத்திரிகையில் வெளியான தலையங்கம் "ராஜத்துரோக" முள்ளதென்ற குற்றத்திற்காக, கோயமுத்தூர் ஜில்லா மாஜிஸ்திரேட் இவ்வழக்கை விசாரித்து ஸ்ரீ. நாயக்கருக்கு 6 மாதம் வெறுங்காவலும், 300 ரூ. அபராதமும், அவருடைய சகோதரி ஸ்ரீமதி. கண்ணம்மாளுக்கு 3 மாதம் வெறுங்காவலும், 300 ரூ. அபராதமும் விதித்திருக்கிறார். ஸ்ரீ. நாயக்கர் தமிழ் தேசத்திற்கு செய்துள்ள ஊழியத்தை ஒருவரும் மறந்திருக்கமுடியாது. பெரும் தன வந்தராகவும், ஈரோடு முனிசிபல் சேர்மன், தாலூக்கா, ஜில்லா போர்டு மெம்பர் ஆகிய பதவிகளை வகித்து உல்லாசமாயிருந்த ஸ்ரீ. ராமசாமி நாயக்கர் 1915ம் வருஷம் முதற்கொண்டு, தேசிய இயக்கத்தில் ஈடு பட்டார். கோயமுத்தூர் ஜில்லா மகாநாட்டிற்கும், சென்னை மாகாணச் சங்க மகாநாட்டுக்கும் 1915, 1917 ஆகிய வருஷங்களில் வரவேற்புத் தலைவராயிருந்து நாயக்கர் செய்த சேவைகளை யாரும் அறிவார்கள். பிறகு காங்கிரசில் சேர்ந்து ஒத்துழையாமைப் போராட்டத்தில் முன் அணியில் நின்று அவர் தொண்டாற்றியதை நாம் எடுத்துக் காட்ட வேண்டியதே இல்லை. 1924ம் ஆண்டில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்குத் தலைவராகவும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் மெம்பராகவும் இருந்து நாயக்கர் நல்ல வேலைகளைச் செய்துள்ளார். தீண்டாமையைத் தொலைக்க, வைக்கத்தில் சத்தியாக்கிரகம் செய்து சிறைப்பட்ட பாக்கியம் பெற்ற தமிழ்த் தலைவர் நாயக்கர் ஒருவரே யாவர். அரசியல் போராட்டத்தில் அவர் சிறைபட்டு கோயமுத்தூர் சிறையில் 1922-ம் ஆண்டில் தவம் செய்தார். பிறகு காங்கிரசிலிருந்து விலகி ஸ்ரீ. வரதராஜலுநாயுடு உள்பட எல்லா தேசியவாதிகளையும் எதிர்த்து பிரசாரம் செய்ததும், "சுயமரியாதை" இயக்கத்தை அவர் தோற்றுவித்ததும் யாவருக்கும் தெரிந்த விஷயமே யாகும். ஐரோப்பாவில் யாத்திரை செய்து, ருஷியாவை தரிசித்ததின் பயனாக "பொது உடமை"க் கொள்கையில் இன்று வெகு தீவிரமாக இறங்கியிருக்கின்றார், அவருக்கும்,நமக்கும் மாறுபட்ட கருத்துகள் என்ன விருப்பினும், தமக்கு நியாயமென்று பட்ட கருத்துகளை அஞ்சாது வெளியிடுவதில் ஸ்ரீ. நாயக்கர் முதல் ஸ்தானம் பெற்றவரென்பதை ஒருவரும் மறுக்க முடியாது. சமய—சமூக—அரசியல் துறைகளில் ஸ்ரீ. நாயக்கர் செய்துள்ள தியாகமும், ஊழியமும்,

## தோழர் K. ராமசாமி.

நமது ஈரோடு முனிசிபல் கவுன்சில் செக்ரிடரி தோழர் K. ராமசாமி [முதலியார்] அவர்கள் அடுத்த பிப்ரவரி மாத முதல் வேலூர் முனிசிபாலிட்டிக்குக் கமிஷனராக சென்னை சர்க்காரால் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார் என்ற செய்தி கேட்டுப் பெரிதும் சந்தோஷமடைகிறோம்.

தோழர் K. ராமசாமி அவர்கள் சென்ற 10-வருஷங்களாக நமது ஈரோடு முனிசிபாலிட்டியில் நல்ல தேர்ந்த அனுபவம் பெற்றவர். ஈரோடு நகரின் உயரிய மேம்பாட்டிற்கும் தண்ணீர் வசதிக்கும், சுகாதார நலனுக்கும், உல்லாசகாலப் போக்குக்கான வசதிகளுக்கும் தகுந்த நிர்மான வேலைகளைச் செய்தவராவர். இவர் கீழ்தர முனிசிபல் ஊழியர்களின் மேம்பாட்டிற்கு அரும்பாடுபடுபவர். முனிசிபல் போன்ற ஸ்தலஸ்தாபன கீழ்தர ஊழியர்களுடைய உத்தியோகத்துக்கும், சந்தோஷ வாழ்வுக்கும் சர்க்காரின் உத்தரவாதம், அவசியம் வேண்டற்பாலது என்ற உயரிய கிளர்ச்சியில் ஈடுபட்டவராவர். இவர் ஈரோடு நகர மக்களின் நன்மதிப்பையும், முனிசிபல் கவுன்சிலின் முழு நம்பிக்கையையும்பெற்றவர். ஆகவே இப்பேர்ப்பட்ட தோழர் K. ராமசாமி அவர்கள் நமது ஈரோடு முனிசிபாலிட்டியை விட்டுப் பிரிகிறார் என்ற முறையில் வருந்துகிறோமென்றாலும் அவர் வேலூர் முனிசிபாலிட்டியின் கமிஷனர் பதவிக்குச் சென்னை சர்க்காரால் உயர்த்தப்படுகிறார் என்ற முறையில் நாம் சந்தோஷப் படுவதோடு அவர் மென்மேலும் நல்ல பதவிகள் பெற்று நாட்டுமக்களுக்கு ஸ்தலஸ்தாபன இலாகாவில் நலன் பல செய்ய இச்சிக்கின்றோம்.

---

அவர் பட்டுள்ள கஷ்டங்களும் இத்தேசத்தினர் ஒருநாளும் மறக்க முடியாதென்பதே நமது கருத்தாகும். பலவித ரோகங்களுக்குட்பட்டு, வயது சென்ற இக்காலத்தில் அவரை சிறைக்கனுப்பியது சர்க்காருக்கு அழகல்லவென்றே கூறலாம். கண்மூடித்தனமான பழைய ஆட்சி முறைகள் முறிந்து, புதிய அரசியல் அமையப்போகும் இச் சந்திகாலத்தில், அரசாங்கத்தை தூஷித்ததாக ஒருவர்மீது குற்றம் சாட்டுவதும், அதற்காக தண்டிப்பதும் சிறுபிள்ளைத்தனமேயாகும். காலதேச வர்த்தமானத்தை அறிந்து நடந்துகொள்ளும் நல்லறிவு சர்க்காருக்கு என்றுதான் உண்டாகுமோ தெரியவில்லை. ஸ்ரீ. ராமசாமி நாயக்கரையும், அவருக்குத் துணையாக விருக்கும், அவருடைய சகோதரி கண்ணம்மாள் அவர்களையும், மனப்பூர்வமாக வாழ்த்துகிறோம்.

(தமிழ்நாடு தலையங்கம்.)

---

## தோழர். ஜே. கிருஷ்ணமூர்த்தியின் கருத்துகள்.

### சுயமரியாதை போக்கு

கொழும்பில் சென்ற சில தினங்களுக்கு முன்பு "வீரகேசரி" பத்திரிகை நிருபர் தோழர். ஜே. கிருஷ்ணமூர்த்தியை பேட்டிகண்டு பேசினர். அப்போது அவர் சில கேள்விகளுக்கு பதிலளித்தார்.

கேள்வி:- இந்தியாவின் தற்கால அரசியல் நிலைமையைப்பற்றி என்ன கருதுகிறீர்கள்?

தோழர் கிருஷ்ணமூர்த்தி:-இப்போது இந்தியாவைப்பற்றி தவருன கருத்துக் கொள்ளப்பட்டிருக்கிறதென்றே நான் அபிப்பிராயப்படுகிறேன். தேசீயம் உண்மையில் ஒரு சாபமாகவே இருக்கிறது. அது ஒவ்வொரு பிரச்சினையையும் தீர்த்துவைக்காதென்பது நிச்சயம். இந்தியாவை உலகத்தில் ஒரு தனி நாடாகவோ அல்லது ஒரு பாகமாகவோ கருதுவது தவறு. ஒவ்வொரு தேசமும் ஒன்றையொன்று சம்பந்தப்பட்டிருக்கிறதென்பதுதான் எனது அபிப்பிராயம். ஆகைபால் இந்தியாவை மட்டும் தனியாகப் பிரிக்கமுடியாது இந்திய தேசீயத்தைப்பற்றி பேசுவதெல்லாம் புத்திகெட்டத் தனமாகும். ஒவ்வொரு தேசத்துக்கும் சொந்தமான தேசீயக் கொள்கையுண்டு. ஒவ்வொரு தேசமும் யுத்தத்துக்கு ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறது. தேசீயம் முடிவில் மனிதர்களை யுத்தத்துக்குத்தான் வழி காட்டும்.

### இந்திய சுயாட்சி.

கேள்வி:- இந்தியா சுயாட்சியைப் பெறும் முயற்சிகளைப்பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?

பதில்:- சுயாட்சி என்பதற்கு தனித்திருப்பது என்று பொருள் படுத்தப்படுமாயின் அதை நான் நிச்சயமாக எதிர்த்திருக்கிறேன். உலகம் முழுவதும் ஒன்று பட்டுக்கொண்டிருக்கையில், இந்தியாவை மட்டும் தனித்திருக்கும்படி செய்வது முட்டாள்தனமாகும். அதை சகிக்கவும் முடியாது. தனித்திருக்க வேண்டுமென்ற கொள்கை ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்பு இருந்தாலும் கூட அத்தகைய கொள்கை இப்போதில்லை. அது இல்லவேஇல்லை அக்கொள்கையையே நான் வெறுக்கிறேன்.

### பொதுஜன அபிப்பிராய மில்லை?

இந்தியாவில் பொதுஜன அபிப்பிராயமென்பதேயில்லை. துவேஷமே ஒவ்வொருவரிடம் குடிகொண்டிருக்கிறது. இந்தியா ஒன்று பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக் குட்பட்டிருக்கவேண்டும், அல்லது அதற்கு வெளியே இருக்கவேண்டும். ஆகைபால் இப்போதுள்ள கிளர்ச்சியின் நோக்கமே எனக்கு விளங்கவில்லை. இது தவறானகிளர்ச்சி என்பதே எனது கருத்து. இந்தியாவில் இப்போது ஆயிரக்கணக்கான ஜனங்கள் பட்டினியால் மடிகின்றனர். வெள்ளை முதலாளிகளின் ஆட்சிக்குப் பதில் கருப்பு முதலாளிகளின் ஆட்சியை ஏற்படுத்தி அதன் மூலம் இப்பிரச்சனையைத் தீர்க்கப் போகிறார்களா? சூறையாடுதலை ஒழிக்கும்கொள்கையுடனேயே இப்பிரச்னையைத் தீர்த்துவைக்கவேண்டியது அவசியமாகும். இதற்கு பொதுஜன அபிப்பிராயத்தையுண்டுபண்ணுவதே சிறந்த வழியாகும்.

---

## நாஸ்திக வாதம்.

(கிளிக்கண்ணி, மெட்டு)

1. கடவுள் எனும்சொல் வெறும்
கற்பனைச் சொல் ஆகுமடா
திடமுடன் 'டுடுட்டு' வென்றால்—மனிதா!
தெரியும் பொருளேதடா?

2. கல்லில் ஒரு கடவுள்
கருத்தில் ஒரு கடவுள்
சொல்லில் ஒரு கடவுள்—மனிதா!
தொட்ட தெல்லாம் கடவுள்

3. அர்த்தமில்லாக் கடவுள்
அனர்த்தம் செய்யுங் கடவுள்
மெத்த இம் மேதினியில்—மனிதா!
வீண் வீணென்றே உமிழு

4. எட்டாக் கடவுளென்று
எட்டிப் பிடிப்பதன்றோ
முட்டாள்கள் ஆஸ்திகர்தான்— மனிதா!
முற்றும் முரண்பாடடா

5. உழைப்பு செல்வம் காலத்தை
உண்டு சும்மாவிருக்கும்
பிழைப்புத்தான் 'கடவுட்'கென்றால் —மனிதா!
பிசகென்ன நாஸ்திகத்தில்

6. ஏழைபுலகை வாட்டும்
ஈனக் கடவுளைத்தான்
ஆழக்குழி வெட்டியே—மனிதா!
அமிழ்த்திப் புதைத்திடடா

7. அறிவியல் அன்றும் இன்றும்
ஆஸ்திகம் காத்ததில்லை
குறி, சட்டம், ஸ்தாபனத்தால் —மனிதா!
கொடுமதம் காத்ததடா

8. 'அரிசிவன் அல்லாப்ரம்மம்'
அருஞ் சமரிட்டதாலே
சொரிந்தனர் மக்கள் ரத்தம்—மனிதா!
சொல்லக் கொதிக்குதடா

9. அடிமை வறுமை பஞ்சம்
அநியாயம் மோசநாசம்
மிடிமையும் 'கடவுளி'ன் மேல்—மனிதா!
வேர்கொள்ளக் கண்டோமடா

10. மனிதன் மனிதனுக!
மதங்கள் கடவுள் வீழ்க!
புனிதப் பொதுவுடைமை—மனிதா!
புது உலகம் வாழ்கவே.

ப. சீவானந்தன்.

## பாதிரிகள் மான நஷ்ட வழக்கு.

### தோழர் லகாஷ் அப்பீல் முடிவு.

சிலகாலத்துககுதிருச்சிஞப்பள்ளியில் நடந்த தீண்டாமை விலக்கு மகாநாட்டில் தலைமை வகித்த புதுச்சேரிகலாநிதி அச்சுக்கூடசொந்தக்காரர்கள் தோழர் லகாஷ் தமது தலைமை உரையில், கிறிஸ்தவர்களுக்குள் நடைபெற்றுவரும், பாவ சங்கீர்த்தனம் என்ற சம்பிரதாயத்தை தாக்கிப் பேசினதாகஅவர்மீது புதுச்சேரியைச் சேர்ந்த ரோமன் கத்தோலிக்க பாதிரிமார்கள் மூன்றுபேர்மானநஷ்ட வழக்குத் தொடர்ந்திருந்தனர்.

கீழ்க் கோர்ட்டார் அந்த வழக்கில், தோழர் லகாஷ் குற்றவாளி என்று தீர்ப்புக் கூறி, அவருக்கு ஒரு மாத வெறுங்காவலும்,200 பிராங் அபராதமும் தணடனை விதித்ததுடன் வாதிகள் மூன்றுபேருக்கும் தலைக்கு 300 ரூபாய் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்றும் உதரவு செய்தனர். அதற்கு மாருக தோழர் லகாஷ் புதுச்சேரி ஹைகோர்ட்டில் அப்பீல்செய்தார்.

அப்பீலில்,எதிரியின்பேச்சு பொதுவான தன்மைஉடைய தென்றும், எந்த தனி மனிதனையும் தாக்கிப் பேசப்படவில்லை. என்றும், வாதிகள் எல்லாப் பாதிரிகள் சார்பாகவும் வழக்குத் தொடராமல் தங்கள் சொந்தப் பேரால் தாவா செய்திருப்பதால் அவர்கள் வழக்குக்கு ஆதாரமே இல்லை என்று எதிரி பக்கமாக வாதிக்கப்பட்டது. மேலும், எதிரியின் பேச்சு குற்றமுள்ளதென்றே வைத்துக்கொண்டாலும் அது புதுச்சேரியில் நடைபெருமல், பிரசங்கம் செய்யப்பட்டதிருச்சிஞப்பள்ளியில் நடைபெற்றதாலும், அந்தப் பிரசங்கத்தின் காப்பிகள் இரண்டொன்றை புதுச்சேரியில் பரப்பினதிஞலே அது சட்டப்படி குற்றமாகாதாகையாலும் வாதிகள் கொண்டுவந்திருக்கும்வழக்குக்குத் தக்க ஆதாரம்இல்லை என்றும் வாதிக்கப்பட்டது.

ஹைக்கோர்ட் ஜட்ஜிகள் இரு தரப்பு நியாய வதங்களேயும் கேட்டபின் கீழ் கோர்ட்டில் விதிக்கப்பட்ட ஒரு மாத வெறுங்காவல் தண்டனையை பெரங்கர் சட்டம் "என்பதின் படி குறைத்ததுடன், வாதிகள் மூன்று பேருக்கும் தலைக்கு 300 ரூபாய் நஷ்டஈடு கொடுக்க வேண்டியதை தலைக்கு 75ரூபாயாகக் குறைத்துத்தீர்ப்பு செய்திருக்கிருர்கள், அபராதம் மாத்திரம் அப்படியே உறுதிப்படுத்தப்பட்டது.

பெரங்கர் சட்டம் என்முல் குற்றவாளி ஷை தண்டனையைஐந்துவருடகாலம் அனுபவிக்க வேண்டியதில்லை. அந்தக்காலத்தில் குற்றவாளி ஷை தண்டனை பெற்ற குற்றம் போன்ற குற்றத்தை செய்யாதிருப்பாராயின் ஷைகாலவரைக்கும் பின் அந்தத் தண்டனை அமுலுக்கு வராது. இது தான் பெரங்கர் சட்டம் என்பதின் நடைமுறை. தோழர் லகாஷ் பக்கமாய் அட்வகேட் தோழர் ஜே. சவரி நாதனும், வாதிகளுக்காகப்புதுச்சேரி வக்கீல் தோழர் ஞான அம்பாயசும் வழக்கை நடத்தினுர்.

---

## மோரூர் ஆதிதிராவிட பகுத்தறிவு வாலிபர் சங்கம்.

21-1-34ல் ஞாயிற்றுக்கிழமை மாலை மோரூர் போர்டு எலிமெண்டரி ஆதிதிராவிட ஸ்கூலில் ஷை ஸ்கூல் உபாத்தியாயர்கள்.

1 பி. சுந்தரம். 2 வி. ஆர். பொன்னுசாமி இருவர்களின் முயற்சியிஞல் மோரூர் ஆதிதிராவிட வாலிபர்களைக்கொண்டு ஒரு பகுத்தறிவுச் சங்கம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அச்சங்கம் மாதம் இருமுறை நடைபெறும்.

21-1-34 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு ஷை ஸ்கூல் ஹெட்மாஸ்டர் பி. சுந்தரம்(பிள்ளை) அவர்களை அக்கிராசனராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அன்னவரின் தலைமையின் கீழ் கூடிற்று அதுசமயம் 150ஜனங்களுக்குமேல் கூடியிருந்தார்கள்.

தோழர் வி. ஆர், பொன்னுசாமி அவர்கள் நாம் எப்படி தாழ்ந்தோம் என்பதைப்பற்றி ஜனங்களுக்கு நன்குணர்த்தி தெளிவாக விரிவுரை நிகழ்த்திஞர.

அதன்பின் தோழர்கள் எம். எஸ். ராஜமாணிக்கம், வி. சுந்தரம், கே. வீராசாமி, எம். சின்னசாமி ஏ.முனுசாமி முதலியவர்கள் முறையே.

(1) ஜன சமூக சீர்திருத்தம், 2) சுகாதாரம், (3) நம் ஜாதி முன்னேற்றம், (4) நாகரீகம் (5) பெண் கல்வி. என்பதைப்பற்றி ஒவ்வொரு தோழர்களும் நன்ருய் ஜனங்களுக்கு விளங்கும்படி அறிய சொற்பொழி வாற்றிஞர்கள்.

பின்பு தலைவர் அவர்கள் சங்கத்தின் நோக்கத்தைப்பற்றி விவரித்து தெளிவாக எடுத்துரைத்தார். கடைசியாக உபாத்தியார் வி. ஆர். பொன்னுசாமி அவர்களால் வந்தனோபசாரம் கூற இரவு 7 மணிக்கு கூட்டம் கலைந்தது.

### சங்க நிர்வாகிகள்

தலைவர்: — வி.ஆர். பொன்னுசாமி

காரியதரிசி:— எம். எஸ். ராஜமாணிக்கம்

பொக்கிஷதார்:— வி. சுந்தரம்

### தோண்டர் படைத்தலைவர்கள்

எம். சின்னுசாமி, கே. வீராசாமி, ஏ. முனுசாமி' எம். எஸ். சுந்தரம்

சங்க நிர்வாகிகளும், தொண்டர் படைத்தலைவர்களும் எல்லாரும் பிரரேபிக்கப்பட்டும், ஆமோதிக்கப்பட்டும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

---

## ஜோலார்பேட்டை தொழிலாளர் ஐக்கிய நாணய சங்கம்.

### மகாஜனசபை கூட்டம்.

22-1-34ல் தோழர் வி. வரதராஜலு முதலியார் போர்ட் ஸ்கூலில் நடந்த கூட்டத்தில் சங்கத்தின் தலைவரான தோழர் வி. வரதராஜலு முதலியார் மரணமானதைப் பற்றி கூட்டம் வருந்துவதாகத்தீர்மானம் நிறைவேறிய பிறகு ஆடிட்ரிப்போர்ட் வாசிக்கப்பட்டது. பின் கீழ்கண்டவர்களைப்பஞ்சாயத்தார்களாகத்தேர்ந்தெடுக்கப்பட்டது. தோழர்களான வி. பார்த்தசாரதி, முனுசாமி முதலியார், குமாரதேவ், வெங்கட்டாஜல நாயுடு, பெருமாள், சாப்ஜன்சாயபு, வெங்கட்டரெட்டி சிற்க பஞ்சாயத்தார்களுக்குள் தோழர் வி. பார்த்தசாரதி அவர்கள் சங்கத்தின் தலைவராகவும், தோழர் குமாரதேவ் அவர்களைக்காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஜோலார்பேட்டையில் ஐக்கிய நாணய சங்க யூனியன் ஸ்தாபிக்க போவதற்கு இச் சங்கத்திலிருந்து தோழர் வி. பார்த்தசாரதியை பிரதிநிதியாக அனுப்பப் பட்டது இரவு 9 மணிக்குக் கூட்டம் இனிது கலேந்தது என நமது நிருபர் எழுதிஇருர்.

---

## புதுப்பாளையம் சமதர்ம வாசகசாலை.

21-1-34 ஞாயிற்றுக்கிழமை மாலை 3மணிக்கு தோழர் எம். நாராயணசாமி அவர்கள் தலைமையில் வாசகசாலை வாரந்திரக்கூட்டம் நடைபெற்றது. தோழர் பி. ஆர். குப்புசாமி அவர்கள் "கடவுளும், மதமும்" என்பது பற்றிப் பேசிஞர். அதைப்பின்பற்றி தோழர்களான வி. தங்கவேலு ஏ. முத்துகிருஷ்ணன, கே. ஆறுமுகம், பி. கிருஷ்ணன் முதலியவர்கள் சொற்பொழிவாற்றிஞர்கள். தலைவர் முடிவுரைக்குப் பின் கூட்டம் இரவு 8மணிக்கு கலேந்தது.

22-1-34 திங்கட்கிழமை மாலை 6-30 மணிக்கு ஷை வாசகசாலையின் விசேஷக்கூட்டம் சென்னை சட்டசபை அங்கத்தினரும், வட ஆர்காடு ஜில்லா கல்வி சபைத் தலைவரும், செங்கம் தாலூக்காபோர்டு தலைவருமான தோழர் எம். பி. ரங்கசாமி எம். எல். சி., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப் பின் "மூடப்பழக்க வழக்கம்" என்பது பற்றி தோழர்கள் கு ஆறுமுகம், காஞ்சி என். முத்துராம், பி. கிருஷ்ணன், ஏ. முத்துகிருஷ்ணன், வி. தங்கவேலு, பி. ஆர். குப்புசாமி, முதலியவர்கள் மிகவும் தெளிவாக சொற்பொழி வாற்றிஞர்கள். பின் தலைவர் முடிவுரையில் கடவுள் ஒருவர் உண்டு என்றுபேசிஞர். தோழர் பி. ஆர். குப்புசாமி அவர்கள், வந்தனோபசாரம் சொல்லும்போது கடவுளில்லை என்பதைப்பற்றி விளக்கமாகவும்,அருத்தம் திருத்தமாகவும் பேசிமுடித்தார் கூட்டம் 9-30மனிக்கு இனிது கலேந்தது,

---

## தமிழ்நாடு பார்ப்பனரல்லாதார் முதல் மகாநாடு.

3-2-34ல் திருச்சியில் நடைபெறவிருந்த தமிழ்நாடு பார்ப்பனரல்லாதார் முதல் மகாநாடு, எம். சி. சி. டெஸ்ட் பந்தயத்தை முன்னிட்டு நாளது பிப்ரவரி மாதம் 25ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என காரியதரிசி எழுதுகிருர்.

---

## மரணம்.

திருச்சி இந்திய ஒளி ஆசிரியர் ஜகுப் கே. ஏ. அப்துல் ஹமீத் சாஹிபின் செல்வதங்கை 'ஜமீலாபீ' ஈரோடு முனிசிபல் பெண் பாடசாலையின் உபாத்தியாயினிக்கு திடீரென ஜன்னி கண்டு 20-1-34 இரவு 3மணிக்கு இறந்தார். 21-1-34 சிறப்பாக அடக்கம் செய்யப்பட்டது. புகைப் படமும் எடுக்கப்பட்டது.

---

## காதல் மண அழைப்பு

———;0:———

அன்புமிக்க தோழரே!

நாளிது 3-2-34-ல் சனிக்கிழமை மாலை 5-30மணிக்குதிருச்சி தோழர் எஸ். பிச்சைமுத்து அவர்களின் புதல்வி தோழர் பி. செல்லம்மாளுக்கும் திருச்சி தோழர் ஆரோக்கியசாமியவர்களின் புதல்வன் உண்மைநாடுவோர் வாசகசாலை காரியதரிசியுமான தோழர் ஏ. எஸ். இருதயராஜனுக்கும் ஈரோடு மஹாஜன ஹைஸ்கூல் சரஸ்வதி ஹாலில் விவாக ஒப்பந்தம் நடைபெறும். டாக்டர் எம். கிருஷ்ணசாமிஅவர்களின் தலைமையின்கீழ் பலர்பேசுவார்கள்.

தாங்கள் தங்கள் தோழர்களுடன் வந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

25—1—34, ஈரோடு.

B. பிச்சையப்பன், திருச்சி.
R. S. அந்தோணி, ஈரோடு.

## தமிழ் மாகாண முதலாவது சமதர்ம மகாநாடு.

தமிழ் மாகாண முதலாவது சமதர்ம மகாநாட்டை மன்னுர்குடியில் நடத்துவதைப்பற்றி ஆலோசனை செய்ய 21-1-34மாலை 5-மணிக்கு ஷையூர்சுயமரியாதைசங்கக்கட்டிடத்தில் கூட்டப்பட்டது. கூட்டத்திற்கு தோழர்ககள் எம். தருமலிங்கம், (முத்துப் பேட்டை) என். பி. காளியப்பன் (நாகை) கே. ராமையா சித்தக்காடு, பி. குஞ்சிதபாதம், (முத்துப்பேட்டை) ஏ. வி. தாதாசாமி, (திண்டிவனம்) எம். ஜி. நடராஜன், யு. எஸ். சோமசுந்திரன், என். பாஷ்யம், கே. ரெங்கசாமி, பி சொங்கண்ணு, ஏ. வெங்கட்டராமன், நடராஜன், தம்புசாமி, ராஜு, ஜி. டி. சம்பந்தம், பி. ராமச்சந்திரன், ஆர். ராமச்சந்திரன், கே. அனந்தராம் உள்பட பலர் விஜயம்செய்திருந்தாகள்.

கூட்டத்திற்குத் திருத்துறைப்பூண்டிதாலூக்க, போர்டு மெம்பர் தோழர் எம். தருமலிங்கம் முத்துப்பேட்டை தலைமைவகித்தார். கூட்டத்தில் தோழர்கள் எம். சிங்காரவேல் எம்.ஏ.,பி.எல்., எஸ். ராமநாதன் பி. ஏ., பி. எல்., அ. பொன்னம்பலம் எஸ். வி. லிங்கம், முதலிய இன்னும் பலரிடமிருந்து வந்த கடிதங்களை சங்ககாரியதரிசி தோழர் கே. ஆர். ஜி. பால் அவர்களால் படிக்கப்பெற்றது. தலைவர் முடிவுரைக்குப்பிறகு அடியில் கண்ட தீர்மானங்கள் நிறைவேறியது.

தமிழ்மாகாண முதலாவது சமதர்ம மகாநாட்டை மார்ச்சுமாதம் 2வது வாரத்திற்குள் மன்னுர் குடியிலேயே நடத்தி விடுவதென்று தீர்மானிக்கப்பெற்றது.

(2) மகாநாட்டின் தலைவருக சென்னை தோழர் எம். சிங்காரவேல் பி. ஏ., பி. எல்., அவர்களையும், திறப்பாளராககொச்சி சுயமரியாதை சங்கத்தலைவரும்,கொச்சி சட்டசபை அங்கத்தினருமான தோழர் கே. எம். இப்ருகிம் அவர்களையும் ஏகமனதாக தீர்மானிக்கப் பெற்றது.

(3) மகாநாட்டுக்கு அடியில்கண்ட தோழர்களை நிர்வாகஸ்தர்களாகத்தேர்ந்தெடுக்கப்பெற்றது.

தோழர் எம். தருமலிங்கம் (முத்துப்பேட்டை) வரவேற்புக்கழகத்தலைவர்.

தோழர் பி. சொங்கண்ணு, கே. ஆர். ஜி. பால், காரியதரிசிகள்.

தோழர் எஸ். டி. சம்பந்தம் விளம்பர அதிகாரி.

தோழர்கள் பி. எஸ். ரெத்தினசபாபதி, ஆர். கோவிந்தராஜுலு, பி. ராமச்சந்திரன், ஆர். ராமச்சந்திரன், கே. அனந்தராம், டி. மணி, எஸ். பி. கிருஷ்ணன் (நாகை) என். லக்ஷப்பா, ரங்கராஜ், திருவாரூர் ஆளவந்தர், (தஞ்சை) கே. கே. நீலமேகம், சி. நடராஜன், (மாயவரம்) சொக்கலிங்கம் (சீர்காழி) கே. வி. அழகர்சாமி, செல்வநாயகம், (சுந்தரம்) ருத்திராபதி (திருத்துறைப்பூண்டி) கமிட்டிமெம்பர்கள்.

(4) மகாநாட்டுக்கு தோழர்கள் கே. ஐயப்பன், டாக்டர் அந்தோணி ஜோசப், ஹரிந்திரநாத் சட்டோ உபாத்தியாய, எஸ். ராமநாதன், எம். ஏ. பி. எல். ஈ. வெ. கிருஷ்ணசாமி இவர்கள் உள்பட நமது இயக்கத் தோழர்களையும் அழைப்பதென்று முடிவு செய்யப் பெற்றது.

தலைவர் முடிவுரைக்குப்பிறகு மாலை 6மணிக்கு கூட்டம் கலைந்தது.

### கர்ப்பத்தடை பிரசாரம்.

இன்று மாலை இவ்வூர் நேஷனல் ஹைஸ்கூலில் சென்னை தோழர் டி. ஆர். வெகட்டரும் சாஸ்திரி அவர்கள் கற்பத்தடையை ஆதரித்து ஒரு பிரசங்கம் செய்தார்.

## குழந்தைக்கு நாம கரணம்.

31-12-33ல் ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு கோலாலம்பூர் செந்தல் இந்தியா சுயமரியாதைச்சங்கக் கட்டிடத்தில் சீர்திருத்த சங்கீத பாக்கல் பாடப்பட்டது அவ்வமயம் தோழர் பி. பிச்சை முத்து அலமேலு அம்மாள் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

பினங்கு ஜனவர்த்தமானி ஆசிரியர் தோழர் எம். எஸ். மாலிம் அவர்கள் கோலாலம்பூர் செந்தல் இந்திய சுயமரியாதை சங்கத்தின் கௌரவ காரியதரிசி தோழர் மு. வேலாயுதம் கிட்டுஅம்மாள் இருவர்களுக்கு 17-11-33ல் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11-15 மணிக்குப் பிறந்து சௌகரியமாய் திகழ்ந்த ஆண் மகவுக்கு பரிமணம் என்று திருநாமம் சூட்டினார்கள். தோழர்கள் எஸ்எஸ் சின்னப்பதாஸ், ஜி. குமாரசாமி, கா இராஜகோபால்,எஸ். யு. இராமையா, பி. பிச்சை முத்து மா. செ பரிமணம் முறையே பரிமணம் என்ற திரு நாமம் சூட்டியது பற்றி மிகவும் களிப்படைவதாக் கூறினார்கள்.

தலைவர் முடிவுரைக்குப் பின் மு. வேலாயுதம் அவர்களால் வந்தனம் கூறப்பட்டு இனிது இரவு 9 மணிக்கு சிற்றுண்டி வழங்கப்பட்டு முடிவுற்றது.

(ஒரு நிருபர்)

## பிறப்பு.

நமது இயக்க முக்கியஸ்தர் காரைக்குடி முத்துப்பட்டணம் "சமதர்ம விலாஸ்" தோழர் ராம. சுப்பையா அவர்கள் மனைவி தோழர்விசாலாட்சி அவர்கள் 16-1-34 செவ்வாய்க் கிழமை இரவு 1-30மணிக்கு ஆண்குழந்தை பிரசவித்தார். தாயும் குழந்தையும் உடல் நலத்துடன் சௌக்கியமாகயிருக்கின்றார்கள்.

(நமது நிருபர்)

## இரண்டு மனைவிகள்.

ஆந்திர நாட்டிலே மங்காரி ஜமீன்தாரரின் குமாரருக்கு, சீதம்மா, காந்தம்மா என்ற இரண்டு பெண்களை ஏக காலத்தில் மணம் செய்து வைத்திருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது. ஒரே பந்தலில், ஒரு புருஷனுக்கு இரண்டு பெண்களை விவாகம் செய்வித்த இந்த வைபவத்திற்கு, வெள்ளைக்காரர்களும், திவான்பகதூர் முனிசாமி நாயுடு போன்ற பிரபல இந்தியர்களும் போயிருந்தார்களாம். இதைப் பார்த்த வெள்ளையர் இந்தியரைப் பற்றி என்னநினைத்திருப்பார்கள்? படிப்பும், அறிவும், சுதந்திர உணர்ச்சியும் பரவி வரும் இக்காலத்தில், இரண்டு மனைவிகள் கொள்ளுவது சமூகத்தையேஇழிவுபடுத்துவதாகும். பெண் மீது ஆணுக்குள்ள ஆதிக்கத்தைப்பலதார விவாகம்உறுதிப்படுத்துகிறது. அதிலும் ஏககாலத்தில் இரண்டு பெண்களை ஒருவன் விவாகம் செய்வது, பெண்களுக்குக்கடுகளவு கூட சுயமதிப்போ, சுதந்திரமோ கிடையாதென்று டமாரம் அடிப்பதைப் போலிருக்கிறது. பெண் என்றால் வெறும்ஜடப் பொருள் என்பது இவர்கள் நினைப்பா? கற்பென்பது பெண்ணுக்கு மட்டும் பலவந்தமாய் ஏற்பட வேண்டிய ஒரு நியதியா? ஆண்களுக்கு அதே நியதி கிடையாதா? ஆணைப்போல் பெண்ணுக்கும் சமஉரிமை உண்டென்பதை ஒப்புக்கொள்ளுவதானால் இம்மாதிரி அநாகரிக விவாகங்கள் நடப்பதைத் தடுக்க வேண்டும், ஒரு மனைவி எப்படி இரண்டு புருஷர்களை விவாகம் செய்து கொள்ள முடியாதோ, அதைப்போல ஒரு புருஷன் ஒரு மனைவிக்கு மேல் விவாகம் செய்து கொள்ளக்கூடாது என்று சட்டம்ஏற்பட வேண்டும். கவலையில்லாமல் உண்டு களித்து உருளும் சோம்பேறி பணக்காரர்களே இம்மாதிரி பலதாரம்கொள்ள வைத்தியம் பிடித்து அலைகிறார்கள். அவர்கள் செய்கையால், "பெண்கள் அடிமைகள்" என்ற நிலைமை அசைக்க முடியாததாயிருக்கிறது பெண்கள் விடுதலை பெற்றாலொழிய நாடு விடுதலை பெறமுடியாது. அவர்கள் விடுதலை பெற வேண்டுமானால், விவாக விஷயங்களில் ஆணுக்கும், பெண்ணுக்கும் சமஉரிமை வேண்டும். ஆகவே ஒரு மனைவிக்கு மேல் விவாகம் செய்து கொள்வது குற்றம் என்று சட்டபூர்வமாய் தடுக்கவேண்டியது மிகவும் அவசியம்.

கற்பு நிலை யென்று
சொல்ல வந்தாரிரு
கக்ஷிக்கு மஃது
பொதுவில் வைப்போம்
வற்புறுத்திப் பெண்ணைக்
கட்டிக் கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி
மிதித்திடுவோம்.

பாரதி.
(தமிழ் நாடு)

## தோழர். ஈ. வெ. ராமசாமி சிறைவாசம்

### சௌகரிய க்குறைவு

### நாயடு முயற்சி

கோயமுத்தூரில் தண்டனைப் பெற்ற ஸ்ரீ. ஈ. வெ. ராமசாமிநாயக்கர், அவருடைய சகோதரி ஸ்ரீமதி- கண்ணம்மாள், ஆகிய இருவரும் சிறைச்சாலையில்போதியபடி சௌகரியங்கள் ஏற்படவில்லை யென்பதைக் கேள்வியுற்று டாக்டர். பி. வரதராஜுலு நாயுடு, சென்னை சர்க்காருக்கு விஷயத்தை அறிவித்திருப்பதுடன், சர்க்கார் மெம்பர்களுடன் கலந்து பேசியதாகவும் தெரிகின்றது. (த. நா)

## சென்னை சுயமரியாதைச் சங்கம்.

13-1-34 சனிக்கிழமை மாலை 6-மணிக்கு சென்னை சுயமரியாதைச் சங்கத்தின் கிளைச்சபை மண்டபத்தில் தோழர் டி. எ. சாமி உபத்தலைவர் அவர்கள் தலைமையில் சங்கத்தின் மகாஜனக் கூட்டம் நடைபெற்றன.

சங்கத்தின் வரவு செலவு கணக்குகள் பரிசோதிக்கப்பட்டு அனைவராலும்ஏகமனதாக வரவு செலவு கணக்குகள் ஒத்துக்கொள்ளப்பட்டன.

வாராந்திரக் கூட்டம் சனிக்கிழமை மாலை 6மணிக்கு ஒவ்வொரு சனிக்கிழமை தினமும் நடக்க வேண்டியதென்றும் ஒவ்வொரு மெம்பர்களும் தவராது வரும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது.

நாகம்மாள் வாசகசாலையை துரிதத்தில் நடத்த சங்கத்தார் நடவடிக்கை எடுத்துக்கொள்ள கேட்டுக்கொள்ளப்பட்டன. என காரியதரிசி வி. ஆர். சாமி எழுதிறார்.

[7-ம்பக்கத்தொடர்ச்சி]

மான திட்டம். ஆகையினால்தான் சோவியத் ரஷ்யா என்ன நேரிட்டாலும் நாட்டில் சமாதானம் நிலவவேண்டுமென்று விரும்புகிறது. உயர்ந்த நிலைமையிலிருக்கிற ஒரு சிலருக்குமாத்திரம் இப்போது கிடைத்துவருகிற உலக வாழ்க்கையின் சுகபோகங்களில் ஒருபாகமாவது ஒவ்வொரு ரஷியனுக்கும் கிடைக்கும் என்பதை நிரூபித்துக் காண்பித்துவிட்டால், மற்ற நாடுகளிலுள்ள தொழிலாளிகளும் இதே திட்டத்தை ஆதரிப்பதற்குப்பிரசாரமாவது, யுத்தமாவது வேண்டியதில்லை என்று ரஷ்யா நம்புகிறது.

# இங்கிலீஷ் குதிரைப்பந்தய பரிசு டிக்கட்டுகள்.

**ம்யூட்சுவல் டிஸ்டிரிப்யூஷன்ஸ்.**

சுவிட்ஜர்லாந்துக்கு பக்கத்திலுள்ள லீச்டென்ஸ்டன் கவர்ன்மெண்டின் லைசென்ஸ் பெற்று கவர்ன்மெண்ட் பிரதிநிதி, போலீஸ் இவர்கள் மேற்பார்வையில் பத்திரிகை பிரதிநிதிகள், பொது ஜனங்கள் முதலியவர்கள் முன்னிலையில் நடைபெறுவது. 10,00,000 [10 லக்ஷம்] பவுன்கட்குமேல் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 13-வருஷமாக நடைபெறுகிறது. வருடத்தில் மும்முறை மார்ச்சு, ஜூன், அக்டோபர் அல்லது நவம்பர் ஆகிய மாதங்களில் நடைபெறுகிறது.

**ஒவ்வொரு சந்தாதாருக்கும்** டிக்கட் நம்பர் லிஸ்டு, தலைமை ஆபீஸ் ரசீது, டிராலிஸ்டு முதலியவை அனுப்பப்படும்.

| டிக்கட் 1-க்கு விலை. | நடைபெறும் பந்தயத்தின் பெயரும், தேதியும். | பரிசுகட்கு பிரித்துக்கொடுப்பது மொத்தம். |
|---|---|---|
| ரூ. **4-0-0** 6க்கு ரூ. 20. | **கிராண்ட் நேஷனல்** லிவர்பூல் இங்கிலாண்ட் 23—3—34. டிக்கட்டிற்கு பணம் பெறும் கடைசி தேதி. 26—2—34. | பவுன் **60,000.** |

1-வது, 2-வது, 3-வது பிரைஸ் வந்தவர்கட்கு தந்தி கொடுக்கப்படும்.

பிரைஸ் விபரம் (விகிதாச்சாரம்) டிக்கட் மொத்தம் 2,00000.

அடியிற்கண்டபடி பிரைஸ்கள் தரப்படும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1-வது குதிரைக்கு பவுன் | **10,000** | டிக்கட் விற்றவருக்கு | | 40 ரொக்க பிரைஸ்கள் | |
| 2-வது ,, ,, | 2800 | 1-வது குதிரைக்கு பவுன் | 800 | பிரைஸ் 1-க்கு பவுன் | 100 வீதம் |
| 3-வது ,, ,, | 2000 | 2-வது ,, ,, | 400 | 20 ,, ,, | 80 ,, |
| மற்ற குதிரைகட்கு ,, | 2800 | 3-வது ,, ,, | 200 | 20 ,, ,, | 60 ,, |
| பந்தயத்தில் சேராத குதிரைக்கு ,, | 1600 | மற்ற குதிரைகட்கு ,, | 2000 | 200 ,, ,, | 16 ,, |
| | | | | 300 ,, ,, | 8 ,, |

## ஓர் முக்கிய பத்திரிகையில் வெளியான விஷயம். (மொழிபெயர்ப்பு)

ஈவினிங் நியூஸ்.

லண்டன் செவ்வாய் 18—3—1931.

லண்டன் பட்டணத்தில் அதிர்ஷ்டப்பெண்.

தன்னுடைய வேலையை விட்டு வெற்றிகாணச் சென்றார்.

**9,000** பவுனுடன் ஒரு புருஷன்.

அடியிற்கண்டது லண்டன்மா நகரத்தைச் சேர்ந்த கிளாப்பம் ஹாமன் தெற்கு பாகத்தில் வசிக்கும் "மிஸ். ரோசினு கத்திலீடவுட்" என்ற அதிர்ஷ்டப் பெண்ணின் சரித்திரம்:—

சுமார் 3-வருடத்திற்கு முன் லண்டனில் மேற்கண்ட மாது வேலைக்காரியாகவிருந்தார். பிறகு உலகத்தைச் சுற்றிப் பார்க்க வேண்டுமென்னும் ஆவலுடன் தன் வேலையை விட்டு தென்னாப்பிரிக்காவுக்குச் சென்றார். செல்லும்போது கையில் 50-பவுன் முதலுடன் சென்றார். சென்றதும் அங்கு ஓர் வேலை கிடைத்தது. பிறகு அங்கு வசிக்கும் போது ருடீசியா தேசத்தில் சாலிஸ்பரி பட்டணத்தில் வசிக்கும் ஓர் கணக்குவேலை பார்ப்பவர்மீது காதல் கொண்டு அவரை மணக்க நிச்சயித்தார். மணம் செய்து கொள்வதற்குமுன் பெற்றோர்களைப் பார்த்துவர லண்டன் திரும்பினார். அப்போது அவர் கையிலோ 3 பவுன்தானிருந்தது. அனால் கப்பலைவிட்டிறங்கியவுடன் ஓர் மகிழ்ச்சி தரும் விஷயம் எதிர்பார்த்த வண்ணமாயிருந்தது. எப்படியென்றால் ஆப்பிரிக்காவிலிருக்கும்போது மியூட்சுவல் கிளப் லிமிடெட் "மான்செஸ்டர் நவம்பர் ஹேண்டிஹேப்" குதிரைப் பந்தய லாட்டரியில் ஓர் டிக்கட் வாங்கியிருந்தாள். அந்த டிக்கட்டிற்கு முதல் பிரைஸ் கிடைத்தது 9,000 பவுன் தனக்குக் கிடைக்கப்போகும் விஷயத்தை அறிந்து மகிழ்ச்சியடைந்தாள். அவளை மணக்கப்போகும் புருஷனும் அதிர்ஷ்டசாலிதான். அவர்தான் டிக்கட் வாங்கிக்கொடுத்தவர். அவர் வாங்கிக் கொடுத்த டிக்கட் முதல் பிரைஸ் வந்ததால் அவருக்கும் 800 பவுன் கிடைத்தது. பிறகு மிஸ். டவுட் கலியாணம் செய்து கொண்டு ஐரோப்பா கண்டம் முழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்ய எத்தனித்துவிட்டாள். அவள் புருஷனும், இங்கிலாந்து தேசத்தையே கண்டிராதவராதலினால் இங்கிலாந்து தேசத்திலுள்ள டர்பியைக்காண ஆவலாயினார்.

குறிப்பு:—அயர்லாண்ட் ஆஸ்பிடல் "கிராண்ட் நேஷனல்" டிக்கட்டுகளும் கீழ்க்கண்ட விலாசத்தில் டிக்கட் 1-க்கு ரூபாய் 6—12—0 வீதம் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். கடைசி தேதி 14-2-34.

எல்லாவிடங்களிலும் எமது சார்பாக டிக்கட்டுகள் விற்க ஏஜண்டுகள் தேவை.

அதிகாரம்பெற்ற ஏஜண்டு:—

**S. K. வரதராஜலு, திருச்செங்கோடு, சேலம் ஜில்லா S. I.**

டிக்கட்டிற்கு பணம் அனுப்புதல் பதில் கோருதல் மற்ற எல்லா விஷயத்திற்கும் S. K. வரதராஜலு, திருச்செங்கோடு என்ற விலாசத்திற்கே அனுப்புதல் வேண்டும்.

இந்தியாவிற்கு 1-வது, 2-வது, 3-வது பிரைஸ்கள் கிடைத்திருப்பதோடு ஒவ்வொரு முறையும் பல குதிரைகளுக்கும் ரொக்கப் பிரைஸ்களும் கிடைத்து வருகிறது.

# நமது நோக்கம்.

(தாராபுரம் தோழர் எம். எஸ். நாதன்.)

நமது நாட்டில் தன்மதிப்பு இயக்கம் ஆரம்பித்தது முதல் உயர்ந்த ஜாதிக்காரர்களென்று சொல்லிக்கொள்ளும் மக்கள் பயப்படுகின்றனர். மதநம்பிக்கைக்காரர்களும், மத குருமார்களும், திகைக்கின்றனர். தேசியவாதிகள் திக்குமுக்களாடுகின்றனர். பணக்காரர்கள் பெருமூச்சு விடுகின்றனர்.

சுயமரியாதை இயக்கம் போலி தேசியவாதிகளைப்போல் மக்களை அரை நூற்றாண்டுகளாக ஏமாற்றவில்லை. அது குறுகியகாலத்தில் பெரிய காரியங்களை சாதித்துவருகிறதென்பது தற்பெருமை யாகாது உண்மையிலேயே தீவிர வாதிகளாய் சுயமரியாதைக்காரர்கள் தீண்டாமையை அழித்து வருகின்றனர். வாலிப இளங்காளைகள் சாதியென்னும் இருமாப்பைத் தகர்த்தெரிந்தே வருகின்றனர். மதமென்னும் மாயவலையை அறுத்தெரிந்தும், வேதமென்னும் பாதகப்புத்தகங்களை பொசுக்கி, கடவுளெனும் கார் இருளை அறிவு எனும் அக்கினியால் போக்கி, அடிமையெனும் விலங்குதனை ஒடித்தெரிந்து ஆண்மையுடன் வாழ்கவென அறைகூவி அழைக்கின்றர். ஆனால் இவ்வொன்பதாம் ஆண்டில் நமக்கின்பந்தரும் குடி அரசை கொலைசெய்தனர். இதனால் நம்மிளஞ்சிங்கங்கள் கண்ணீர் சொரிந்தாரில்லை. உடனே நமக்கு மகிழ்ச்சிதரும் புரட்சிதனை சிருஷ்டித்தனர். இப்பொது நம் புரட்சியைக் கண்டு சில போக்கற்றவர்களும், சுயநலமிகளும், தப்பான எண்ணத்தின் பேரில் புலம்புகின்றனர். புரட்சியினால் மக்கள் சமூகம் நாசமாகுமாம் நல்லொழுக்கம் கெட்டுவிடுமாம், அரசாங்கத்தைக் கவிழ்த்து விடுமாம். கொலையும் களவும் தாண்டவமாடுமாம்!! என்னே இவர்களின் கூற்று விந்தையிலும், விந்தையாகவன்றோ யிருக்கின்றது.

தெய்வ வழிபாடுகளும் இராஜவிசுவாசமும் கொண்டாடப்பட்டு வருங் காலங்களிலும், திடீரென்று ஏற்படும், பூமி அதிர்ச்சியினால் மக்கள் நாசமடைய வில்லையா? எரிமலைகளால் ஏற்படும் துன்பங்களுக்கு ஆளாகவில்லையா? அதனால் எத்தனையோ ஊர்கள், சாம்பலாகவில்லையா? பெருங்காற்றால் கூடகோபுரங்களும், மாட மாளிகைகளும் சேதப்படவில்லையா? ஆயிரக்கணக்கான மக்கள் மாண்டுபோகவில்லையா? விஷசுரத்தாலும், வாந்திபேதியினாலும், பிளேக், காலரா முதலிய தொத்து வியாதிகளாலும் கோடிக்கணக்கான மக்கள் மண்ணோடு மண்ணாகப் போகவில்லையா? திடீர் திடீர் யென்று, ரயில் விபத்துகளாலும், கப்பல்களாலும், ஆகாய விமானங்களாலும், ஜனங்கள் சேதமடைய வில்லையா? இவைகளுக்கெல்லாம் யார் உத்தரவாதியாக முடியும்? சென்றுபோன மகாயுத்தத்தை (The great war) ஒரு அறிஞர் நன்மைக்கென்று சொல்லியிருக்கின்றாரே அதன் உண்மைதான் என்ன? நடந்துபோன பிரான்ஸ் புரட்சி, அமரிக்கபுரட்சி, அயர்லாந்து புரட்சி, ருஷ்யா புரட்சி, ஸ்பெயின் முதலிய தேசங்களின் புரட்சிகளால் அந்நாட்டுமக்கள் தங்களுக்கு ஏற்ற அரசியலை நிறுவாமல் ஒழுக்கங் கெட்டு கொலையுங்களவும் செய்து கொண்டா வாழ்கின்றனர். நம்மைப்போல் உண்ண உணவிற்கும் உடுத்த உடைக்கும், இருக்கக் குடிசைக்கும் வழியின்றி திண்டாடிக்கொண்டும் பிச்சை எடுத்துக்கொண்டுமா? வாழ்கின்றனர். இல்லை! இல்லை!! அவர்கள் தன் மதிப்புடனும், தன்னம்பிக்கையுடனும் தன்னரசு செலுத்தி சுகமே வாழ்கின்றனர்.

அதுபோலவே நாமும் சமுக சுதந்திரமும், அரசியல் சுதந்திரமும் பெற்று சுகவாழ்வு வாழ்வதற்காகவே நாமும் புரட்சியென்னும் கிளர்ச்சி செய்து வருகின்றோம். நமது நோக்கமென்னவென்றால், 7-கோடி மக்களை மனித வர்க்கத்தில் சேர்த்து வாழமுடியாமல் கொடுமைப்படுத்தி வைத்திருக்கும் உயர்ந்த சாதிக்காரர்களென்று சொல்லிக்கொள்ளும் மக்களின் மனப்பான்மையை மாற்றிக்கொள்ளச் செய்வதாகும். பிராமணர்களென்று தங்களை பெருமை பாராட்டிக் கொண்டிருக்கும் மக்கள் தங்களை ஜாதிஇந்துக்களென்றும் பிற மக்களைச்சூத்திரர்களென்றும் வேசிமக்களென்றும் பாவிப்பதும் அவர்கள் என்றென்றும் தங்களுக்கு பணியாளர்களாகவே இருக்கவேண்டுமென்று இப்போதும் பிரிட்டீஷ் கவர்ன்மெண்டின் கீழிருக்கும்போதே பலவித சூட்சிகளும் பித்தலாட்டங்களும் செய்துவருவதால் அப்படிப்பட்டவர்களின் எண்ணத்தை மாற்றி உண்மையை உணர்ந்து மனிதவர்க்கத்துடன் சமரசமாக நடந்து கொள்ளும்படி தூண்டுவதுமாகும். மதத்திற்கு அதிகாரிகளாயிருந்துவரும் குருக்கள்கள், முல்லாக்காள், பாதிரிகள் பிட்சுகள் ஆகியவர்கள் பணக்காரர்களை ஏமாற்றுவதுமின்றி ஏழைமக்களின் உழைப்பையும் கொள்ளைகொண்டு (மதவரியாக) பிடுங்கிக்கொள்வதோடு நில்லாமல் அவர்களின் அறிவையும் மழுக்கி ஆண்மையைக்குலைத்து மூடர்களாக ஆக்கிவைத்திருக்கும், நயவஞ்சகத்தை விட்டொழித்து அவர்களின் ஏழைகளின் நன்மைக்கும், ஒற்றுமைக்கும் சுகவாழ்விற்கும் தங்கள் சிந்தனசக்தியை செலவு செய்யும்படி தூண்டுவதேயாகும். ஏழைத்தொழிலாளிகளின் உழைப்பிற்கு தக்க கூலியக்கொடாமல் அவர்களை என்றென்றைக்கும் நித்தியதரித்திரர்களாகவே வைத்து தாங்கள்மாத்திரம், உல்லாசமாக உலக சுகபோகங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் பணக்காரர்களையும், ஜமீன்தாரர்களையும், மிராஸ்தாரர்களையும், முதலாளிகளையும் கூப்பிட்டு தங்களின் மக்கள் இருக்கும் பரிதாபகரமான நிலையைகாட்டி நியாயத்தை உணரச்செய்து பாட்டாளிகளுக்கும், உழைப்பாளிகளுக்கும் எல்லா சுகங்களையும் அனுபவிக்க பாத்திய முண்டென்பதை நிரூபிப்பதேயாகும்.

நமக்கு அளிக்கப்பட்டிருக்கும் பார்லிமெண்டையும், மாகாண சட்டசபைகளையும், லோக்கல் போர்டுகளையும் ஏழைமக்களின் பிரதிநிதிகளால் நிறப்பி நாட்டின் நன்மைக்கு வேலை செய்யப்பாடுபடுவதாகும். ஆகவே, மேலே சுட்டிக்காட்டப் பட்டவர்களின் மனப்பான்மையை மாற்றச்செய்வதும் ஆட்சி நிர்வாகத்தை கைப்பற்றுவதென்பதும், பிரசார வேலையினாலேயே ஆகும்.

ஆகவே புரட்சியென்பதின் தத்துவத்திற்கு அரசியல் இயலானாலும்சரி சமூக இயலானாலும் சரி, பெண்ணியலோ, ஆண் இயலோ, எந்த இயலானாலும் சரி அவைகள் கொண்டிருக்கும் பழய மனப்பான்மையை மாற்றி புதிய மனப்பான்மையைக் கைகொண்டு நாட்டிற்கு நலம் புரிவதேயாகும் ஆதலான் நமது புரட்சியைக்கண்டு யாரும் புலம்பவோ, ஆச்சரியப்படவோ, சந்தேகப்படவோ மேலே காட்டிய விஷயங்களில் இடமிருக்கிறதாவென்பதை ஒவ்வொருவரும் தங்கள் பகுத்தறிவால் ஆராய்ந்துகொள்ளுமாரு கோரப்படுகிறது.

## தோழர் C.K. நாஸ்திக குப்புசாமி பிரசாரம்.

24-1-34ந்தேதி மாலை 6-30மணிக்கு காஞ்சி தாலூக்கா 61கெ. சுரோத்திரிய திருப்பருத்தி குன்றம் சேரியில் சமதர்ம பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு காஞ்சி தோழர் சமதர்ம நாஸ்திக சி. கே. குப்புசாமி அவர்கள் தலைமை வகித்து முன்னுரையாக உலகத்திலிருக்கும் அகில தொழிலாளர்களையும் பொருளாதார நெருக்கடி பீடித்திருக்கிறதென்றும் மக்களை பீடித்திருக்கும் பொருளாதார நிலையை சீர்திருத்த வேண்டுமென்றும், ஒவ்வொரு தோழருக்கும் பொருளாதாரத்தில் சரிசமத்துவம் சம பங்கு கிடைப்பதற்கே சமதர்மவாதிகள் பாடுபடவேண்டுமென்றும் பொருளாதார பிரச்சனையைத்தீர்த்து வைக்க தோழர் காந்தியவர்களால் முடியாதென்றும், பணமுடிப்பின் பெயரால் பார்ப்பனர்களும், காந்தியவாதகளும் கொள்ளையடிப்பது பித்தலாட்டமான செய்கையாகுமென்றும் பணமுடிப்பின் பித்தலாட்டங்களை மக்கள் உணருமாறு பிரசாரம் செய்யவேண்டுமென்றும்பேசிமுடித்தார்

## நாஸ்திக தொழிலாளர் கிளைச்சங்கம்.

24-1-34ந்தேதி பகல் 4-30 மணிக்கு காஞ்சிதாலூக்கா 58கெ. தண்டு செவிரி மேட்டுச்சேரியில் நாஸ்திக தொழிலாளர் கிளைச்சங்கத்தின் ஆதரவின் கீழ் காந்தி பகிஷ்காரக் கூட்டம் காஞ்சி தோழர் சி. கே. குப்புசாமி அவர்கள் தலைமையில் நடந்தது.

## தோழர் சி. கே. குப்புசாமி.

காஞ்சி சி. கே. குப்புசாமி அவர்களுக்கு ஓர் கட்டி ஏற்பட்டது அதை ஆப்ரேஷன் செய்து 12தினங்களாக வீட்டிலேயே டிரசிங் நடைபெற்று வருகிறது. டாக்டரின் உத்தரவின் பேரில் ஒரு வாரமாகக்கிராம பிரசாரம் செய்து வருகிறார்.

## பெண்மகவுக்கு பாரிசாதம்.

10-1-34ல் பத்துரோட் தமிழ் மக்கள் குடி இருப்பில் கோலாலம்பூர் செந்தல் தென்னிந்தியா விதவா விவாக சபையார்களால் தோழர் ஆவுடையப்பா வள்ளியம்மை இவர்கட்குப் பிறந்த பெண்மகவுக்கும் தோழர் மா. செ. பரிமணம் அவர்களால் பாரிசாதம் எனப் பெயரிடப்பட்டது.

## பொன்மலை சுயமரியாதைச் சங்கம்.

### உத்தியோகஸ்தர்கள் தேர்தல்.

20-1-34 மாலை 6மணிக்கு சுயமரியாதைச்சங்கக்கட்டிடத்தில் தலைவர் தோழர் எம்.வி துரைசாமி அவர்கள் தலைமையில் நிர்வாக சபை கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் நிர்வாகிகளாக கீழ்கண்டவர்களை தேர்ந்தெடுக்கப்பட்டது.

தலைவர்:—எம். வி. துரைசாமி.
உபதலைவர்:—ஜி. ஏ. சீனிவாசன்.
காரியதரிசி:—ஆர். நடராஜன்.
உதவி காரியதரிசி:—
டி. என். சண்முகம்.
பொக்கிஷதார்:—
பி. வி. ஆறுமுகம்.
நிர்வாக அங்கத்தினர்கள்:—
பி. பொன்னுசாமி, ஏ. கருப்பணன், எம். ஊர்துசாமி, எம். ஓகாத்தான், கே. ராஜரெத்தினம், எம். கே. லாலா, ஜி. ராதா, ஏ. விட்டோபா, டி. கண்ணோஜி, எஸ். ஜெயராம், டி. சி. வாசு, எஸ். சண்முகம் ஜே. கண்ணன், டி. வி. ராம்.

ரோஜா முத்தையா

## "ஜவகர்—காந்தி" வேண்டாம்.

### சட்டசபையைக் கைப்பற்றுங்கள்.

தோழர். ஜம்னதாஸ் மேத்தா அவர்கள் சமீபத்தில் பம்பாய் பொதுக்கூட்ட மொன்றில் கீழ்கண்டவாறு பேசினார்.

பண்டித ஜவஹர்லால் ஒன்றையும் திட்டமாகச் சொல்வதில்லை. பூகம்ப சேதத்தைப்பற்றி அவர் வெளியிட்ட அறிக்கையும் அவ்விதமேயிருக்கிறது. பண்டிதர் பேசுவதிலும் எழுதுவதிலும் நிர்மாண அம்ஸத்துடன் கூடிய திட்டமான விஷயங்கள் ஏதுமில்லை. இந்தியாவில் ராஜீய பூகம்பங்களால் வருந்து வோருக்கு இப்போது ஒரு விமோசனமுமில்லாதது வருந்தத்தக்கது. காந்திஜியின் தற்கால வேலைத்திட்டம் எனக்குப் பிடிக்கவில்லை. அவர் இந்தியாவில் பெரும் தொகையை வசூலிப்பதால் நாட்டிலுள்ள பலரும் அவரை ஆதரிப்பதாக நினைத்து விடக்கூடாது. மதத் தலைவர் யாராயினும் சரி இந்நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்தால் அவர் இவ்விதம் பணம் சேகரித்துவிட முடியும். இந்தியா ராஜீய விஷயத்தில் விமோசனம் அடையவேண்டுமானால் சட்டசபைப் பிரவேசமே அதற்கேற்ற வழி. பிரிட்டிஷாரை அவர்கள் ஆதிக்கத்திலுள்ள ஸ்தாபனங்களிலேயே எதிர்க்க முக்கியமான இடங்களைக் கைப்பற்றிக் கொள்ளவேண்டும்" என்றார்.

### வில்லிவாக்கம் சமதர்ம சங்கம்.

15-1-34 திங்கட்கிழமை காலை 8 மணிக்கு தோழர் ஆர். டி. அய்யாக்கண்ணு இல்லத்தில கொண்ணூர் மேலையம்பதி சமதர்ம சங்கத்தில் ஓர் விசேஷக் கூட்டமொன்று தோழர் என். சுப்ரமணியம் தலைமையில் நடைபெற்றது. சங்க அங்கத்தவர்களும் அழைப்புற்கிணங்கி வெளியூர்களிலிருந்தும் சுமார் 50 பிரமுகர்களுக்கு மேலாகவே விஜயஞ் செய்தனர்.

அதுசமயம் இவ் வருடத் தேர்தலில் நின்ற சங்கத்தின் நிர்வாக உத்தியோகஸ்தர்கள் கூட்டத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டதோடு அவர்கள் சார்பாக ஓர் தேநீர் விருந்தும் நடைபெற்றது. பின்பு தோழர் ஆர். டி. அய்யாக்கண்ணு அவர்கள் "நமது லட்சியம்" என்பதைப்பற்றி அறிய சொற்பொழிவாற்றினர். அதனை தோழர்கள். எம். முனிசாமி, ஆர்- தி. சக்கரபாணி, ப. குப்புசாமி, டி. ஜ. தியாகராஜ் எம். தர்மலிங்கம் எல். ஷண்முகம் இவர்கள் ஆதரித்துப் பேசினர் தோழர்கள் வேலாயுதம் பி. லட்சுமணன், டி. ஐ. துரைசாமி, எம். திருவீதி, கே. எஸ். துளசிங்கம் எம். துரைகண்ணு, ப. பரமானந்தன், கே. முருகேசன், எம். ஆதிமூலம் முறையே வாலிபர் கடமை என்பதைப் பற்றி சுருக்கமான சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். தோழர்கள் சலாம், தனக்கோட்டி எ. பி. பழனி இவர்கள் ஏன் சுயமரியாதை இயக்கத்தில் சேர வேண்டும் என்பது பற்றி உற்சகமாக பேசினர். பின்பு சுயமரியாதை சிறுவர்களால் சமதர்ம பாட்டுகள் பாடி தோழர். அய்யாகண்ணு அவர்களால் வந்தனோபசாரங் கூறப்பட்டு கூட்டம் 12 மணிக்கு இனிது முடிவுற்றது,

### வில்லிவாக்கம் சமதர்ம சங்கம்.

21-1-34 மாலை 6 மணிக்கு மேல் மேற்படி சங்கத்தின் மாதாந்தரக் கூட்டம் தோழர் எம். முனுசாமி தலைமையில் கூட்டப்பட்டது. அது சமயம் வரவு செலவு கணக்கை பரிசோதித்து முடிவு கட்டப்பட்டது பின்பு சங்கத்திற்கு சில திட்டங்களை அமைத்து தோழர்கள் அய்யாக்கண்ணு, வேலாயுதம், சக்கரபாணி, தியாகராஜு இவர்களால் சுயமரியாதை என்பதைப்பற்றி சொற்பொழிவு நிகழ்த்தின பின் தோழர் வே. குப்புசாமி அவர்கள் கீழ்கண்ட தீர்மானம்கொண்டு வரப்பட்டு கூட்டம் 9-30 மணிக்கு முடிவுற்றது.

தீர்மானம்.

ஏழை மக்களின் அனுதாபியும் சுயமரியாதை இயக்கத்தில் ஆற்றலுடைய வருமான தோழர் ஓ. சி. சீனிவாசன் அகால மரணத்திற்கு இக் கூட்டம் மிக வருந்துவதுடன் அவர் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறது.

### ஆதிதிராவிட சங்கம். மலாக்கா (எஸ். எஸ்) பொதுக் கூட்டம்.

4-1-34ல் வியாழக்கிழமை இரவு 7மணிக்கு தோழர்கள் பினங்கு ஜனவர்த்தமானி ஆசிரியர் எம். எஸ். மாலிம் அவர்களும் கோலாலம்பூர் செந்துல் இந்திய சுயமரியாதை சங்கத்தின் போஷகர் ம. செ. பரிமணம் அவர்களும் சொற்பொழிவு வாற்றுவார்கள் என பிரசுரிக்கப்பட்ட விளம்பரங்கள் சங்கக் கூட்டத்தில் தொங்கவிடப்பட்டிருந்தது. சீர்திருத்தக் கச்சேரி நடந்து பெருத்த கரகோஷத்தினிடையே தோழர் எம். பென்னம்பலம் அவர்கள் தலைமை வகித்து முன்னுரை நிகழ்த்தினர். பின் தோழர் எம். எஸ். மாலிம் அவர்கள் சமூக சீர்திருத்தம் என்பதுபற்றியும் தோழர் மா செ. பரிமணம் அவர்கள் விடுதலை மணி எனும் பொருள் பற்றியும் பேசினர்கள். தலைவா முடிவுரை கூறி கூட்டம் இரவு 10 மணிக்கு முடிந்தது.

### தஞ்சாவூர்.

22-1-34 மாலை6மணிக்கு ஷை சங்க கட்டிடத்தில் தோழர் டி. ஏ. ராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் கூடி அடியில் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சுயமரியாதை வீரரும், நம் நாட்டில் முதன் முதலாக தங்களுக்கென ஒரு மதமும் கடவுளும் வேண்டாம் என்று கொச்சியில் உள்ள 22லக்ஷம் ஈழ சகோதர சகோதரிகள் தீர்மானித்து தங்கள் வாழ்க்கையில் ஷை மதமும் கடவுளும் ஒன்றும் செய்வதற்கில்லை என்று, நிரூபித்துக் கட்டகாரபூதமாய் இருந்த தோழர் ஓ சி. சீனிவாசன் அவர்கள் அகால மரணமடைந்தார் என்பது கேட்டு இச் சங்கம் மிகவும் வருந்துவதோடு தனது அனுதாபத்தை அன்னாரது குடும்பத்தாருக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறது.

இச்சங்கத்தின் முதல்ஆண்டுவிழாவை பிப்ரவரிமாதம் கடைசிக்குள் நடத்தும் படியும் அதற்கு வேண்டிய பொருளை சேகரிக்கவும் ஷை சங்க நிர்வாகஸ்தர்களுக்கு அதிகாரம் கொடுக்கிறது.

### கோலாலம்பூர் செந்துல் இந்திய சுயமரியாதை சங்கம் பொதுக்கூட்டம்.

30-12-33ல் சனிக்கிழமை மாலை 6-30 மணிக்கு கோலாலம்பூர் செந்துல் இந்திய சுயமரியாதை சங்கக் கட்டிடத்தில் தோழர் தா. சு குப்புசாமி அவர்கள் தலைமையில் மாதாந்தரப் பொதுக் கூட்டம் ஆரம்பமாகிறது.

அவ்வமயம் தோழர்கள் ம. செ. பரிமணம் அவர்கள் சுயமரியாதை இயக்கம் என்பது பற்றிப் பினங் ஜன வர்த்தமாணி ஆசிரியர் தோழர் ஏம். எஸ். மாலிம் அவர்கள் இம் மலாயா தீபகல் பத்தில் முதன் முதலாக சுயமரியாதை இயக்கம் கோலாலம்பூர் செந்துல் இந்திய சுயமரியாதைச் சங்கத்தார்களே தோற்றுவித்தார்கள் என்றும் இச் சங்கத்தை மிகவும் பாராட்டுகின்றேன். என்பதோடு கோலாலம்பூர் சுயமரியாதை சங்கம் சிலாங் கூர் தமிழர் சீர்திருத்த சங்கம் இவ்விரண்டு சங்கங்கள் தோன்றிய பெருமை கோலாலம்பூர் செந்துல் இந்திய சுயமரியாதை சங்கத்திற்கே சாலவும் பொருந்தியதும் நாங்கள் தோழர்கள் அற்புதா நந்தா கே. அப்பாவுப்பன்டிதர் எஸ். எம். காலித்து நான்குபேர்களும் பினங்கில் இரண்டாவது தமியர் மகாநாடு கூட்டுவதற்காக மலாயா முழுதும் சுற்றுப்பிரயாணம் செய்து வந்த காலத்தில் கோலாலம்பூர், செந்துல் இந்திய சுயமரியாதை சங்கமே எங்களுக்குத் தக்க வசதியும், சாப்பாடு ஜாகையும் அளித்து என்றும் சந்தோஷமாய் தெரிவித்துக் கொண்டார். பி. பிச்சைமுத்து அவர்கள் வாலிபர் கடமை என்பதுபற்றிப் பேசினர். பின் தேர்தல் தீர்மானம் நிறைவேறியது தலைவர் முடிவுரை கூறி காரியதரிசி வந்தனங் கூறப்பட்டு 9மணிக்கு முடிந்தது (கௌரவ காரியதரிசி)


### விளம்பரம்.

#### ஈரோடு முனிசிபாலிட்டி

ஈரோடு முனிசிபல் மார்க்கெட்டுகளிலும் சிலாட்டர் ஹவுஸ்களிலும் 1934—35 வருஷத்திற்கு பீஸ் வசூல் செய்யும் பாத்தியதையையும், இதர கண்டிறாக்ட்களும் 5-3-34 தேதி காலை 8-30 மணிக்கு ஈரோடு முனிசிபல் கவுன்ஸில் ஹாலில் ஏலத்தில் விடப்படும். மற்ற விபரங்கள் ஆபீசில் தெரிந்துகொள்ளலாம்.

கே. ஏ. ஷேக் தாவுத்,
சேர்மன்.

# JUST ISSUED.

## RIGHT OF TEMPLE-ENTRY

By.

**P. Chidanbaram, B.A.,B.L.**
**M. L. A. Nagercoil.**

This scholarly work contains "a mine of useful information in a subject which is today engaging the attention of all India."

Nearly 300-Pages Price Re. One net only; by post Rs. 1-2-0.

*Copies can be had of:-*

**"Kudi Arasu" Publishing House,** Erode.

**R. B. P. Society Ltd.,** Erode.

**R. Darmalingam,**
General Merchant,
Cape Road, Kottar.

[5-ம்பக்கத்தொடர்ச்சி]

ஜாதி வித்தியாசங்களாலும், தேசிய வித்தியாசங்களாலும், கல்யாணக்கருத்து பயனற்றுப் போகின்றது. ஒரு ஜாதியிலிருந்து மற்றோர் ஜாதியில் கல்யாணம் செய்துகொள்ளக் கூடாதாம்! ஒரு தேசியத்தான், மற்றோர் தேசியத்தானோடு கல்யாண உறவு கொள்ளக்கூடாதாம். இவ்விரு தடைகளால், மக்களுக்குள் கல்யாணக்கூட்டுறவு குறுகியே வருகின்றது. இந்தியருக்குள் ஒரு ஜாதியான், மற்றோர் ஜதியில் பெண் கொள்ளலாகாது. ஆங்கிலேயன், இந்தியனுடன் மணம் புரியலாகாது. பிராமணன் சூத்திரனிடம் கல்யாண உறவு செய்துக்கொள்ளக் கூடாது இவ்வித மூடப்பழக்கங்களால் மக்களின் கல்யாணக்கூட்டுறவு நொருங்கிப்போகின்றது. இதனால் மனித ராசியே சிதைவுறுகின்றது Close inter-breeding, Deteriorates the race அதாவது ஒரு குடும்பத்திற்குள்ளாகிலும், அல்லது ஒரு ஜாதிக்குள்ளாகிலும், அல்லது ஒரு தேசத்திற்குள்ளாகிலும் கல்யாண உறவு கொள்ளுதல் அந்தக்குடும்பத்திற்கும், அந்த ஜாதிக்கும், அந்த தேசத்திற்கும் நாசத்தை விளைவிக்கும். இந்த அனுபவத்திற்கு நமது இந்தியர்கள் எந்த விஷயத்திலும், கடந்த ஆயிர வருஷங்களாக முன்னேற்றமடையாதிருந்து வருகின்ற காட்சியே போதுமான சாட்சி. இருநூறு வருஷங்களுக்குள் அமரிக்கர் அடைந்துள்ள நாகரீகமும், தேர்ச்சியும் மற்ற தேசங்கள் அடையாததற்குக் காரணம் பல நாட்டாரும் அந்நாட்டில் சென்று கலப்புமணம் புரிந்து கொள்வதால் என அறிக.

சீன தேசத்தார் ஒருகாலத்தில்சொற்ப நாகரீகமடைந்தவர்கள. அவர்களுக்குள் தேசியத் தலைவர்கள் தோன்றி தங்கள் தேசியத்தை உயர்த்த வேண்டி மற்ற தேசத்தவர்களைக் காட்டு மிராண்டிகளென்றும், [Barbarians] தாங்களே தெய்வ வம்சத்தோர் என்றும் [Celestials] பிதற்றிவந்தபடியால் அவர்கள் அடைந்திருந்த ஆதி நாகரீகம் அபிவிருத்தியடையாமல் பின்னடைந்தது. இவ்வாறே நமது இந்தியர்களும் க்ஷீணித்துவருகின்றனர். ஜாதிக்குள் ஜாதி பிரிவுபட்டு அந்தந்தக் குடும்பத்திற்குள்ளே கொள்வினை, கொடுப்பினைகளை மட்டுப்படுத்திவந்தமையால் இந்தியர் மற்ற நாட்டாரை விட திரேக பலவீனத்திலும் மனத்தின் வருமையிலும் குன்றியே வருகின்றனர்.

ஒருகாலத்தில் அண்டை வீட்டுக்காரனுக்கு பக்கத்து வீட்டுக்காரன் விரோதியாய் இருந்துவந்தபடியால் கலப்புமணம் தடைசெய்யப்பட்டது. அதன்பிறகு ஒரு கிராமம் இன்னோர் கிராமத்திற்கு விரோதமாய் இருந்த காலத்திலும் ஒருநாடு இன்னோர் நாடோடு பகைமை காட்டி வந்தபடியாலும் கலப்புமணம் அடக்கப்பட்டது இவ்வித வேற்றுமையால் கல்யாணமென்ற மனிதற் ஸ்தாபனம் மழுங்கியது. இந்த வேறுபட்ட சமூகங்களில் பிறந்த சந்ததியாரும் பலவீனப்பட்டும், ஒற்றுமையற்றும் ஒருவருக்கொருவர் சண்டையும், போரும் மாச்சரியமும் காட்டிவருகின்றனர். மக்களுக்குள் அகிலதேச கலப்புமணமில்லாமையாலேயே குடும்பச் சண்டைகளும், ஜாதிச் சண்டைகளும் உலகை வருத்திவருகின்றன.

சுருங்க உரைக்கில் கல்யாணம் ஆதியிலிருந்து சந்ததியை விருத்தி செய்ய ஏற்பட்ட ஓர் புராதன நடத்தையாகும்; அது ஒத்தப்பைக் கிருமியாகிய அமீபா [Amoeba] சிறு உயிராயினும் அல்லது பல பைகளடங்கிய பெரிய உயிராகிய நாமாயினும் சகல உயிர்களுக்கும் பொதுவான கல்யாணமென்ற சம்போகக் கூட்டுறவு பிரஜாவிருத்திக்கே உண்டாகியது. பசிதிரேகத்தை வளர்க்க ஏற்பட்டதைப்போல் சம்போக இச்சையும் சந்ததிவிருத்திக்கு ஏற்பட்டது. இவ்விரண்டு இச்சையும், புராதீனமானவை. இவ்விச்சைகள் உயிர் முளைத்தமுதல் இருந்தே வந்திருக்கின்றன. இவ்விரண்டு இச்சைகளால் உயிர்கள் உலகில் பரம்பரையாக நிலைத்து வந்திருக்கின்றன. இவ்விரண்டு இச்சைகளால் ஏதாகிலுமொன்று இல்லாமற்போமாகில் உயிர் உலகில் நில்லா. உயிர் உலகில் நிலைப்பதற்கு ஏற்பட்ட கல்யாண இச்சை பலவிதக் காரணங்களால் அழிவுறுகின்றது. நமது இந்திய நாட்டில் ஜாதிவித்தியாசங்களால் கல்யாணம் சிதைவுற்று நடக்கின்றது- நெருங்கிய பாத்தியத்தில் கல்யாணம் நடப்பதால் அந்த நெருங்கிய கூட்டுறவில் உண்டாகும் சந்ததியும் பலமற்று, அறிவுகுன்றி பிறக்கிறது. தேசியத்தாலும் [Free Ternal Intercourse] சுதந்திரமாக அல்ல உலக மக்களுக்குள் உண்டாகவேண்டிய கல்யாணம் அந்தந்த தேசத்தவர்களுக்குள் கட்டுண்டு அதன் பயனாக அவர்கள் சந்ததியாரும் அதிகத் தீவிரமாக விருத்தியடைவதைக் காணோம், இவ்விரு தடைகளால் உலகம் க்ஷீணித்தாலும் க்ஷீணிக்கும். இவ்விரு முட்டுக்கட்டைகள் ஒழிந்தால் அன்று தான் உலகமக்கள் சுதந்திரத்தை பெறுவார்கள்.

மதங்களின் மூடப் பழக்கங்களால் பல்லாயிர மக்கள் கல்யாணத்தை விலக்க நேரிடுகிறது. இவர்களுக்குள் இந்த விலக்கு, விலகுமேயானால் இவர்களால் எவ்வளவோ நல்லவரும் நல்லாளும் பிறந்திருப்பர்!

விதவைகள் மணம் புரிந்துகொள்ளக்கூடாதென்ற கொடூர நிபந்தனையால் இவர்களுக்குச் சந்ததி குறைந்தே வருகிறது. அனேகாயிரம் குழந்தை விதவைகள் மக்களைப் பெறும் பாக்கியம் இல்லாமலே போகின்றனர்.

முக்கியமாக உலகம் சீர்படவேண்டுமானல் கல்யாணத்தை மேற்போந்த துர்ப் பழக்கங்களிலிருந்தும், மூடமதக் கட்டுதிட்டங்களிலிருந்தும் விலகி உலகிலுள்ள ஆணும், பெண்ணும் தங்கள் இச்சைக்குத்தக்கவாறு துணைவர்களைத் தேடிக்கொண்டு ஜாதி மத நிபந்தனைகளின்றி தந்தம் குடும்பங்களை பாதுகாத்துவர வேண்டும். நல்லாள் பிறக்கும் குடி இதுவென்று தெரியும்வரை சந்ததி விருத்திக்கு யாதொரு தடையும் இருக்கப்படாது. இல் வாழ்க்கை சுதந்திரமடைந்தாலொழிய உலகம் சுகப்படாதென அறிக.

---

## அரியமங் கலத்தில் சுயமரியாதைப்பிரசாரம்.

திருச்சி அரிய மங்கலம் என்னும் கிராமத்தில் ஷையூர் சமூக சீர்திருத்த சங்க சார்பில் திருச்சி தேவதானம் சமரச சன்மார்க்க சங்கத்தாரால் 6-1-34 ல் தோழர் எம். கந்தசாமி அவர்கள் தலைமையில் சுயமரியாதையைப் பற்றி சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெற்றது. மீண்டும்ஷை இருசங்கத்தாராலும் பாப்பா குரிச்சி என்னும் கிராமத்தில் 14-1-34 மாலை தோழர் கே. மாரியப்பா அவர்கள் தலைமையில் கல்வி தற்கால நாகரீகம் நமது கடவுள்கள் முதலியவைகளைப்பற்றியும் மிக விரிவாக சுயமரியாதையைப்பற்றியும் பேசியபின் கூட்டத்தில்,

பிராமணர்களுக்கு இன்றும் ஆதிக்கம் தேடுவான் வேண்டி மதத்தின் பெயரால் தீண்டாமை ஒழிய வேண்டும் என்று பிரசாரம் செய்து தாழ்த்தப்பட்டவர்களுக்கு நன்மை பயக்குவதுபோல் நடித்துகாளை பிப்ரவரி மீ 10உ திருச்சிக்கு வரப்போகும் தோழர் காந்தியை பகிஷ்கரித்து கருப்புக் கொடி பிடிக்கவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பெற்று இரவு சுமார் 9மணிக்கு வந்தனோபசாரத்துடன் கூட்டம் முடிந்ததென சங்கக் காரியதரிசி எழுதுகிறார்.

---

## சுகாதாரப்பிரசாரம்.

14-1-34ந்தேதி மாலை 6மணிக்கு காஞ்சி தாலூக்கா 117 நெ. ஏனாத்தூர் கிராமச்சேரியில் சுகாதாரப்பொதுக்கூட்டம் நடைபெற்றது.

அதுசமயம் மிஷின் ஆஸ்பத்திரி டாக்டர் தோழர்,நேத்தானியல் மிஷின் இஸ்கூல்டீச்சர் தோழர் சி. பி.ரங்கநாதம்,சென்னை தோழர் வி.பி.எஸ். மணியம் இவர்கள் சுகாதார விஷயமாக (படங்கள்) மூலம் வியாதிகளை காண்பித்து பிரசங்கம் செய்தார்கள. கடைசியாக மேற்படி கிராமத்தில்சீர்திருத்தவாலிபர்சங்கம் ஒன்று ஸ்தாபனம் செய்யப்பட்டது. சங்கத்திற்கு 50 வாலிபத்தோழர்கள் சேர்ந்துசந்தாதொகையும் செலுத்திவிட்டனர்.

(ஒரு நிருபர்)

---

## ஸ்ரீரங்கம் சுயமரியாதைச் சங்கத்தில் பொதுக்கூட்டம்.

17-1-34ந்தேதி மாலை5-30மணிக்கு ஸ்ரீரங்கம் சுயமரியாதைக்கட்டடத்தில் தோழர் நாஸ்திக ராமன் அவர்கள் தலைமையில் ஓர்பொதுக்கூட்டம் கூடியது. உணர்ச்சியுள்ள வாலிபர்கள் ஏராளமாகக் குழுமியிருந்தார்கள். அதுசமயம்,

தோழர்கள் டி. துரைசாமி,எஸ்.ஜி. ராஜகோபாலன், எஸ். பாலகிருஷ்ணன், வி. ஸ்ரீராமுலு முதலியோர்கள் இயக்க வளர்ச்சியைப்பற்றி அருமையாக உணர்ச்சி ததும்பும் படியான சொற்பொழிவு நிகத்தினார்கள்.

பின்னர் கீழ்கண்ட வர்களை ஏகமனதாக சங்க நிர்வாகஸ்தர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

தலைவர்:— தோழர் நாஸ்திக ராமன்.

உபதலைவர்:— திரு. டி. சி, சின்னையா.

காரியதரிசி:—ஏ. வி சுந்தராஜு

உபகாரியதரிசிகள்:— தோழர்கள் வி. ஸ்ரீராமுலு, எஸ். பி. பாலகிருஷ்ணன்.

காரியக்கமிட்டிஅங்கத்தினர்கள்

தோழர்கள் எஸ். ஜி. ராஜகோபாலன், எஸ். இ. பாலகிருஷ்ணன், எம். கோவிந்தன், என் ரங்கராஜு, ஆர். மூக்கப்பன், பி.நாகமுத்து என் சின்னையா,

### நிறைவேறிய தீர்மானங்கள்.

ஜனவரி மாதம் 21ந்தேதி மாலை 3மணிக்கு காரியக் கமிட்டிக்கூட்டத்தில் சங்க சட்ட திட்டங்கள் ஏற்பாடு செய்து 28ந்தேதி பொதுக்கூட்டத்தில் விவாதிக்க வேண்டும். ஷை சங்க மேற்பார்வையாளராக தோழர் டி. துரைசாமி அவர்களைத் தேர்ந்தெடுக்கப்பட்டது. பின்னர் வி. ஸ்ரீராமுலு வந்தனோபசாரங்கூற மாலை 6-45 மணிக்கு கூட்டம்இனிது முடிந்தது.

(ஒரு நிருபர்)

---

## ஷண்முகவேல் ஞபகார்த்த வாசகசாலை, தூத்துக்குடி.

இவ்வாசகசாலையின் எட்டாவது ஆண்டுப் பூர்த்தி விழா, காரப்பேட்டையில் அமைக்கப்பெறும் கொட்டகையில் 11-2-34 ஞாயிற்றுக்கிழமையன்று கொண்டாடப்பெறும் தோழர் லெ. சோம சுந்தரமவர்கள் அவைத் தலைமை வகிக்க அன்பாய் இசைந்துள்ளார்கள்.

உபந்யாசங்கள் புரிய, திருச்சி பிரபல வர்த்தகர் தோழர் கெ. ஆ.பெ. விசுவநாதம் அவர்களும் ஈரோடு தோழர் ஆர். அன்னபூரணி அம்மையார் அவர்களும் சென்னை பிரபல வக்கீல் தோழர் கே. எம். பாலசுப்பிரமணியம் பி.ஏ., பி. எல்., அவர்களும் மற்றும் பல அறிஞர்களும் விஜயம் செய்கிறார்கள். என பெ. ரா. பெரியசாமி காரியதரிசி அறிவிக்கிறார்.

(3-பக்கத் தொடர்ச்சி)

த்தில்லாமல் காற்று தண்ணியாக விட்டால் கடவுள் வாழ்த்து வேண்டியதுதன். அப்படியில்லையே அவசியமில்லாதது அங்கே எதற்கு? கடவுள் வாழ்த்தை நம்பி காற்றின் கணக்கை மறந்து கடவுள் வாழ்த்தின் பேரில் பாரத்தைப்போட்டு விட்டால் காற்று தண்ணியாகாதே? கடவுள் வாழ்த்துஅங்கே யிருப்பது காரியக்கெடுதலல்லவா? அவ்விதம் தானே நம்மிடம் உள்ள அறிவு நூல்களும் அனுபோகத்திற்கு உதவாமல் போயிற்று. அதைப்போலவே மொழிபெயர்க்கப்படும் அறிவு நூல்களிலும் கடவுள் வாழ்த்தை விட்டு அதையும் கெடுத்து விடாதீர்களென்றே குருசாமியும் சொன்னார். அதுவுமல்லாமல் இப்பொழுது மொழிபெயர்க்கப்படும் அறிவு நூல்களைப்பற்றி நமது கடவுளுக்கு ஒன்றுமே தெரியாது. அதுவுமல்லாமல் தமிழும் தெரியாது அந்தக்கடவுள் வாழ்த்தால் என்ன பிரயோஜனம். அதுவுமல்லாமல் திருவாடுதுறை தருமபுரம் முதலிய மடாதிபதிகள் நமது கடவுளைத் தொட்டாலும் அம்பேத்கார் அருணாசலம் முதலியவர்கள் வாசப்படியை மிதித்தாலும் ஓடியோ செத்தேபோகும். நமதுகடவுள் ரசாயன சாஸ்திரத்தில் வாழ்ந்திருக்க எப்படி முடியும்?

ஒரு ராஜ குமாரனைப் பள்ளிக்கு அனுப்பினார்கள். அ,மகாராஜா ஆ, மகாராஜா, இ,மகாராஜா என்கின்ற ராஜாமரியாதை வாழ்த்துடன் உபாத்தியாயர்பாடம் சொல்லிகொடுத்தார். அரிச்சுவடிவந்தது எழுத்தைக் கூட்டிப்படிக்கும்பெயர்ச்சுவடி படிக்கவேண்டும் அதைக் சொல்லிக்கொடுக்க உபாத்தியார் ஆரம்பித்து அ,மகாராஜா, து மகாரா என்று சொல்லி பதமாகக் கூட்டுகையில் அ,மகாராஜ துமகாராஜா என்று வருகிறதேயல்லாமல் அ, து, அது என்று வருவதில்லை. பார்த்தார். உபாத்தியாயர் எழுத்து பதமாகச் சேருவதில்லை. ராஜ குமாரனுக்குப் பெயர் சுவடியும் வருவதில்லை பல பண்டிதர்கள் உபாத்தியாயர்களாக வந்தார்கள் கடவுளுக்குப் பூசை போட்டார்கள் டையனுக்கு திருஷ்டி சுற்றினார்கள் தானதருமம் வழங்கினார்கள் பழனிக்குப் பால் காவடியும் திருப்பதிக்கு உண்டியலும் நேர்ந்தார்கள் ஜோதிடனைக் கூப்பிட்டார்கள். புரோகிதரும் வந்தார். யாகங்கள் செய்யப்பட்டன. இராஜாத்தி வெள்ளிக்கிழமையும் ராஜா திங்கட்கிழமையும் மந்திரி சனிக்கிழமையும் விரதமிருந்தார்கள். என்ன செய்தும் பையனுக்கு பெயர் சுவடி வருவதில்லை எழுத்தும் பதமாகச் சேருவதுமில்லை. எழுத்துக்கு மத்தியில் மகாராஜா இருந்துகொண்டிருப்பதால் எழுத்து பதமாகச் சேருவதில்லை என்பதைப் பலர் உணர்ந்திருந்தாலும் மகாராஜாவை விட்டுச் சொல்லுவது மரியாதையல்லவே மகாராஜா இல்லாமல் எந்தக் காரியம்தான் நடக்கும் அதைச் சொல்லி நாமேன் பழியைத் தேடிக்கொள்ள வேண்டும் எல்லாம் அதிஷ்டம் போல் ஆகிறது. பதம் சேர்ந்தால் தான் ராஜகுமாரனே என்று பலவாறு பேசி எல்லாரும் சும்மா இருந்து விட்டார்கள், பார்த்தான் திருவாழத்தான் ராஜ சபைக்குப் போய் தன் விகடத்தால் ராஜாவைச் சந்தோஷப்படுத்தினான் ராஜாவிற்குச் சந்தோஷம் வந்து உனக்கு என்னவேண்டுமென்று கேட்டார். சின்னமகாராஜா படிக்கும் பள்ளியில் மகாராஜாவென்று எந்த உபாத்தியாயர்கள் சொல்லுகிறார்களோ அவர்கள் தலையை வெட்டி விடுவதாக உத்தரவு அனுப்பவேண்டும் என்று கேட்டுக்கொண்டார், அப்படியே உத்தரவும் அனுப்பப்பட்டது. மகாராஜாவென்று சொல்லுவதை உபாத்தியாயர் விட்டுவிட்டார், எழுத்துக்கு மத்தியிலிருந்த மகாராஜாவும் போய்விட்டார் எழுத்தும் பதமாயிற்று. ராஜகுமாரனுக்குப் பெயர்ச்சுவடியும் வந்தது என்பதுபோல கடவுள் வாழ்த்து இலக்கியத்தையும் விஷயத்தோடு சேராமல் கெடுத்துவிடும்.

தமிழ் தெரியாத கடவுளிருப்பதாகவே நமது தேவ பூசை பிரார்த்தனை கருமகிரியைகளெல்லாம் நடந்து வருகின்றன. நமது கடவுள் நேராகத் தமிழ் இருக்கும் இடம் செல்ல வேறே வழியில்லை. என்பது தீர்மானப்பட்டிருக்கிறது. தமிழ் தேவபாஷை கடவுளுக்குத் தெரிந்த பாஷை என்பதை நமது ஆச்சாரி, குரு, புரோகிதன், அர்ச்சகன் முதலியவர்கள் ஒத்துக்கொள்ளவுமில்லை மொழி பெயர்க்கப்படும் நூல்களில் கடவுள் வாழ்த்து தமிழ் தெரியாத கடவுளுக்கு எப்படி தெரியும். அதையும் கடவுள் தெரிந்த பாஷையில் தானே மொழிபெயர்க்கச் சொல்ல வேண்டும். அதற்கு தமிழன்பர்கள் கடாட்சம் வேண்டும்இத்தனை கஷ்டங்களிருப்பதை யெல்லாம் தெரிந்துதான் குருசாமி கடவுள் வாழ்த்து வேண்டாமென்றார்.

---

## வாசகசாலை திறப்புவிழா.

### தோழர், சி. டி. நாயகம் அவர்களால் திறக்கப்பட்டது.

சென்ற புதன் கிழமை (17-1-34) மாலை 5மணிக்கு மயிலாப்பூர் சுயமரியாதை சங்கத்தின் ஆதரவில் சுயமரியாதை வாசகசாலையைத் தோழர் சி. டி. நாயகம் அவர்கள்திறந்துவைத்தார்கள். ஷை விழாவிற்கு ஏராளமான ஜனங்கள் விஜயம் செய்திருந்தார்கள். தோழர்கள் எம். சிங்காரவேலு பி. ஏ. பி. எல்., எஸ். குருசாமி பி. ஏ. துஞ்சிதம் பி. ஏ. எல். டி. சுயமரியாதை இளைஞர் மன்றத்தைச்சேர்ந்த எஸ். ரங்கநாதம்,டி.ராதாகிருஷ்ணன், எஸ். சதாசிவம், டி. ரங்கநாதம், சென்னை சுயமரியாதை சங்கத்தைச்சேர்ந்த சி. ஆர். அமிர்தவாசகம், ஏழுமலை, சுயஞானதாஸ், லூயிஸ், என். எஸ். தம்கருபன், சி. செங்கல்வராயன், முதலிய அன்டர்களும் திரு. சி. டி. நாயகம் மனைவியார் எஸ். தருமலிங்கநாயகம், சுப்பிரமணியம் முதலியவர்களும் இவ் விழாவிற்கு விஜயம் செய்திருந்தார்கள்.

ஷை கூட்டத்திற்கு தோழர் ம. சிங்காரவேலு அவர்கள் தலைமைவகித்து ஏழை மக்களின் பரிதாபகரமான நிலைமையைப்பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்திய பின் தோழர் சி. டி. நாயகம் அவர்கள் பார்ப்பனர் சூழ்ச்சிகளையும் நம்மவர்களின் குருட்டு நம்பிக்கையையும் விலக்கி சுமார் ஒரு மணி நேரம் வரையில் சொற்பொழிவு செய்து வாசகசாலையைத் திறந்து வைத்தார்கள். பிறகு தோழர் குருசாமி அவர்கள் சுயமரியாதை இயக்கத்தின் நோக்கம் என்பது பற்றி ஒரு பெரிய விரிவுரை நிகழ்த்தினார். முடிவுரைக்குப்பிறகு வந்தனோபசாரம் சொல்லப்பட்டு 7மணிக்கு கூட்டம் கலைந்ததெனகாரியதரிசிஎழுதுகிறார்.

---

## திருவண்ணாமலை ஆதிதிராவிட வாலிப சங்கம்.

17-1-34 புதன்கிழமை இரவு 7-30க்கு இந்நகர் பெரிய ஆதிதிராவிடர்வீதியில் வாலிபர்களின் சங்கசார்பாகக்கூடிய கூட்டத்திற்கு ஆர், ஆறுமுகம் ஹெட்மாஸ்டர் அவர்கள் தலைமை வகித்தார். ஆண், பெண் சுமார் 200 பேருக்கு அதிகமாகவே கூடியிருந்தனர்.

அதுபோது தோழர்கள் எல் ராஜமணி, ஜீ. ஆதிலக்ஷிமி, குண பூஷணம் இவர்களால் சுயமரியாதைப் பாடல்கள் பாடப்பட்டது. பிறகு தோழர்கள் பி.முனுசாமி, எ. ஆசீர்வாதம், இவர்களால் பகுத்தறிவு என்பதைப்பற்றியும், தோழர்கள் பி. எஸ். சந்தானம் எல். ராஜமணியம்மாள் இவர்கள் பெண்கல்வி, சுதந்தரம் என்பதைப் பொருளாகக்கொண்டு சிலவு தாரணங்களுடன்விளக்கிப்பேசினார்கள்.

பின்னர் ஆர். சீனிவாசன் என்பரால் முன்னேற்றம் என்பதைப்பற்றியும் ஜி. கிருஷ்ணசாமி என்பவரால் வைதீகம் என்பதை பற்றியும், ஆதிதிராவிடர்கள் இந்துக்களா? என்பதைப் பற்றி வி. கிருஷ்ணசாமி உபாத்தியாயராலும் மிகவும் உருக்கமாகவும் பேசினார்கள். எ. தேவசகாயம், எம். முருகேசன் என்னும் மாணவர்களால் சு. ம. கீதங்கள் பாடப்பட்டன.

முடிவுரையாக தலைவர் அவர்கள் பெண் கல்வி அவசியம் வேண்டுமென்பதை மிகவும் வற்புறுத்தி பேசிய பின் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இரவு 12 மணிக்கு இனிது முடிந்தது.

---

## பட்டாரியர் சங்கம், கோட்டாறு.

நிகழும் தைமீ 21உ ஞாயிற்றுக்கிழமை இரவு 7மணிக்கு ருத்திரபதி விநாயகர் சந்நிதியில் தோழர் வி. சுப்பையா அவர்கள்தலைமையில் நடைபெற்ற ஷை சங்கப்பொதுக்கூட்டத்தில் அடியிற் கண்ட தீர்மானம் தோழர் இ பலவேசம் அவர்களால் பிரரேபிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது:—

"தோழர் காந்தி அவர்கள் தீண்டாமை விலக்கு என்ற பேரால் வருணாச்சிரம மதப்பிரசாரம் செய்வதற்காகத்தென்னாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்வதை இச்சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது."

தீர்மானத்தை ஆதரித்து தலைவர் வி. சுப்பையா அவர்களும், தோழர்கள் எஸ். கிருஷ்ணன், கே. நல்லபெருமாள் ஆகியோரும் பேசினர்.

---

நெ. 16

## மணமகன் தேவை

16வயதுடையவரும், 5வகுப்புவரை பயின்றவரும், சைவ வேளாளவகுப்பைச் சேர்ந்தவரும், மாநிறமும் தக்க உடலமைப்புமுடைய கன்னிப்பெண்ணுக்குமணமகன் தேவை.

மணமகன்:— 25வயதிற்குட்பட்டவரும், படித்து உத்தியோகத்திலோ அல்லது வியாபாரத்திலோ மாதம் 25ரூபாய் சம்பாத்திய முடையவரும் வேளாளர், நாயுடு, ரெட்டியார் ஆகிய வகுப்பைச் சார்ந்தவரும், திடகாத்திர சரீர முடையவராகவும் இருத்தல் வேண்டும்.

---

நெ. 17

## மணமகள் தேவை

21 வயதினையுடையவரும் ஹையர் கிரேடும், தேகப்பயிற்சி டிரெயினிங்கும் பாஸ்செய்தவரும் ஹெட்மாஸ்டர் வேலையில்மாத வருவாய் ரூபாய் 25யுடையவரும், மாநிறமும் 5,6அடி உயரமுள்ளவரும்மணமாகதவரும் கம்பீரத்தோற்றமுள்ள வருமான ஓர்மகமதிய வாலிபருக்குமணமகள் தேவை.

மணமகள்:—18வயதிற்குட்பட்டவராகியும் ஹையர் கிரேட் பாஸ்செய்தவராகவோ அல்லது மருத்துவ டிரெயினிங் பாஸ் செய்தவராகவோ இருப்பவராயும் விதவை அல்லதுகன்னியராகவும் எம்மதச் சாதியினராகவும் வனப்பினராயும் இருத்தல் வேண்டும்.

காரியதரிசி தமிழ்நாடு புரோகித மறுப்புச்சங்கம் நெ. 22, பாளையம் பஜார் உறையூர், (திருச்சி)

"நவசக்தி" ஆசிரியர் தோழர் திரு. வி.

## கலியாணசுந்தரமுதலியார் அவர்களால்

—:0:—

தமிழ் மணம், விடுதலை, பெண்ணுரிமை, தீண்டாமை ஒழிதல், சமரசம், சன்மார்க்கம் ஆகியவைகள் ததும்ப எழுதப்பட்ட அரிய அந்நூல்கள்:—

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை | ... | 2 | 0 |
| தமிழ்த் தென்றல் | ... | 2 | 0 |
| முருகன் அல்லது அழகு | ... | 1 | 0 |
| இராமலிங்கசுவாமிகள் திருவுள்ளம் | ... | 0 | 12 |
| மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் | ... | 2 | 8 |
| என்கடன் பணி செய்து கிடப்பதே | ... | 0 | 8 |
| சைவத்தின் சமரசம் | ... | 0 | 8 |
| சைவத்திறவு | ... | 0 | 8 |
| கடவுள் காட்சியும் தாயுமானாரும் | ... | 0 | 4 |
| தமிழ் நூல்களில் பௌத்தம் | ... | 0 | 4 |
| சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து | ... | 0 | 8 |
| நாயன்மார் | ... | 0 | 3 |
| சைவ சமய சாரம் | ... | 0 | 1 |
| இமயமலை அல்லது தியானம் | ... | 0 | 6 |
| தமிழ் நாடும் நம்மாழ்வாரும் | ... | 0 | 4 |
| உரிமைவேட்கை அல்லது நாட்டுப்பாடல் | ... | 0 | 4 |
| முருகன் அருள் வேட்டல் | ... | 0 | 4 |

இந்நூல்கள் எல்லாவற்றையும் ஒரே காலத்தில் வாங்குவோர்க்குத் தபாற் செலவின்றி மணியார்டர் கமிஷன் கழித்து வி. பி-யில் அனுப்பப்படும்.

முருகவேள் புத்தகசாலை,
12, கணபதி முதலித்தெரு, இராயப்பேட்டை, சென்னை.

## விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | சிதம்பர ரகசியம் ... | 0—8—0 |
| 2. | சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை | 0—4—0 |
| 3. | மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை | 0—8—0 |
| 4. | பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை | 0—6—0 |
| 5. | மோட்டார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோக பயிற்சி முறையும் ... | 2—0—0 |
| 8. | ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் விலை ... ... | 0—6—0 |
| | சுயராஜ்யம் யாருக்கு ... | 0—1—0 |
| | சாமிகளின் அடிமைகள் ... | 0—12—0 |
| | சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ... | 2—0—0 |

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 7 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

| | | |
|---|---|---|
| ஒவ்வொரு வருஷமாலை கிரயம் | ரூ. | 4—0—0 |
| ரிவோல்ட்டு ஒருவருஷமாலை செய்தது கிரயம் | ரூ. | 4—0—0 |

விலாசம்:—

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.


## அமுத சுரபி.

### சிறந்த தாதுவிருத்தி இலேகியம்

### உயர்ந்த காயகற்பகம்.

இஃது ஆண் பெண் இருபாலருக்கும் எவ்வகைக் காரணங்களினாலாவது இரத்தம் கெட்டு வலிவு குறைந்து, நரம்புகள் தளர்ச்சியடைந்து இந்திரியக் கலிவு, வெட்டைச்சூடு, [illegible] கழிதல், விரைவிற் கழிதல், விருப்பின்மை முதலிய துன்பங்களால் புத்திரப்பேற்றுக்கு வகையின்றி வருந்துவோர்களுக்கு அத்தகைய துன்பங்களை நீக்கி அமுதமயமான உடம்பையும், பலத்தையும், நல்லறிவையும் அழகையும், நீண்ட ஆயுளையும், மக்கட் பேற்றையும், பொன்போன்ற மேனியையும் அமுத சுரபி தருமென்பதில் யாதொரு ஐயமுமில்லை. இது சித்தர்களின் முறை.

40-நாள் மருந்து ரூ. 3—8—0.
20-நாள் மருந்து ரூ. 1—14—0.

மானேஜர்:—

பண்டிட் ஆனந்தம்வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி, சென்னை.

சுகவழ் கேட்லாக் இனாம்.



### வியாதியா?

பயப்படவேண்டாம்.

எங்களிடத்தில் சகல வியாதிகளுக்கும் உயர்ந்த பஸ்ப செந்தூர வகைகள் கிடைக்கும். 30 வருஷகாலமாக அனுபோக முள்ளது. உத்திரவாதமுள்ளது. ஆண் பெண், வயது, வியாதி, உற்பத்தி காலம், தெரிந்தவரையில் எழுதி மருந்தை வரவழைத்துச்சாப்பிடுங்கள்; சுகமாகும்.

தாம்பரபஸ்பம் குஷ்ட மேகங்களுக்குஅனுபானத்துடன் ½ மண்டலம் பாதி விலைப்படி ரூ. 12—8—0.

தாளக பஸ்பம் க்ஷயரோகங்களுக்கு அனுபானத்துடன் மண்டலம் ரூ. 12—8—0.

ஆர். எம். நாராயணசாமி,
தன்மவந்திரிஔஷதசாலை பழனி.S.I


### "குடி அரசு" புதிய வால்யூம்.

—✱—

நமது "குடி அரசு" பத்திரிகையின் 8வது வருஷ மலர்கள் ஒன்றசேர்க்கப்பட்டு புதிய வால்யூம் மிக்க அழகாக பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

உடனே முந்துங்கள்.

விலை ரூபாய் நான்கு

"புரட்சி" சந்தாதாரர்களுக்கு விலை ரூபாய் மூன்று.

தபால் செலவு வேறு.

பணம் முன்னதாக [illegible] விடவேண்டும். [illegible] டால் கவனிக்கப்பட [illegible]

மானேஜர்,
குடி அரசு பதிப்பகம், [illegible]


### தீராத வெட்டை நோய்க்கு [illegible]

### உத்திரவாதம்.

11-நாட்களில் குணமாகும். 22 மாத்திரை [illegible] த பாட்டில் 1-க்கு ரூ. 5—0—0. (வி. பி. [illegible] கம்) எவ்வித பத்தியமும் கிடையாது.

விலாசம்:— நா. நமசிவாயம், (செட்டி[illegible]
தென்னூர்த்தி [illegible]
திருக்கோவ[illegible]

# குடி அரசு பதிப்பக புஸ்தகங்கள்.

**மதமும், லெனினும்.**
விலை அணு 0—4—0

**கைவல்யம் அல்லது கலைக்கியானம்.**

**பொதுவுடமைத்தத்துவங்கள்.**
விலை அணு 0—3—0.

**இராமாயண ஆராய்ச்சி.**
முதற்பாகம் பாலகாண்டம் அணு. 0—4—0
இரண்டாம் பாகம் அயோததியா காண்டம் அணு. 0—8—0

**ஞானசூரியன்.**
பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணு. 0—4—0

**ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.**
இதன் விலை அணு. 0—2—0.

**தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.**
இதன் விலை அணு 0—3—0

**பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.**
இதன் விலை அணு 0—4—0

**மேயோகூற்று மெய்யா? பொய்யா?**
இதன் விலை அணு 0—3—0

**அகத்தியர் ஆராய்ச்சி.**
இதன் விலை அணு 0—2—0

**ரஷ்யாவைப் பற்றி பெர்னாட்ஷா.**
விலை அணு 0—1—0.

**கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்!**
இதன் விலை அணு 0 2—0

**கடவுளும், பிரபஞ்சமும்.**
இதன் விலை அணு 0—4—0.

**சத்தியாக்கிரகமா சண்டித்தனமா?**
விலை பை. 0—0—3

**இராமசாமியின் இலங்கை உபன்யாசம்.**
விலை பை. 0—0—6

**இந்தியாவின் குறைபாடுகள்.**
டாக்டர் பராஞ்சிபை எழுதியது விலை அணு. 0—8—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணு. 0—6—0
...ux of the Indian Problem இங்கிலீஷ் விலை ரூ. 1—0—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணு. 0—8—0

**...ராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.**
விலை அணு. 0—2—0

**...யாதைப்பாடல்.**
விலை அணு 0—2—0.

**...ட நம்பிக்கை (இங்கிலீஷ்)**
விலை அணு 0—2—0

**...அரசு புத்தகாலயம், ஈரோடு.**

## பகுத்தறிவு நூற்பதிப்புக்கழக வெளியீடுகள்.

**பெண் ஏன் அடிமையானாள்?**

இந்நூல் ஈ. வெ. இராமசாமி அவர்களால் கற்பு, காதல், விபசாரம், கைம்மை, மறுமணம், விவாகரத்து, கர்ப்பத்தடை, சொத்துரிமை ஆகியவைகளை தர்க்கரீதியாய் ஆராய்ந்து எழுதப்பட்ட தொகுப்பாகும்.

விலை அணு 5.

**முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை.**

இந்நூல் சார்லஸ் T. கோர்ஹாம் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு K. M. பாலசுப்பிரமணியம் B. A. B. L. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இதில் மக்களின் முன்னேற்றத்தையும், விஞ்ஞான வளர்ச்சியையும், மதம் எவ்வாறு தடுத்து வந்தது என்பதைச் சரித்திர பூர்வமாய் எடுத்தககாட்டப்பட்டிருக்கிறது.

விலை அணு 5.

**நான் ஏன் கிறிஸ்தவனல்ல?**

இந்நூல் பெர்ட்டிரண்ட் ரசல் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு S. குருசாமி B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இது கடவுளைப்பற்றியும், கிறிஸ்துவைப்பற்றியும் தெள்ளத்தெளிய ஆராய்ந்து எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல்.

விலை அணு 3.

**மதம் என்றால் என்ன?**

இந்நூல் ராபர்ட் G. இங்கர்சால் அவர்களால் ஆங்கிலத்தில் இயற்றப்பட்டு தோழர் S. லட்சுமிரதன்பாரதி M. A., B. L., அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூலில் மதங்களின் தன்மையையும், கடவுளின் தன்மையையும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

விலை அணு 2.

புத்தகங்கள் வேண்டுவோர் புத்தகம் ஒவ்வொன்றிற்கும் ஒரு அணு ஸ்டாம்பு கூடுதலாக அனுப்பவேண்டும்.

விலாசம்:—

**பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட், ஈரோடு.**

**முன்னேற்றம்.**

பிரிட்டீஷ் மலேயா நாடுகளில் முதன்மை வாய்ந்த நமது சுயமரியாதை இயக்கப்பத்திரிகை.

மலாய் நாட்டிற்கு வருட சந்தா ஷில்லிங். 5—0—0.

வெளிநாடுகளுக்கு ரூ. 8-0-0

**'பிரசண்ட மாருதம்'**

சுயமரியாதை இயக்கக்கொள்கைகளை அடிப்படையாகக்கொண்ட சிறந்த மாதப்பத்திரிகை
உள்நாடுவருடசந்தா ரூ. 1—0—0
வெளிநாடு ........ ரூ. 1—8—0
தனிப்பிரதி 1½ அணு
விலாசம்:—
மானேஜர்.
பிரசண்டமாருதம் ஈரோடு.

...க்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு தோழர் சா. ரா. கண்ணம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.